வெளியீடு: கஎக

திருக்குறள்
பொருள் விளக்கம்

ஆசிரியர்:
செல்லூர்க்கிழார்
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: March, 1959.

TIRUKKURAL PORUL VILAKKAM

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1100.

பதிப்புரை

நம் நாட்டுக்குத் தெய்வத் திருமறையாய்த் திகழ்வது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் நூலே. உலகுக்கெல்லாம் பொது மறையாய் உயர்ந்து விளங்குவதும் இதுவே. தமிழ் நாட்டின் புகழை அயல்நாடுகளிலும் பரப்பிக் குன்றின்மேலிட்ட விளக்கென நின்று நிலவுவதும் இதுவே. வள்ளுவரை உலகத்துக்கெல்லாம் பயன்படும்படி பிறப்பித்த புகழ் தமிழ்நாட்டிற்கே யுரியது. பாரதியார் "வள்ளுவன்றன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு" என நாட்டைச் சிறப்பித்தார். இத்திருக்குறள் என்னும் நூல் எந்நாட்டிற்கும் உரியது; எம்மொழிக்கும் உரியது; எக்குலத்தார்க்கும் உரியது; எம்மதத்தார்க்கும் உரியது; எக்காலத்திற்கும் உரியது. நாடு, மொழி, குலம், மதம், காலம் எல்லாவற்றிற்கும் பொதுவாய் உலக மக்கள் யாவர்க்கும் வாழ்வுக்கு வழிகாட்டியாய்த் தோன்றி இரண்டாயிரம் யாண்டுகளாகியும் மங்காமல் மறையாமல் புதுமையாக ஒளிர்கின்றது இந்நூல்.

இத் திருக்குறள் நூலுக்கு நூலாசிரியர் காலமுதல் உரை கண்டவர் பலர். இன்று காண்கின்றவரும் பலர்; இனிக் காண்பாரும் பலராவர். உரையாசிரியர்களிற் பரிமேலழகர் வரைந்தவுரையே பெரும்பாலும் புலவர்களாற் போற்றப்

படுகின்றது. பலர் கண்ட உரையையும் தள்ளித் தமது குறிக்கோளுக்கு இயைய உரை யெழு தியவர் சிலர். பலர் உரைகளானும் பொருள் எளிதில் விளங்கவில்லை யென்று கருதி உரை நடையாகத் திருக்குறட் பொருளை வரைந்து நூலாக வெளியிட்டவரும் பலர். ஒவ்வோர் அதி காரத்திலும் ஒரு குறளைத் தேர்ந்தெடுத்து அதற் குரிய கதையை முன்னிரண்டடியில் வைத்துப் பின்னிரண்டடியில் குறட்பாவையே வரைந்து நேரிசை வெண்பாவாக்கிச் சோமேசர் முதுமொழி வெண்பா, இரங்கேச வெண்பா, சிவசிவவெண்பா என்பனபோன்ற புதுப்பெயர் புனைந்த புலவரும் சிலர். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பா வுக்கும் இயைந்த கதை தேடிப் பாடி "குமரேச வெண்பா" எனப் பெயர் கொடுத்தவர் ஒருவர். இங்ஙனம் திருக்குறள் நீதியைப் பரப்பி மக்கள் வாழ்வுக்கு வழிவகைகள் நாடியே வருகின்றனர் நம் புலவர் பெருமக்கள். இந்நூலை ஒட்டிய ஆராய்ச்சியுரையும், விரிவுரையும், கதையும், கருத் தும், விளக்கமும் எழுதப் பெற்ற நூல்கள் எண் ணிலடங்கா; ஏட்டில் வரைய இடம்போதா; எனக் காணக்கிடக்கின்றன.

இம் முறையில் எழுந்த நூல்களுள் ஒன்றாகும் "திருக்குறள் பொருள் விளக்கம்" என்னும் இந் நூல். இதனை இயற்றியவர் செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை என்பவர். இவர் புல வருட் சிறந்தவராக மதிக்கப்படும் கல்வி கேள்வி யுடையார். இக் கழகத்திற் சில வாண்டுகள் பணி புரிந்து சில இலக்கிய நூல்களுக்கு உரை

வரைந் துதவியவர். இம்மாண்பமைந்த புலவ ரால் இயற்றப்பட்ட இந்நூல் சிறந்தது என்பது சொல்லாமலே விளங்கும். இவர் ஒவ்வோர் அதி காரத்திலும் உள்ள பத்துக்குறட்பாவின் பொரு ளையும் சுருக்கி ஒவ்வொரு பக்கத்தின் முடியுமாறு எளிய இனிய உரைநடையிற் பொருளை விளக்கு கின்றார். குறளின் பொருளை எளிதின் உணர்ந்து இன்புறுவதற்குத் தக்க நூல் இதுவே. விரிக்க வேண்டிய இடத்தில் விரித்தும் சுருக்கவேண்டிய இடத்திற் சுருக்கியும் உரை வரைந்து செல்லும் முறை வியத்தற் குரியதாம். இந்நூல் கழகத்தின் வாயிலாக முதலில் வெளிவருகின்றது. திருக்குறட் பொருள்களையும் கருத்துக்களையும் எங்கும் பரப்பு வது கழகத்தின் நோக்கம் என்பது எவரும் அறிந்த உண்மை. ஆதலால் இதனையும் வெளி யிடத் துணிந்தேம்.

ஆதலால் தமிழன்பர்கள் பலரும் எமது நோக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் துணையாக இதனை வாங்கியும், வாங்குவித்தும் நற்பயன் பெறுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

திருக்குறள்
பொருள் விளக்கம்

1. அறத்துப்பால்

க. கடவுள் வாழ்த்து

எல்லா மொழி எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் ஒன்றே தலைமையானது; அதுபோல, உலகங்களெல்லாம் இறைவன் ஒருவனையே தலைவனாகக் கொண்டுள்ளன.

அத்தகைய இறைவனை வணங்காதிருப்பாரானால் ஒருவர் கற்ற கல்வியாலாகும் பயன் ஒன்றுமில்லை; அன்பரின் நெஞ்சத்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இறைவன் திருவடிகளை இடைவிடாமல் நினைப்பவர்களே இன்ப உலகத்தில் நிலைபெற்று வாழ்பவராவார். விருப்பு வெறுப் பற்ற கடவுளின் திருவடிகளைச் சார்ந்து நினைப்பவர்கட்கு எப்போதும் எந்த இடத்தும் துன்பம் வாராது; இறைவனது நிலைத்த புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவ ரிடம் அறியாத தன்மையால் உண்டாகும் நல்வினை தீவினைகள் சேர்வதில்லை.

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறி களின் வழியாக உண்டாகும் ஆசைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், எஞ்ஞான்றும் நிலைபெற்ற நல்ல வாழ்க்கையைப் பெறுவர்.

தனக்கு ஒப்பில்லாத இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்தவர்களுக்கேயன்றி, மற்றையோர்க்குத் தம் மனக் கவலையை மாற்ற முடியாது. அறக்கடலாகிய இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்க்கல்லாமல் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது. கேட்காத காது, பார்வையிழந்த கண் முதலிய பொறிகள் பயனில்லாதன போல இறைவன் திருவடிகளை வணங்காத தலைகள் பயனற்றவாகும். பிறவி யென்னும் கடலை இறைவன் திருவடிப்புணையைச் சேர்ந்தோரே கடப்பர், மற்றையோர்க்கு அதனைக் கடக்கமுடியாது.

உ. வான் சிறப்பு

உலகில் மழை பெய்ய உயிர்கள் வாழ்ந்து வருவதால் அதனை அந்த உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணர்ந்து கொள்ளத் தக்கதாகும். அம்மழையானது உணவை உண்பார்க்கு நன்மையான உணவுகளை உண்டாக்கித் தருவதல்லாமல் தானும் உணவாகப் பயன்படும் தன்மையு முடையது.

மழை பெய்யாமல் தடைப்படுமானால் பெரிய கடல் சூழ்ந்த உலகத்தில் உயிர்களுக்குப் பசி வயிற்றில் நிலைத்துநின்று வருத்தத்தைக் கொடுக்கும்; மழை யாகிய வருவாய் குறையுமானால் உழவுத் தொழில் புரிவோர் ஏரைக்கொண்டு உழுதொழில் செய்யமாட்டார். மழை ஒன்றே மக்களின் வாழ்வைக் கெடுப்பதும், அவ்வாறு கெட்டுப் போனவர்களை மேலே உயர் மேன்மைப் படுத்து வதுமாகும். வான் வழியாக நின்று மழைபெய்தாலல்லா மல், உலகில் பச்சைப் புல்களின் தலையைக்கூட நாம் காண முடியாது.

நீர் மிக்க பெரிய கடல்கூட அக்கடல் நீரையே முகந்து சென்று மேகம் மழையாகப் பொழியாவிட்டால் அக்கடலின் வளப்பமும் குறையும். இவ்வுலகில் கடவுளர்க் குச் செய்கின்ற நாள் வழிபாடும் திருவிழாக்களும் மழை பெய்யாவிட்டால் நடவா. பிறர்க்குக் கொடுக்கும் ஈகை யும் தனக்காகச் செய்யும் தவமும் மழையில்லாவிட்டால் நிலைபெறாது.

நீரில்லாமல் உலகச் செயல்கள் எதுவுமே நடை பெறாது, அதுபோல மழை பெய்யாவிட்டால் எந்தக் காரியமும் செய்ய முடியாது.

உலகிற்கு மழையே சிறந்தது என்பதாம்.

௩. நீத்தார் பெருமை

ஒழுக்க முறையில் கடைப்பிடித்து நின்று பற்றை விட்டவர்களின் பெருமையையே சிறந்ததாகப் போற்றி விளக்கிச் சொல்வதே நூல்களின் துணிவாகும். அப்படித் துறந்தவர்களின் பெருமையை விளக்கிச் சொல்வதானல், உலகில் பிறந்திறந்தவர்களை எண்ணிக் கணக்கிட்டாற் போன்றதாகும்.

பிறப்பு இறப்பென்னும் இரண்டினது தன்மையை யறிந்து பற்றை விட்டார்களின் பெருமையே உலகிற் சிறந்ததாகும். அறிவு என்னும் படைக்கலத்தால் ஐம்புல ஆசைகளை அடக்குவோனே மேலான வீட்டுலகத்துக்கு விதை போல் சிறந்தவனுவான். ஐம்புலனுல் உண்டாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு வானுலகத் தலைவனுகிய இந்திரனே சான்ருக அமைவான். ஆகவே, பெரியோர் செய்தற்கரிய உயர்ந்த செயல்களையே செய்வர்; சிறியாரோ, செய்தற்கு எளிமையான செயல்களையே செய்வர்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று சொல்லப் படுகின்ற ஐந்து உணர்ச்சிகளின் கூறுபாடுகளை அறிய வல்லவனிடத்தே இவ்வுலகம் அடங்கிக் கிடப்பதாகும். அத்தகையோரது பெருமையை உலகத்தில் அவர்களின் மறை மொழிகளே யாவருக்கும் தெரியப்படுத்தும்; நல்ல குணம் என்னும் மலைமேல் ஏறி உயர்ந்து நின்ற பெரியோர் களிடத்து உண்டாம் சினம், ஒரு கணப் பொழுதே நிற்பது; அக்காலத்துக்குள் கூட அச் சினத்தின் ஆற்றலை எவராலும் தாங்க முடியாது. ஆதலால், எல்லா உயிர்களிடத்தும் அருள் உள்ளவர் என்போர், இப் பற்றற்ற பெரியோர்களே! ஏனெனின்? எல்லா உயிர் களிடத்தும் வேறுபாடு கருதாமல் நல்ல இரக்கக் குணத்தை மேற்கொண்டிருப்பதால். ஆகலான், உலகில் துறந்தவரே சிறந்தவர் என்பதாம்.

௩. அறன் வலியுறுத்தல்

அறம் ஒருவனுக்குச் சிறப்பையும் தரும்; செல்வத்தையும் தரும்; ஆகவே யாருக்கும் அறத்தைவிடச் சிறந்தது வேறென்ன இருக்கின்றது? ஒருவனுடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது வேறொன்றும் இல்லை; அதை மறந்துவிட்டு இருப்பதைவிடக் கெடுதிதருவது வேறொன்றும் இல்லை. ஆதலால் முடிந்த வரையில் ஓயாமல் தனக்குச் செல்லக்கூடிய இடங்களிலெல்லாம் ஒருவன் அறம் செய்தல் வேண்டும்.

அவ்வாறு அறஞ் செய்யுங்கால் தன் மனத்தில் குற்றமற்றவனாக இருத்தல் வேண்டும்; அதுவே, அறமாகும். மற்றப்படி செய்வதெல்லாம் வெற்றாரவாரமேயாகும். பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்குமின்றிச் செய்யப்படுவதே அறமாகும். இவ்வறத்தை நாம் இப்போது இளைஞராயிருக்கின்றோம்; பின்பு பார்த்துக் கொள்வோம் என்று கருதாது இப்போதே அறஞ் செய்தல் வேண்டும். அவ்வறம், நாம் இறக்குங் காலத்தும் நீங்காத துணையாக வந்து உதவும். இதுதான் அறத்தின் பயன் என்று எடுத்துக் காட்டிச் சொல்ல வேண்டியதில்லை; பல்லக்கைச் சுமப்போனிடத்தும் அதில் ஏறிச் செல்வோனிடத்துமே பார்க்கலாம்.

ஒருவன் நாள் தவறாமல் அறஞ்செய்து கொண்டே வருவானானால், அவ்வறம், அவனது பிறப்பு வழியை அடைத்துக் காக்கும் கல்லைப்போல் உதவி புரிதலாகும். அறத்தாலேயே இன்பம் கிடைக்கும்; அறமல்லாத தீய வழியில் சென்றால் பழியே தரும்; அஃதோடு புகழும் இல்லை. ஆகவே, செய்யத் தக்கது அறமே; செய்யாமல் விட்டுவிடக்கூடியன பாவங்களே.

ஆதலால், அறத்தை எப்போதும் செய்துவர வேண்டுமென்பதாம்.

ரு. இல்வாழ்க்கை

அறமென்று சொன்னால் இல்லற வாழ்க்கையையே குறிக்கும். அஃது அன்புக்கும் அறத்துக்கும் முதலிடம்; அது மனைவியுடன் இருந்து செய்வது; அவ் அறம் தம் தம் தாய் தந்தையர்க்குத் துணையாக இருப்பது; மனைவி மக்கட்குச் சார்புடையது; துறவிகள் வறியோர் அகதிகள் ஆகியோர்க்கு உதவியாக இருப்பது. அது தம் முன்னோர்களை நினைந்து விரதங்காக்க நிலையளிப்பது; கடவுளரைப் போற்றக் கடமைகொண்டது; விருந்தினர்க்கு உண ஊட்டி இன்பம்தருதற்கு உரியது; தம் சுற்றத்தாரைப் பாதுகாப்பது; தன்னைப் பேணி நடப்பது ஆகிய ஐந்தையும் தன் கடமையாகக் கொண்டது.

இத் தன்மைத்தாம் இல்லறவழியில் நடந்து வருவோன் குடும்பம் உயரும்; மக்களும் வாழையடி வாழை போல் வழிவழியாக நிலைத்து வாழுவர்; இல்வாழ்க்கைக்குப் பண்பு அன்பு; பயன் அனைத்துயிர்க்கும் நலம் புரிவதாகிய அறம். இல்லறத்தான் துறவிகளினும் உயர்ந்தவனாகின்றான்; இல்வாழ்க்கை இயல்புடன் வாழ்பவன் தவத்தோரினும் மிக்கவன் ஆவன். துறவிகள் முதலிய யாவரையும் அவரவர் வழிப்படி நடக்கச்செய்வதனால் அவன் வாழ்க்கை சிறப்படைகின்றது; எல்லாச் சிறப்புக்களும் இல்வாழ்க்கையிலேயே பெறலாம். இல்லறம் துறவறம் என்னும் இரண்டனுள் மென்மையாகிய இல்லறமே சிறந்தது. வன்மையாகிய துறவறம் கொள்கை தவறாது நிறைவேறின் இல்லறத்தோடொத்த நன்மை யுடையதாகும்.

இல்வாழ்க்கை நடத்தும் சிறப்பினால் அவன் இம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் விண்ணுலகத் தேவர்களில் ஒருவனாக உயர்ந்தோர் அவனை மதித்துப் போற்றுவர். ஆதலால் இல்லற வாழ்க்கையின் மேன்மையும் பயனும் எவ்வளவு சிறந்தன? எனவே இல்லற வாழ்க்கையே எல்லா வாழ்க்கையினும் உயர்ந்த தென்னலாம்.

௬. வாழ்க்கைத் துணைநலம்

தம் குடும்பத்துக்குத் தக்க நல்ல குணம் உடையாள், வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்வோள் எவளோ? அவளே மனைவி; அவள் இல்லற வாழ்க்கைக்குத் துணை யாவாள்; அவள் கற்புடையவளாக இருந்தால் அவள் பெண்பிறப்பு மிக உயர்ந்தது; அவள் தன் கணவனைத் தெய்வமாக நினைத்துப் போற்றிவந்தாளானல் அவள் மழை பெய்யென்றால் பெய்யும். அவள் தன் கணவனை உணவு முதலியவற்றால் பாதுகாத்து வருவாளானல் அவளையே 'பெண்' என்று உயர்த்திச் சொல்லலாம்.

அதனால் அவள் தேவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவாள்; இத்தன்மையான மனையாளையுடையவனுக்குக் கிட்டாத பொருள் ஒன்றுமேயில்லை; அவனுக்கு எல்லாச் செல்வமும் உண்டு; இக் கற்புடைய மனைவியால் கணவன் பெருமை அடைகின்றான். அதனால் ஒருவன் இல்லத்துக்குச் சிறப்பு நல்ல மனைவியே.

இந் நற்குணமில்லாத மனைவி இருக்கும் வீடு எவ்வளவு செல்வமிருந்தாலும் சிறப்படையாது; அவள் தன் மனத்தைத் தானே காக்கவேண்டும்; பிறர் யாராலும் அவளை அடக்கிக் கட்டுப்படுத்த முடியாது.

ஆகவே இல்லற வாழ்க்கைக்கு நல்ல குணமுள்ள மனையாளே சிறந்தவளாவாள்; அவளையே ஒருவன் வீட்டுக்கு 'மங்கலப்பொருள்' என்று சொல்லலாம் என்பதாம்.

எ. மக்கட்பேறு

எல்லாப் பேற்றிலும் சிறந்த பேறு நல்ல மக்களைப் பெறுதல். மக்களே பெருஞ் செல்வம்; அது எழுமைக்கும் துணையாவது; அச் செல்வத்தையே நாம் நன்றாக மதிப்பது; அக் குழந்தைகளைத் தாய் தந்தையர் 'தம் செல்வ' மென்று உயர்த்திப் பேசுவர்; அந்தக் குழந்தைகள் தம் இளங் கைகளால் தொட்ட கூழும் தம் தாய் தந்தையர் நாவுக்கு அமிழ்தத்தினும் இனிக்கும்; அவர்கள் உடலைத் தொடுவது உடம்புக்கு இன்பம்; அவர்கள் மழலைச் சொற்களைக் கேட்பது காதுக்கு இன்பம்; பிள்ளைகளின் சொற்களைக் கேளாதவரே 'புல்லாங்குழல் ஓசை இனியது; யாழ் இசை இனியது' என்று சொல்வார்கள். தம் மக்கள் இளஞ் சொற்கள் அவ் வோசைகளினும் மிக இனிமைதருவன.

இத்தகைய குழந்தைகள் உயர்வுபெறத் தந்தையர் செய்யவேண்டிய உதவி, கல்வி கற்கச் செய்தலேயாம். தம்மைப் பார்க்கினும் அவர்கள் அறிவுடையராக இருப்பது உலகத்துக்கு நன்மையானதல்லவா? அக் குழந்தைகள் தந்தையர்க்குச் செய்யும் உதவி, 'இவர்கள் தந்தையர் இவர்களைப் பெற்றெடுக்க என்ன தவஞ் செய்தனரோ' என்ற புகழைப் பெறவைத்தலேயாம்.

ஆகவே நன்மக்களைப் பெறுதல் எல்லாச் சிறப்பினும் மிக உயர்ந்ததாகும் என்பதாம்.

அ. அன்புடைமை

அன்புக்கு அடைக்கும் தாழ்ப்பாள் இல்லை. அஃது அன்புடையவர்கட்கு நட்பு உண்டாக்கும்; அதை அவர் களின் இன்பக் கண்ணீரே வெளிப்படுத்திக் காட்டும். அன்புள்ளவர் தமக்கேயன்றி எல்லோர்க்கும் உரியவர்; அஃதில்லாதவர் தமக்கே உரிமையானவர்; அவ்வன்பு அறத்திற்கு மட்டும் உரியதென்பது இல்லை; மற்ற எல்லா வற்றிற்கும் துணையாக இருப்பதுமாகும். ஆதலால் அன்பு உள்ளவர்களே உயிருடன் இருப்பவர் என்று சொல்லலாம்.

இவ்வாறான அன்பற்றவர் மக்களாகப் பிறந்தும் பய னற்றவர் ஆவர்; எலும்பில்லாத புழுக்களை வெயில் சுட்டுக் கொல்வதுபோல, இவர்களை அறக்கடவுள் வருத்தும்; இவர்கள் உயிரோடு இருப்பது மிக வியப்பு. ஆனால் இவர்கள் இருப்பது பட்டுப்போன மரம் கடும் பாறை யில் தழைவதை ஒத்ததே. ஆதலால் உயிருள்ளவர் அன்புடையவரே. அஃதில்லாதவர் எலும்பும் தோலும் போர்த்திய வெற்று உடல் உள்ளோரே.

கண், காது, கால், கை முதலிய வெளி உறுப்பு இருப் பதால் என்ன பயன்? உள் வடிவமான அன்பு இருப்பதே மக்களுக்குப் பயனாகும்.

ஆகவே மக்கள் எல்லோரும் அன்புடையவராக இருப்பதே உயர்வாகும் என்பதாம்.

---

௯. விருந்தோம்பல்

வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பாதுகாத்து உதவி செய்வதற்கேயாம். அவர்களை இன்முகங்காட்டி வரவேற்க வேண்டும்; முகம் வேறுபட்டுப் பார்த்தால் அனிச்சப் பூப்போல் அவர்கள் முகம் வாடுவர். விருந்தினரைப் பேணி வருவோனுக்கு எந்தத் துன்பமும் அணுகாது; அவன் தன் வயலை உழுது விதைக்க வேண்டுவதில்லை; தானே விளையும்; அவன் வீட்டில் திருமகள் மகிழ்ந்து குடியிருப்பாள்; ஆதலால் அவ் விருந்தினால் வரும் பெருமையை அளவிட்டுச் சொல்லமுடியாது. விருந்தினரின் பெருமை எவ்வளவோ அவ்வளவு பெருமை அதற்கும் உண்டு.

வந்த விருந்தினரை உபசரித்து உணவூட்டி, இனி வருகின்ற விருந்தினரை எதிர்பார்த்திருப்போன், தேவர்கட்குச் சிறந்த விருந்தாக இருப்பான். ஆதலால் அமிழ்தமானாலும் அவர்கட்குப் பகிர்ந்து கொடுக்காமல் தானே உண்ணலாகாது. பணத்தைச் சேர்த்து வைப்பதினும் விருந்தினரை உபசரிப்பதே சிறந்தது. செல்வருக்குச் செல்வமிருந்தும் வறுமையாவது விருந்தினரைப் பேணாதிருப்பதுவே; அவ் அறியாமைக்குணம் அறிவில்லாதவர்களிடமே காணப்படும்.

ஆதலால் விருந்தினரைப் பாதுகாத்தல் இல்லறத்தானுக்குச் சிறந்த கடமையாகின்றது. எனவே விருந்தினரைப் பாதுகாத்தலே உயர்ந்த அறமாகுமென்பதாம்.

௧௦. இனியவை கூறல்

இன்சொல் அன்பு கலந்தது; வஞ்சம் அற்றது; மெய்ப்பொருளை அறிந்தார் வாயிலிருந்து அது பிறப்பது; அது முகம் மலர்ந்து இன்பத்தோடு பார்த்து, உள்ளத்தில் நின்றும் பொங்கி வெளிப்படுவது; அஃதே இன்சொல்; அறமுமாகும். நற்குணத்தின் வேறாகாத அவ் இன்சொல் பேசுவோனுக்கும் நன்மை, மற்றையோர்க்கும் நன்மை தருவதாகும்.

ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதைப் பார்க்கினும் இன்சொல் பேசுவது உயர்ந்தது. இன்சொல் உடையவர்க்கு துன்பந்தரும் வறுமை வராது; பாவங்கள் குறையும்; அறம் பெருகும்; அச்சொல் இப் பிறவியில் இன்பந்தரும்; மறு பிறவியிலும் இன்பந்தரும்.

ஆதலால் ஒருவன் எல்லோரிடத்திலும் பணிவுடையனாக இருத்தல், இன்சொல் உடையவனாக இருத்தல் ஆகிய இரண்டுமே நல்ல அணிகலம் (நகைகள்) ஆகும்; மற்ற எவையும் அணிகளும் அல்ல; அழகும் அல்ல.

இன்சொல் இவ்வளவு பெருமையுடையதாக இருக்க ஏனோ மக்கள் கடுஞ்சொல் பேசுகின்றார்கள்? அப்படிப் பேசுவது உண்பதற்கு இனிய கனிகள் கையில் இருக்க, உண்ணுதற்காகாத காயைத் தேடிக் கொண்டுவந்து உண்பதையே ஒக்கும்.

ஆதலால் எல்லோரும் இன்சொல்லே பேசவேண்டுமென்பதாம்.

கக. செய்ந்நன்றி அறிதல்

ஒருவர்க்கு ஒருவர் செய்யும் உதவி மிகச் சிறந்தது. ஒருவனுக்கு மற்றவன் ஒருதவியும் செய்யாதிருக்க, ஒருவன் செய்த உத்விக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் அவ் வுதவிக்கு ஈடாகாது. தக்க தருணத்தில் செய்த உதவி உலகத்தைவிடப் பெரியது ; அதன் உயர்வை நன்கு அறிந்தோர் அது தினையளவு சிறிதாயிருப்பினும் பனையளவு பெரிதாக மதித்து நடப்பர் ; அதனல் உதவி செய்த அளவில் அடங்காது செய்யப் பட்டவரின் தகுதிக்கேற்றதாய் உயர்வடைகின்றது.

ஆதலால் அப்பேர்ப் பட்டவரின் நட்பை மறக்கக் கூடாது. தமக்கு வந்த துன்பத்தை நீக்கினவர் நட்பை, என்றும் விட்டுவிடலாகாது; அதை உணர்ந்தவர் எல்லாப் பிறவியினும் மறவாதிருப்பர்; அவ்வுதவி செய்தோர் ஏதேனும் தமக்குத் தீமைசெய்ய நேர்ந்தால், அத் தீமையை அப்போதே மறப்பது நல்லது ; ஏனென்ருல், அவர் செய்த நன்மை ஒன்றை நினைத்துப் பார்த்தால் அத் தீமையே தோன்ருது.

ஆதலால், எந்த அறத்தைக் கெடுத்தவர்களும் ஒருகால் மன்னிப்புப் பெற்றுப் பிழைக்கலாம் ; ஆனல், ஒருவன் செய்த உதவியை மறந்தவனுக்கு அப் பாவத்தினின்றும் நீங்க வழியேயில்லை.

ஆகையால் செய்த நன்றியை மறவாது நடத்தலே அறங்களிலெல்லாம் உயர்ந்தது என்னலாம்.

கஉ. நடுவுநிலைமை

எடைக்கு ஒப்பப் பண்டங்களை வரையறுத்துக் காட்டும் தராசுபோல் ஒரே நிலையாக மாருமல் நடந்து வருவது நடுவுநிலைமை. அதைக் கடைப்பிடித்து நடந்துவந்தால் அது மிக நன்மைதரும்; அந் நடுவுநிலை வணிகர்க்கு முதன்மையானது; தம் பொருளைப்போல் வேருெருவர் பொருளையும் பாதுகாத்தால் அதுவே பெரும் ஊதியம் தரும். அவனுக்குச் செல்வம் அழியாது; தன்னைச் சார்ந்தார்க்கும் அழியாத பயனைக் கொடுக்கும்; ஒருவர் செல்வராக இருத்தலும் அவரே பின்பு வறியராதலும் உலக இயற்கை; நடுவுநிலைமை மட்டும் என்றும் மாருத நிலைமையில் உள்ளது; ஆதலால் அதன் வழியில் நடக்க வேண்டும்.

தன்மனம் ஒருதலைப் பக்கமாக மாறுமானல் ஆ! நாம் கெட்டுவிடுவோமே' என்றுகருதி அதை மாற்றி நடுவு நிலையாக நடக்கவேண்டும். அதனல் ஒருவன் தாழ்வு பெற்றாலும் உலகத்தார் அதை ஒரு தாழ்வாகக் கருத மாட்டார்கள்; ஆதலால் நடுவு நிலைமையோடு ஒருவன் நடந்து வருவானனல் அஃதொன்றே எல்லாவற்றினும் சிறந்த நன்மையாகும்.

ஆதலால் நடுவுநிலைமையே ஒருவன் வாழ்க்கைக்கு உயர்ந்தது என்பதாம்.

கக. அடக்கம் உடைமை

அடக்கம் ஒருவனை உயர்வுபடுத்தும்; அதனால் அவ்வடக்கத்தை உயர்ந்த பொருளாகக்கொண்டு காக்கவேண்டும்; அதுவே உயர்வைத்தரும்; அறிவன அறிந்து அவ்வழியில் அடங்கி நடப்பவனுக்கு அது சிறப்பைக் கொடுக்கும்; தன் நிலைமையில் மாருமல் அடக்கமாக இருப்பவன் பெருமை, மலைபோல மிகவும் உயர்ந்தது. அவ்வடக்கம் எல்லோரும் கைக்கொள்ள வேண்டியதாகும். அதிலும் செல்வர்க்கு அச் செல்வத்திலும் சிறந்ததாகும். ஆமையானது தன் தலை கால்களைத் தன்னுள் அடக்கிக் கொள்வதுபோல, ஒருவன் தன் ஒரு பிறவியில் ஐயறிவினை அடக்கி வாழ்ந்து வந்தால் அவ் அடக்கம் அவனைப் பல பிறவிகளிலும் காக்கும் சிறப்புடையது;

ஒருவன் மற்ற எதைக் காக்க முடியாவிட்டாலும் குற்றமில்லை; நாவைமட்டும் அடக்கிக் காக்க வேண்டும். நாவைக் காவாதவன் பின்பு துன்பத்துள் அழுந்துவான்; ஒருவனைத் தீயாற் சுட்டால் அவன் மனம் ஆறிப்போகும்; ஆனால் நாவினல் சொன்ன வசைச்சொல், வடுப்போல என்றும் மனத்தைவிட்டு அகலாது; ஆகையால் தீய சொல்லால் நன்மை வருவதே யானாலும் அது அறத்தோடு பொருந்திய நன்மையைத் தராது. சினம் வராமல் தன் மனதைக் காப்போன், கற்றவழியில் அடங்கி நடப்போன் ஆகிய ஒருவனுக்கு அறக்கடவுள் துணையாக இருந்து காக்கும்.

ஆகவே எல்லோரும் அடக்கமுடையவராக வாழ்தலே சிறந்ததாகும்.

கசு. ஒழுக்கம் உடைமை

ஒழுக்கமே எல்லோர்க்கும் உயர்வு தருவது; அதனுல் அதை உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் உடையோரே உயர் குலத்தினர் ஆவார்; அதில் தவறினுல் கீழ்க்குலமாகக் கருதப்படுவர்; நல்லொழுக்கம் நன்மை எல்லாவற்றிற்கும் விதையைப் போன்றது; தீயொழுக்கமோ என்றைக்கும் துன்பத்தைக் கொடுப்பது; ஆதலால் ஒழுக்கக் கேட்டின் தீமையையறிந்து, நல்லோர் நல்லொழுக்கத்தைக் கைவிடமாட்டார்கள். பொருமை யுடையவன் செல்வமில்லாமல் கெடுவதுபோல, ஒழுக்க மற்றவன் உயர்வில்லாமல் தாழ்ந்துவிடுவான்; ஒழுக்க முடையவர் வாயில் மறந்தும் தீய சொற்கள் பிறவா.

ஒருவன் கற்ற கல்வியை மறந்துவிட்டாலும் மீண்டும் கற்றுக்கொள்ளலாம். வழிவழியாக மேலோங்கிவந்த உயர்குடிப் பிறப்பும் ஒழுக்கமில்லையானுல் தாழ்வடையும். ஆகவே வருந்தியாவது ஒழுக்கத்தைக் காக்கவேண்டும். ஆராய்ந்து பார்த்தால் வாழ்க்கைக்குத் துணையாக இருப்பது ஒழுக்கமொன்றே யாகும்.

ஒருவன் நல்லொழுக்கத்தால் மேன்மையும் தீயொழுக்கத்தால் பழியையுமே அடைகின்ருன்; ஆதலால் உயர்ந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். எவ்வளவோ நூல்களைக் கற்ருலும் ஒழுக்கத்தைக் கல்லாதவர் அறிவில்லாதவரே யாவர்.

ஆகவே, ஒழுக்கமே எல்லாவற்றினும் சிறந்த அறமாகு மென்பதாம்.

கரு. பிறனில் விழையாமை

ஒருவன் மனைவி அவன் ஒருவனுக்கே உரிமையானவள், அவளை வேறொருவன் ஆசை கொள்வது அறியாமை ஆகும்; அவ் அறியாமைக் குணம் அறம் பொருள்களின் நுட்பத்தைத் தெரிந்தவர்கட்கு வராது; அறத்தைக் கெடுத்தவர்களுள் எல்லாம் முதன்மையானவர் பிறன் மனையாளை விரும்பி நடக்கும் அறிவில்லாரே யாவர்; அத்தன்மையானவர் உயிரோடிருப்பினும் இறந்தவரே என்று சொல்லலாம்; இத் தீமையைத் தினையளவாவது எண்ணிப் பார்க்காமல் நடப்போன் எவ்வளவு மேன்மையானவன் ஆனாலும் என்ன? அவனைப் பகை வந்து சாரும்; பாவம் மூடும்; அச்சம் அடையும்; பழியும் சேரும்.

ஒருவனுக்கு வேறோர் அறத்தைச் செய்யமுடியா விட்டாலும் பிறன் மனைவியை விரும்பாமல் நடப்பதுவே நல்லது; அது பெரிய ஆண்மைத் தன்மை மட்டுமல்ல; சிறந்த ஒழுக்கமு மாகும். பிறன் மனையாளைச் சேராதவர்களே இவ்வுலகத்தில் நன்மைக்கெல்லாம் உரிமையுடையவர். அறத்தில் தவறாமல் வாழ்பவன் யாரென்றால், பிறன் மனைவியின் அழகைக் கருதாதவனேயாவான். இவளை நாம் எளிதில் கைப்பற்றி விடலாமென்று பிறன் மனையாளிடம் செல்வோன், என்றும் அழியாத பழிக்கு உள்ளாவான். ஆதலால் எல்லா நன்மைக்கும் உரிமையானவர் பிறர் மனைவியைச் சேராதோரே.

பிறன் மனையாளை விரும்பாதிருத்தலே தலைமையான அறமென்பதாம்.

---

௧௬. பொறை உடைமை

தன்னை வெட்டித் தோண்டுவோரையும் தாங்கிச் சுமப்பது நிலம். அதுபோலத் தம்மைப் பழிப்போர் குற்றத்தைப் பொறுத்துக்கொள்வதே உயர்ந்தது. ஒருவர் அளவுகடந்து செய்த தீங்கைப் பொறுக்கவேண்டும், அதை உடனே மறக்கவும் வேண்டும். நிறைவான குணம் எப்போதும் தன்னிடம் இருக்க ஒருவன் விரும்பினால், பொறுமையை விடாது கைக்கொண்டு நடக்கவேண்டும். ஒருவன் கெடுதல்செய்தால் தானும் அவனுக்குத் திரும்பக் கெடுதி செய்யாதிருப்பதுவே நல்லது; செருக்கினால் தீங்கு செய்தவரை, தான் பொறுக்குங் குணத்தாலே வெல்லுதல் வேண்டும்; அக்குணம் பெற்றோர், முற்றத் துறந்த முனிவரினும் உயர்ந்தோராவர்.

வறுமையினும் கொடிய வறுமையாவது விருந்தினரை உபசரியாதிருப்பது; அதுபோல் வலிமையிற் சிறந்த வலிமை யென்பது அறியார் செய்யும் தீங்கைப் பொறுப்பதாம். ஆதலால் தீமை செய்தார்க்குத் தீமை செய்தாரை உயர்ந்தோர் ஒருபொருளாக மதிக்கமாட்டார். தீமையைப் பொறுத்துக்கொள்வோரைப் பொன்னினும் உயர்வாக மதிப்பர். தீமை செய்வோர்க்குத் தாமும் தீமை செய்தால் அவர்கட்கு அன்று ஒருபொழுதுமட்டுமே உண்டாகும் நிலையிலா இன்பம்; தீமையைப் பொறுத்துக் கொண்டோர்க்கோ எந்தக் காலத்தும் இன்பமும் புகழும் நிலைத்து நிற்கும்.

ஆதலால் பொறுமையை எக்காலத்தும் கைக்கொள்ள வேண்டுமென்பதாம்.

கள. அழுக்காறுமை

பொறாமை யில்லாத குணத்தை ஒருவன் ஒழுக்கமாகவே கொள்ளவேண்டும். அப்படிக் கொண்டால், அதைப்போல் உயர்ந்தது வேறொன்றும் இல்லை. அறத்தையும் செல்வத்தையும் வேண்டாதவனே பொறாமையுடையவன். அப் பொறாமையால் கெடுதல் வருவதையறிந்து பாவச்செயல்களை யாரும் செய்யமாட்டார்கள். பொறாமைக் குணமுடையவர்கட்குப் பகைவரே வேண்டுவதில்லை; பகைவர் செய்யும் கெடுதல் எல்லாம், இப் பொறாமை ஒன்றே செய்துவிடும்.

ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு பொருள் கொடுத்தால், அதற்குப் பொறாமை கொள்வது கூடாது. கொண்டால் அவன் சுற்றத்தார்கூட உண்ண உணவு, உடுக்கத் துணி இல்லாமல் வாடி வருந்துவர். எனவே இவனுக்குத் துன்பம் அளவுகடந்து வரும். பொறாமைக்குண முள்ளவனிடம் திருமகள் இருக்காது விலகுவாள்; தனக்கு மூத்தவளான மூதேவியை அவனிடம் போய் இருக்கும்படி காட்டிவிட்டுச் செல்வாள். ஆதலால் பொறாமை யென்னும் பாவி செல்வத்தைக் கெடுக்கும்; கீழான நிலையில் கொண்டுபோய் விட்டுவிடும்.

பொறாமையுள்ளவன் உயர்வும், அஃதில்லாதவன் தாழ்வும், ஒரோ ஒருகால் நாம் பார்க்கிறோம்; அதை நாம் நன்றாக எண்ணிப் பார்த்தால் தெரியும்.

அஃது அழுக்காறு கொண்டு மேன்மையடைந்தவர் யாருமே யில்லை; அழுக்காறு இல்லாதவர் தாழ்வடைந்ததும் இல்லை.

ஆகையால் பொறாமைக் குணத்தை விட்டுவிட்டு நல் வழியில் நடப்பதே உயர்ந்த அறமாகு மென்பதாம்.

கஅ. வெஃகாமை

மனச் சான்றை மறைத்துப் பிறர் பொருளைக்கொள்ள ஆசைகொள்ளுதல் கூடாது; அப்படிக் கொண்டால் அவன் குடி கெடும். குற்றமும் வரும். அதனால், உயர்ந்தோர், பிறர் பொருளை விரும்பிக் கீழான செயலைச் செய்யார். அறத்தால் வரும் இன்பத்தை வேண்டுவோன், சிறு இன்பத்தை விரும்பான்; அதற்காக அறமல்லாதவைகளைச் செய்யமாட்டான். ஐந்தறிவால் வரும் ஆசையை வென்ற மேலோர் 'நாம் வறியவர்தாமே' என்று பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள நினையார்; அஃகி எல்லாரிடத்திலும் பொருளை விரும்பிக் கொடுஞ்செயல்களைப் புரிவானுனல் அவன் வருந்திக் கூர்மையாகக் கற்றுள்ள கல்வியினுல் பயனென்றும் இல்லை. அருளை விரும்பினேன், அறவழியில் நடப்போன் ஆனாலும் பிறர் பொருளைக் கொள்ளைகொள்ள நினைத்தால் கெடுவான். ஆதலால் அதை விரும்பாது இருக்கவேண்டும். ஏனெனின், அதனுல் நன்மைபெற முடியாது. அறத்தின் தன்மையை அறிந்து நடப்போரிடம் திருமகள் தானேவந்து குடிகொண்டிருப்பாள். முன்பின் வருவனவற்றை ஆராயாமல் பிறன் பொருளைக் கொள்ள நினைத்தால் அது கெடுதியையே கொடுக்கும். அதை வெஃகாமல் வாழும் உயர்வு வெற்றி தரும். குறையாத செல்வம் பிறன் பொருளை விரும்பாததே. ஆதலால் பிறன்பொருளை விரும்பாமல் இருக்குக. அதை விரும்பினுல் நல்ல பயன் கிட்டாது.

ஆதலால் பிறர் பொருளை விரும்பாதிருத்தலே நல்ல அறமாகும் என்பதாம்.

கஜ. புறங் கூருமை

ஒருவன் வாயாற்கூட அறத்தைச் சொல்லாதவன்; ஆனாலும், அவன் பிறனெருவனைப் பற்றிக் குற்றம் குறை கூருதவன் ஆயின் அதுவே சிறந்தது; இனியது. புறங் கூறித் திரிந்து பயனில்லாத வாழ்க்கை வாழ்வதைவிடச் சாவதுவே மேல். நேரே ஒருவன் குற்றத்தை மறையாமல் சொன்னாலும் குற்றமில்லை. ஆனால் அவனைக் காணுத போது பழித்துச் சொல்வதுமட்டும் கூடாது. ஒருவனைக் காணுதபோது பழிதூற்றுவது அறத்தையும் கெடுத்துப் பாவஞ்செய்வதினும் கொடியதாகும்.

பிறன் குற்றத்தைச் சொல்லுவோன் தன் குற்றத்தை மிகைப்படுத்திப் பிறன்கூறிப் பழிப்பானேயென்று அஞ்ச வேண்டும். எல்லாரும் மகிழும்படி குணங்களைச் சொல்லி அயலாரையும் உறவு செய்து கொள்ளத் தெரியாதவர் இயல்பாகவுள்ள உறவினரையும் புறங்கூறிப் பிரியச்செய்து விடுவர். இப் புறங் கூறுவதில் பழகியவர் தம் நண்பர் குற்றத்தையும் எடுத்துக் கூறிப் பழி தூற்றுவர். அப்படி யானால் அவர்கள் பகைவரைப் பற்றிப் பழிதூற்றுவதோ சொல்லவேண்டுவதில்லை. அப்படிப் பட்டவர் உடலை இந் நிலம் சுமந்துகொண்டு இருப்பது அறத்தை எண்ணித்தான். ஆதலால் இவர்கள் பூமிக்குப் பாரமாகவே இருக்கிறார்கள்.

பிறர் குற்றத்தை ஆய்ந்து காண்பார்போலப் புறங் கூறுதலாகிய தன் குற்றத்தையும் நினைத்துப் பழிகூறாமல் இருப்பவனுக்கு அவன் வாழ்க்கையில் எந்தத் துன்பமும் வந்து நேராது.

ஆகவே பிறனைப் பற்றிப் புறங்கூறாது இருத்தலே உயர்ந்த அறமாகு மென்பதாம்.

உ0. பயன்இல சொல்லாமை

ஒருவன் எல்லோரும் வெறுக்கும்படி பயனற்ற சொற்களைப் பேசினால் அவன் யாவராலும் இகழப்படுவான். அச் சொற்களை நல்லோர் பேசினாலும் அவர்க்குரிய மேம்பாடும் சிறப்பும் கெடும். ஆதலால் அறத்துக்குப் புறம்பானவைகளைச் சொன்னாலும் சொல்லலாம். ஒன்றுக்கும் பயனில்லாத சொற்களைமட்டும் சொல்லுதல் ஆகாது. அப்படிப் பயனற்றவைகளைப் பேசுவோரை மனிதரென்றே சொல்லவொண்ணாது. மக்களுள் பதரென்றே சொல்ல வேண்டும்.

வீண்பேச்சுப்பேசப்பழகியவனுக்கு அப்பழக்கம் அறத்தின் நன்மையினின்றும் விலகச் செய்யும். அப் பேச்சு தம் நண்பருக்குத் தீமை செய்வதினும் கொடியது. உயர்ந்த பொருள்களை ஆராய்ந்து கண்டறிந்தவர் வீண் சொற்கள் பேசவேமாட்டார். உண்மை அறிவுள்ளோர் மறந்தும் கூடப் பயனில்லாதவைகளைப் பேசமாட்டார்கள்.

பயனில்லாத பேச்சே ஒருவனை இவன் நன்மை இல்லாதவனென்று விளக்கிக் காட்டும்.

ஆதலால் ஒருவன் பயன் இல்லாத சொற்களைப் பேசுதல் கூடாது. பயனுள்ள சொற்களையே எப்போதும் பேசுதல் வேண்டும்.

பயனுள்ள சொற்களைப் பேசுதல் மிகச் சிறந்தது என்பதாம்.

உக. தீவினை அச்சம்

நல்லோர் தீவினைக்கு அஞ்சுவர்; தீயோர் தீவினைக்கு அஞ்சமாட்டார். கெட்ட செயல் கெடுதலையே தருவதால் அதை நெருப்பினும் கொடியதாக நினைத்து அஞ்ச வேண்டும்.

ஒருவன் மறந்தும் கூடப் பிறனுக்குக் கெடுதல் செய்யக்கூடாது; அதைச் செய்தால் அறமே அவனைக் கெடுக்கும். தன்னைத் தீமைகள் வந்து வருத்த வேண்டா வென எண்ணுவோன் பிறருக்குத் தீமை செய்தல்கூடாது. தடுக்கமுடியாத எவ்வளவு கொடிய பகையைக்கூடத் தடுத்துவிடலாம். ஆனால் தீவினைப் பகையைமட்டும் தடுக்கவே முடியாது; அது தவறாமல் கெடுதல் செய்தே தீரும்.

தம் நிழல் தம்மைவிட்டு நீங்காமல் இருப்பதுபோலத் தீவினையும் அதைச் செய்தோனுக்குத் தவறாமல் கெடுதி செய்தே நிற்கும். ஆதலால், பகைவருக்குக்கூட ஒருவன் தீமை செய்தல் ஆகாது. இலனென்று அவ்வாறு செய்யா திருப்பது எல்லா அறிவினும் சிறந்த முதன்மையான அறிவாகும்.

ஒருவன் தனக்குக்கூட, அன்புடையனாக இருக்க விரும்பினால் எந்தத் தீய செயலையும் செய்யாதிருக்க வேண்டும். தம்மவர் அயலார் பகைவர் என்னும் பாகு பாடு இல்லாமல் யாருக்கும் நன்மையே செய்தால் தமக் குக் கெடுதலே வராது என்று உறுதியாக நம்பலாம்.

ஆதலால் தீவினைக்கு அஞ்சி நல்வழியில் நடத்தலே உயர்ந்த அறமாகும் என்பதாம்.

௨௨. ஒப்புரவு அறிதல்

மேகம் மழை பெய்கிறது; ஆனால் அது எந்த உதவியும் அதற்காக வேண்டுவதில்லை. அதுபோல நல்லோர் தாம் செய்யும் நன்மைக்காக ஒன்றையும் விரும்பமாட்டார்கள். பாடுபட்டுத் தேடிய பொருளுடையார் சிறந்தவராக விருப்பின் அப்பொருள் முழுவதும் அறத்திற்கேயாகும். கடமையைப் போல மண்ணுலகம் விண்ணுலகம் இரண்டிலும் உயர்வானது ஒன்றும் இல்லை. இதை அறிந்துள்ளவனே உயிரோடு இருப்பவன். அதை அறியாதவன் இறந்துபோனவரில் ஒருவனாகவே வைக்கப் படுவான்

இத் தன்மையானவன் பெற்ற செல்வம், எல்லோரும் உண்ணும் ஊருணி நீரைப்போலப் பயன்பட்டு இருக்கும்; அச் செல்வம் எல்லோருக்கும் வேர் பட்டை இலை தளிர் முதலியவற்றால் நலம் தருகின்ற மரம், ஊர்க்கு நடுவில் பழுத்து நிற்பதுபோல் உதவியாக இருக்கும். மேலும் மருந்துக்கு ஆகின்ற மரம் ஒருவருக்குத் துன்பம் வந்த போது பேருதவியாகவும் இருக்கும். அதுபோல் யாருக்கும் பல வழிகளாலும் உதவி செய்தல் வேண்டும். இவ் வுதவியைத் தவறாமல் செய்வோர், தமக்குச் செல்வமில் லாதபோதும் செய்யத் தவறமாட்டார்கள். இக் கடமையைச் செய்வோனுக்குப் பொருட் கேடு வந்தாலும் செய்வன். வருந்த வேண்டியதாகவே தான் அடிமைப்பட்டுச் செய்ய நேரினும் அடிமைப்பட்டுஞ் செய்துமுடிப்பன். ஆதலால் நல்லவைகளைத் தவறாமல் செய்வது சிறந்த அறநெறியாகு மென்பதாம்.

உ௩. ஈகை

ஈகையென்பது ஏழைகட்கு வேண்டிய தொன்றைக் கொடுத்தல். மற்றவர்க்குக் கொடுப்பது ஈகை யாகாது; தம் பயன் கருதியதே ஆகும்.

ஒன்றைப் பிறரிடம் வாங்குவது அறமென்று உலகத்தார் சொன்னாலும் அப்படி வாங்கிக் கொள்வது நன்றல்ல. ஒருவர்க்கு ஒன்றைக் கொடுப்பதே நல்லது. அதனால் மேல் உலகப் பதவி கிட்டாதென்று சொல்வோர் இருந்தாலும் கொடுப்பதுவே நல்லது.

தவஞ் செய்வார்க்குப் பெருமை தம் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பதே. அப் பெருமையும் சோறு கொடுத்துப் பசியை ஒழிப்பவன் பெருமைக்குக் குறைவானதே.

ஏழைகளின் பசி தீரக் கொடுப்பதுவே தன் செல்வத்தைப் பேணிவைக்கும் இடமாகும். அப்படிப் பகுத்துக் கொடுப்பவனுக்கு எக் காலத்திலும் பசித் துன்பம் வராது. அப்படிக்கின்றித் தாம் மட்டும் உண்பது, இரந்து கேட்டு வாங்குவதினும் மிகக் கொடுமையானது. பொருளைத் தேடிவைத்துப் பின் அதை இழந்து நிற்போர் இரக்கமற்றவர் ஆவர். அவர் கொடுப்பதால் வரும் இன்பத்தை யறியாதவர். யாருக்கும் இறந்து போவதைப் போல் துன்பம் வேறில்லை, கொடுக்கும் மனம் இல்லாவிட்டால் இருப்பதிலும் சாவதே இனிமையானது.

ஆதலால் ஈவதே சிறந்த அறமெனப் படுவதாகுமென்பதாம்.

உசு. புகழ்

ஒருவருக்கு ஒன்றை ஈவது; அதனால் நல்ல பெயர் பெற வாழ்வது; இவை தாம் பிறவிப் பயன். உலகத்தில் மேன்மைப்படுத்திப் பேசுமொழிகளெல்லாம் இரப்போர்க்கு ஈவாரின் புகழ்மொழிகளே. ஆதலால் உலகில் புகழ் ஒன்றே நிலைத்து நிற்கக் கூடியது.

ஒருவன் இவ்வுலகில் நிலைத்த புகழுக்குரியன செய்வானானால், மேலுலகிலுள்ள தேவர்கள் அவனையே போற்றுவர். புகழுடம்பு வளர நேரும் செல்வக்குறைபாடும், அப்புகழுடம்பு நிலைக்க நீங்கும் சாவும் தேடிக்கொள்பவர் பெரியோராவர். மக்களாய்ப் பிறந்தால் புகழ்க்குரிய குணத்துடனேயே பிறக்க வேண்டும்; இல்லையேல் பிறந்தும் பயனில்லை; அதினும் விலங்குப் பிறவிகூடச் சிறந்தது.

புகழுடன் வாழாதவரைப் பிறர் இகழ்வர்; அதற்காக அவரை நொந்து கொள்வதில் பயனில்லை. தம்மையே தாம் நோவவேண்டும். ஏனெனில் தனக்குப் பின் நிலைத்திருக்கப் புகழென்னும் குழந்தையைப் பெற வேண்டும். அதைப் பெறுதொழிந்தால் இழுக்கே ஆகும். புகழ் இல்லாதவர் இருக்கும் நாட்டில் விளைவும் பயனும் குறையும். ஆகவே வசையில்லாமல் வாழ்வோரே உயிருடன் இருப்பவராவர். மற்றையோர் இருந்தும் இறந்தோரே.

உலகிற் பிறந்த மக்களுக்கு இரண்டு உடம்புகள் உண்டு. ஒன்று புலால் உடம்பு; மற்றொன்று புகழுடம்பு. அப் புகழுடம்பு அழியாதது: அதைப் பெற்றவரே அறிவாளிகள். எனவே, புகழுடன் கூடி வாழும் வாழ்க்கையே உயர்ந்தது என்னலாம்.

உடு. அருளுடைமை

செல்வங்களில் எல்லாம் சிறந்தது அருள் என்னும் செல்வம் ஒன்றே. பொருட் செல்வமோ நற்பண்பில்லாத மக்களிடத்தும் இருக்கின்றது. ஆதலால் நன்கு ஆராய்ந்து பார்த்து அருள் ஒன்றையே கொள்ளுதல் வேண்டும். பல வழிகளில் பார்த்தாலும் ஒருவனுக்கு அருள் ஒன்றுதான் துணையாக இருக்கின்றது. அருள் நிறைந்த மனமுடையார் இருள் நிறைந்த துன்பவுலகம் சேரார். பணமில்லாதவர் ஒரு காலத்தில் பணம் படைத்தவர் ஆகிவிடுவர். ஆனால் அருளென்னும் இரக்கமில்லாதவர் எப்போதும் இரக்கமில்லாதவராகவே இருப்பர். அவர்கட்கு இரக்கம் வருவது அருமை. அவர்கள் அருளுடையவர்கள் ஆகவும் முடியாது.

நுட்ப அறிவு இல்லாதவன் ஒரு பொருளின் உண்மையைக் காண வொண்ணுமல் போவதுபோல் இரக்கமில்லாதவன் செய்யும் அறமும் ஒருபோதும் அறத்தின் பயனைத் தராது. இரக்கமின்றித் தீமை செய்வோரை முன் பிறவியிலும் உயர்ந்த உறுதிப் பொருளை மறந்து கைவிட்டவரென்றே பெரியோர் சொல்வர்.

செல்வப் பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லாதது போல அருட் செல்வம் இல்லாதவர்க்கு மேலுலக இன்பம் கிட்டாது. இரக்கம் உள்ளவர்கட்கு எப்போதும் துன்பமே வராது; அதற்கு இவ்வுலகமே சான்ருக அமைந்திருக்கின்றது. வேறொரு உயிரைப் பாதுகாப்போர்க்குத் தன் உயிரைப் பற்றி அஞ்ச வேண்டுவதில்லை.

ஆகவே அருளிரக்கமே சிறந்த அறமாகுமென்பதாம்.

உ௬. புலால் மறுத்தல்

தன் உடம்பை வளர்க்க மற்றோர் உடம்பை உண்பவனுக்கு இரக்கம் இருக்காது. பொருளைப் பாதுகாவாதவனுக்கு அதனால் வரும் நன்மை கிட்டாதது போலப், புலால் உண்பவர்க்கு அருளால் வரும் நன்மை கிட்டாது. கொலைக் கருவி (வாளை)யைக் கையில் வைத்திருப்போன் மனம் எதையும் வெட்ட நினைப்பது போல், புலால் உண்பவன் மனமும் எந்த உயிரையும் கொன்று அதன் தசையைத் தின்னவே தூண்டும். ஆதலால், இரக்கமென்பது ஒருயிரையும் கொல்லாதிருத்தல். அப்படிக் கொல்லுதல் கொலைப்பாவம். அக் கொலையால் கிடைக்கும் புலாலை உண்பது கொடும்பாவம்.

உலகத்தார் தின்பதற்கு உயிர்களைக் கொல்லாதிருந்தால், யாரும் உயிர்களைக் கொன்று அதன் புலாலை விலைக்கு விற்கமாட்டார்கள். புலால் என்பது வேறோர் உடலின் புண்ணே. அதன் உண்மை தெரிந்தோர் நட்பைப் பெற்றால் புலால் உண்ணக் கூடாது. ஒருயிரைப் போக்கி அதன் உடல் தசையை நல்லறிவுடையோர் உண்ணமாட்டார்கள். ஆயினும் வேள்வி (யாகம்) செய்து பெறும் நன்மையினும் ஓருயிரைக் கொன்று அதன் புலாலை உண்ணாமலிருப்பதுவே நல்லது. ஒருயிரையும் கொல்லாதவன், புலால் உண்ணாதவன் எவனோ, அவனை எல்லா மக்களும் கைகுவித்து வணங்குவர். புலால் உண்ணாதவனே உயிருடன் இருப்பவன் ஆவான்; புலால் உண்டவனை நரகம் வெளியில் விடாமல் தன் உள்ளேயே அமிழ்த்தும்.

ஆகவே புலால் உண்ணாத அறம் மிகச் சிறந்தது என்னலாம்.

௨எ. தவம்

தவமென்பது தமக்கு வந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதல்; எந்த உயிருக்கும் துன்பஞ்செய்யாதிருத்தல் ஆகிய இரண்டு தன்மையுமேயாம். அத் தவமும் முன் தவஞ்செய்தவர்க்கே கைகூடும். அஃதில்லாதவர் தவஞ்செய்ய முன் வந்தாலும் அது கைகூடி வராது. பகைவரை அழித்தல்; தம்மைச் சார்ந்தாரை உயர்த்துதல் எல்லாம் நினைத்தால் தவம் ஒன்றால் செய்யமுடியும். ஆதலால் விரும்பியதை விரும்பியபடி செய்யத் துணையாக இருப்பது தவம்; அதை இடைவிடாது மேலும் மேலும் செய்யவேண்டும். ஆகவே தவஞ்செய்வோரே தம்முயிர் ஈடேறும் வேலையைச் செய்வோராவர்; அஃதில்லார் உலக மயக்கத்தில் வீழ்ந்து வீண் செயலைச் செய்வோரேயாவர். பொன்னைப் புடம்போடப் புடம்போட அதன் மாற்று உயர்வதுபோல, துன்பம் வருத்த வருத்தத் தவஞ்செய்வோர்க்கு அறிவொளி மிகுதியாகும். தவஞ்செய்கிற ஆற்றல் பெற்றவர்க்குக் கூற்றுவன் துன்பத்தினின்றும் நீங்கவும் முடியும். உலகத்தில் தவஞ்செய்யாமல் பலர் இருப்பதற்குக் காரணம், துன்பம் பொறுப்பார் சிலரும், அதைப் பொறுக்கமாட்டார் பலரும் இருப்பதுவே. அஃதல்லாமலும், பற்றை அறுத்துத் துறவறமடைந்தார்க்கு நன்மை செய்யவேண்டியே இவ்வளவு சிறந்த தவத்தைச் செய்ய மக்கள் மறந்துவிட்டுவிட்டார்கள்போலும்! தன்னுயிரைத் தனக்கே உரிமையாய்ப் பெற்ற தவமுடையவனை மற்ற உலக மக்கள் எல்லோரும் தொழுது நிற்பர்.

ஆகலான், எல்லோருக்கும் தவமே சிறந்ததாகுமென்பதாம்.

உஅ. கூடா ஒழுக்கம்

தன் மனமறிய ஒழுக்கத்தில் வழுவுதல் கூடாது; நழுவினல் உயர்ந்த தவக்கோலத்தால் பயனென்றுமில்லை. வஞ்ச மனத்தான் பொய்யொழுக்கத்தைக் கண்டு ஐந்து பூதங்களும் தம்முள் சிரித்து அவனை இகழும். தன் மனத்தை அடக்கும் வலிமையில்லாதவன் அவ்வடக்க முடையார்போல் தவக்கோலம் மட்டும் கொண்டிருத்தல், காளைமாடு புலித்தோலைப் போர்த்துக்கொண்டு பயிர்களை மேய்ந்தழித்ததை ஒக்கும். தவக்கோலங்கொண்டு மக்களை ஏமாற்றிக் கீழ்மையானவைகளைச் செய்வது, வேடன் புதரில் மறைந்திருந்து பறவைகளை வலைபோட்டுப் பிடிப்பதை ஒத்ததாகும். உலகை ஏமாற்றுவதற்காகப் பற்றற்றவர்போல் வஞ்சித்து நடப்பார், பின்பு என்ன செய்தோமென்று இரங்கி வருந்துவர். மனத்துறவு கொள்ளாமல் முற்றத் துறந்தார்போல் வேடங்கொண்டு வாழ்வோரைப்போலக் கொடுமையானவர் வேறு யாருமே இல்லை. குன்றிமணி வெளிப்புறம்போலச் சிவந்த சிறந்த தவக்கோலத்தோடு காணப்பட்டாலும் அக்குன்றிமணி உட்புறம்போலக் கருமையான அறியாமை உடையோர் உலகில் பலர் இருக்கின்ருர்கள். அம்பு எவ்வளவு அழகும் கூர்மையும் கொண்டதாக இருக்கின்றது. ஆனல் அதன் செய்கை கொலையால் துன்பம் தருவது. யாழ் நரம்பும் பத்தரும் வளைவும்கொண்டு எவ்வளவு அழகில்லாமல் இருக்கின்றது, ஆனல், அதன் செய்கை இசையால் இன்பந்தருவது. ஆதலால் ஒருவரை உருவத்தைக் கொண்டு மதிக்கக்கூடாது. அவரவர் செய்கைகளைக் கொண்டே மதிக்கக்கூடும். தலையை மொட்டையடிக்கவும் வேண்டாம்; தலைமயிரைச் சடை விழும்படி நீட்டி வளர்க்கவும் வேண்டாம்; உலகத்தார் பழிக்காமல் ஒருவன் ஒழுக்கமாக நடந்தாலே போதுமானது.

ஆகவே கெட்ட ஒழுக்கத்தைக் கைவிடவேண்டுமென்பதாம்.

உ௬. கள்ளாமை

பிறர் இகழ்ச்சியை விரும்பாதவன் வேறொருவன் உடைமையைக் களவுசெய்யக் கருதக்கூடாது; அக் களவில் மனஞ் செல்லாது கட்டுப்படுத்தவும் வேண்டும். பிறனுடைய பொருளைக் களவுசெய்ய மனத்தாலும் நினைக்கக் கூடாது. நினைத்தால்கூட அது தீமையே கொடுக்கும். களவினால் கிட்டும் செல்வம் தொடக்கத்தில் பெருகி வருவதுபோல் தோன்றும். ஆனால் அது முடிவில் கெட்டொழியும். களவில் முதிர்ந்த விருப்பம் அதன் முடிவில் நீங்காத துன்பத்தையே கொடுக்கும். களவென்னும் பொய்யறிவு அளவை நூல்களை அறிந்தவரிடத்தே இருக்காது. அந் நூல்களை அறிந்தோரிடத்து அறம் நிலை பெற்றிருப்பதுபோலக் களவைக் கற்றுக்கொண்டோர் நெஞ்சில் வஞ்சகம் நிறைந்து நிற்கும். களவு ஒன்றையன்றி வேறு அறியாதவர் அக்களவை அளவுக்கு மிஞ்சச் செய்து அதனால் கெடுவர். அருள் ஒன்றையே கருதி அன்புடையவராக இருக்கும் இயற்கை, பிறர் சோர்ந்திருக்கும் காலம் பார்த்து அவர் பொருளைக்கொள்ள நினைப்பார்க்கு வராது.

களவு செய்துகொண்டு வருவோர்க்குத் தம் உடம்புங் கூடக் கெடும். அக் களவில் சேராதவர்க்கு மேல் உலக இன்பமும் கிட்டும்.

ஆகவே களவை விரும்பாது இருப்பதே உயர்ந்த அறமாகு மென்பதாம்.

௩௦. வாய்மை

யாருக்கும் எதற்கும் தீங்கு நேராதபடி சொல்வதே உண்மையாகும். ஒருவன் பொய் சொன்னாலும் அதனால் வேறொருவர்க்கு நன்மை தருமானால் அஃது உண்மையே ஆகும். ஆதலால், தன் நெஞ்சறியப் பொய்சொல்லாதிருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் மனச்சான்றை மறைத்துப் பொய் சொன்னால் அப்பொய் வெளிப்பட்டபோது அந்த மனமே தன்னை வருத்தும். ஒருவன் தன் மனமாரப் பொய் சொல்லாது வாழ்ந்தானானால், அவனை உலக மக்கள் யாவரும் போற்றுவர். அவன் தவமும் தானமும் தவறாமல் செய்து வருகின்றவனைப் பார்க்கினும் சிறந்தவன் ஆகின்றான். ஆகையால் மெய்ம்மை பேசுவதைப்போல் வேறொன்றும் புகழ் தராது. அஃது ஒன்றே எல்லா அறத்தையும் சேர்த்துக் கொடுக்கும். ஒருவன் உண்மையே பேசுவது, உண்மையே பேசுவது என்று உறுதி கொண்டு உண்மையே பேசிவந்தால், அவன் வேறு எந்த அறமும் செய்யவே, செய்யவே வேண்டுவதில்லை. இதுவே எல்லா அறத்தையும் கொடுக்கும். உடம்பைத் தூய்து ஆக்குவதற்கு நீரொன்றாலேயே முடிகின்றது. அதுபோல மனம் தூயதாவதற்கு உண்மையொன்றாலேயே முடியும். வெளி இருளைப் போக்கும் விளக்குகளெல்லாம் உள்ளிருளைப் போக்கமாட்டா; உள் இருட்டைப் போக்கும் உண்மை விளக்கே சிறந்த விளக்காகும். நம்மால் ஆராய்ந்து பார்த்தவரையில் உண்மையைப் போல உயர்ந்தது ஒன்றிருப்பதாகத் தோன்றவில்லை.

ஆகவே, உண்மையையே உயர்ந்த கடமையாகக் கொண்டு பேசிவரவேண்டுமென்பதாம்.

ருக. வெகுளாமை

தனக்குக் கீழ்ப்பட்டவரிடம் சினத்தை அடக்கிக் கொண்டவனே சினத்தை அடக்கினவன் ஆவான். அதை விட்டுவிட்டுத் தன்னின் மேற்பட்டவரிடம் சினத்தை அடக்கினுலென்ன? அடக்காதிருந்தால் என்ன? ஏனெனின்? தனக்கு மேலானோரிடம் செலுத்தும் கோபத்தால் தனக்குக் கெடுதலே வரும். கீழானவரிடம் செலுத்தும் கோபத்தாலும் நன்மையில்லை. ஆதலால் வெகுளி வராதபடி அதை மறந்துவிடுதல் நல்லது. யாரிடத்து வெகுண்டாலும் அதனுல் கிடைப்பது தீமையே. அச் சினம் முகமலர்ச்சி அகமகிழ்ச்சிகளை ஒழித்து விடுகின்றது. அதனுல் இக் கோபத்தைப் பார்க்கினும் ஒருவனுக்கு வேறு பகையென்ன இருக்கின்றது? தன்னைத் துன்பத்தினின்றும் காத்துக்கொள்ள விரும்பினுல் கோபத்தை அடக்கிக் கொள்ளவேண்டும். அஃதை அடக்காமல் விட்டுவிட்டால் அக் கோபம் அதை உடையவனைக் கொன்றுவிடும். சினமென்னும் நெருப்பு அதற்கு உரியவனைக் கொல்வதோடு நில்லாமல் அவன் இனத்தையும் கூடச் சுட்டெரித்து விடும். நிலத்தில் அறைந்தவன் கை தவருமல் நிலத்தில் அடிபடுவதைப்போல் சினம் உடையவனும் கெடுவது உறுதியானது. தீச்சுடர் சுடுவதுபோல் துன்பஞ் செய்தவர் தன்னிடம் நன்மை வேண்டி வந்தால் அவரைக் கண்டவுடன் சினம் வராமல் நடப்பது மேலான புண்ணியம். சினமுள்ளவர் உயிருடன் இருந்தாலும், இறந்தவர்களைப் போன்றவரே. அச் சினத்தை விட்டோர்கள் பற்றெல்லாம் விட்ட பெரியோரினும் உயர்ந்தோராவர்.

ஆகவே வெகுளியில்லாமல் இருப்பதுவே சிறந்த குணமென்று கூறலாம்.

௩௨. இன்னா செய்யாமை

எல்லாச் சிறப்பையும் தருகின்ற செல்வத்தைப் பெற்ருலும் பிறர்க்குத் துன்பஞ் செய்யக்கூடாது. அதுவே, குற்றமற்ற பெரியோரின் குறிக்கோள்; அது சினத்தால் ஒருவன் துன்பஞ் செய்தால், தானும் அதற்குத் துன்பஞ் செய்யாமல் இருப்பதுவே ஆகும். ஒருவர் தாமாகவே ஒருவனுக்குத் துன்பங் கொடுத்தால் அவருக்கு அது நீங்காத் துன்பத்தைக் கொடுக்கும். ஆகவே, துன்பஞ் செய்தவரைத் தண்டிப்பது, அவர் நாணி ஒடுங்கும்படி அவர்க்கு நன்மை செய்வதே. வேறொரு உயிர்க்கு வந்த துன்பத்தைத் தனக்கு வந்ததுபோல் எண்ணித் துடி துடித்து அதைப் போக்கவேண்டும். அப்படி நீக்காவிட்டால் அறிவு பெற்றிருந்தும் அவ்வறிவால் பயன் இல்லை. இது துன்பமானது என்று கண்டறிந்த செயலை யாருக்கும் செய்வது கூடாது.

ஒருவன் தனக்குவந்த துன்பத்தை அனுபவித்திருந்தும் என்ன நினைத்து மற்ற உயிர்களுக்குத் துன்பஞ் செய்கின்ருன்? எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் மனத்தால், எண்ணித் துன்பம் செய்யாமலிருப்பதே சிறந்த புண்ணியம். ஒருவனுக்கு மற்ருெருவன் முன்னேரத்தில் ஒரு துன்பத்தைச் செய்தால் அதற்குப் பின்னேரத்தில் அத் துன்பம் தனக்குத் தானே வந்து சேரும். ஆதலால் ஒருவனுக்கு ஒரு துன்பஞ் செய்தால், அத் துன்பம் தனக்கே திரும்பிவந்து சேருகின்றது. எனவே, துன்பத்தை வெறுப்பவர் எவரோ அவர் யாருக்குமே துன்பஞ் செய்யமாட்டார்.

ஆகவே ஒருவர்க்கும் துன்பஞ் செய்யாத பேரறமே சிறந்தது என்னலாம்.

கூகூ. கொல்லாமை

அறத்தினது செய்கையாவது ஓருயிரையும் கொல்லா திருத்தலே. அப்படிக் கொன்ருல் அதுவே பாவச்செயல் எல்லாம் தரும். தேடியவற்றைப் பகுத்துக் கொடுத்து அதனல் பலவுயிரையும் பேணுதல் சிறந்த புண்ணியம். கொலேயைத்தடுக்கும் வழியுமாகும். முதன்மையான அறம் எந்த உயிரையும் கொல்லாமல் இருப்பது. அதற்கு அடுத்தபடியாக உள்ள அறம் பொய் பேசாமல் இருப்பது. நல்ல நெறியென்று சொல்லப்படுவது எவ்வுயிரையும் கொல்லாமல் பாதுகாக்கக் கருதும் நெறியே. பிறப்பு இறப்புக்கு அஞ்சித் துறவு பூண்டவரைப் பார்க்கினும் கொல்லா அறத்தைக் கொண்டவனே உயர்ந்தவன் ஆவான். ஆதலால் தன்னுயிர் போவதாக இருந்தாலும் வேருேர் உயிரை உடலேவிட்டுப் பிரிக்கும் கொலே செய்தல் கூடாது. அதனல் நன்மை கிடைப்பதாக இருந்தாலும் கூட அதில் கிடைக்கும் நன்மை மிகவும் தாழ்ந்தது. கொலேத்தொழில் செய்யும் மனிதர் அதன் இழிவைக் கருதும் நல்லோரால் புலேயராகவே கருதப்படுவர். பார்ப்பவர் அருவருக்கும் நோய்கொண்ட உடம்பும் வறுமையும் உடையவர்களே முன் பிறவியில் கொலேத்தொழில் செய்தவராவர். ஆகவே, கொல்லாத அறத்தை விடாமற் கொண்டிருப்பவனேக் கூற்றுவன்கூட, 'இவனே நாம் எப்படிக் கொல்வது' என்று எண்ணி அவனேக் கொல்வதற்கு வரமாட்டான்.

ஆதலால் கொல்லாத அறம் எல்லாவற்றினும் மேம்பட்டது என்னலாம்.

௩௪. நிலையாமை

நிலையில்லாத உலகத்தை நிலையுள்ளதென்று நினைக்கிற சிற்றறிவு மிகவும் கீழ்ப்பட்டது. பெருஞ் செல்வமாகச் செல்வம் பெருகி வருவது நாடகசாலைக்குக் கூத்துப் பார்க்க வருகின்ற கூட்டத்தைப் போன்றது. அச் செல்வம் குறைந்து பின் அழிவதும் அக் கூட்டம் சிறிது சிறிதாகப் போவதைப் போன்றது. எனவே செல்வம் நிலையானது இல்லை. ஆதலால் உலகத்தில் நிலைக்கக் கூடியவற்றையே செய்யவேண்டும். நம் உடம்பும் நிலையில்லாதது; நேற்றிருந்தான் ஒருவன், அவன் இன்றைக்கு இறந்தானென்று கேள்விப் படுகின்றோம். இதுதான் உலகில் மிகுதியாக இருக்கின்றது. மக்கள் கண் இமைப்பொழுது நேரங்கூட 'இருப்போ'மென்று கருத முடியாது. அவ்வாறிருந்தும் அவர்கள் நினைக்கின்றவையோ ஒரு கோடியல்ல; எத்தனையோ கோடி அளவில்லாதவைகளை எண்ணுகிறார்கள்.

உடம்புக்கும் உயிருக்கும் இருக்கிற நட்பு பறவைக் கூட்டிற்கும் பறவைக்கும் இருக்கிற நட்புப்போல் என்றும் நிலையில்லாதது. ஒருவனுக்கு உறக்கம் வருவதுபோல் சாவு வருகின்றது; உறங்கினவன் விழித்தெழுவதுபோல் பிறப்பு வருகின்றது. தனக்கென ஒரு வீடு இல்லாமல் ஒட்டுக் குடியாக இவ்வுடலில் தங்கி வருகின்ற உயிர்க்கு இதுவரையும் தனி வீடாக ஒன்று அமையவில்லை போலும்.

ஆகவே ஒவ்வொருநாளும் நாள் ஒன்றுபோல் தோன்றுகிறது; அது முடிவில் உயிரைப் போக்கும் வாளாக மாறுகின்றது; அதுவும் அறிவாளிகளுடன் கூடுவதால்தான் தெரிகின்றது. நாவை உள்ளிழுத்துப் பேசவொட்டாமல் செய்யும் விக்கல் வருவதற்கு முன்பே நல்ல அறங்களைச் செய்தல் வேண்டும்.

ஆதலால் நிலையில்லாதவற்றில் பற்றுவைத்தலால் பயன் இல்லை யென்பதாம்.

கூரு. துறவு

ஒருவன் எதை எதைவிட்டு நீங்குகின்றானே அதத ஞல் வரும் துன்பத்திலிருந்து அவன் வருந்தமாட் டான். எல்லாப் பற்றுக்களையும் விட்டவனுக்கு இன் பங்கள் உண்டு. அவைகளை விரும்பினால் பற்றுதலை விட்டுத் துறக்க வேண்டும். அப்பற்றினால் வரும் ஐந்தாசை களையும் விட்டுவிடுதல் வேண்டும். தனக்கென உள்ள எந்தப் பொருளின் பற்றையும் துறக்க வேண்டும்.

தவஞ் செய்வார்க்கு எப்பொருளிலும் பற்று இல்லா மல் இருப்பதுவே இயற்கையானது. அதை விட்டுவிட்டு ஏதேனும் ஒன்றைப் பற்றிக்கொண்டிருப்பது மீண்டும் தவத்தைக் கெடுப்பதாகும். பிறப்பை ஒழிக்க நினைத்த வர்க்கு உடம்பும் ஒரு சுமையாகத் தோன்றும்; அப்படி யானால், அவர்கட்கு உலகத்தில் வேறென்ன தொடர்பு உண்டு?

'யான்' 'எனது' என்னும் பாசத்தைக் கெடுத்த வனுக்குத் தேவர்க்குங் கிட்டாத இன்ப உலகம் கிடைக் கும்; பற்றை விடாமல் பிடித்துக்கொண்டு இருப்பவர்க் குத் துன்பங்களும் பற்றிக்கொண்டு விடமாட்டா; எல்லாப் பாசங்களையும் கடந்தவரே வீட்டுநெறிக்கண் நின்றவராவார்; அப் பாசத்தைக் கடவாதவர், பிறப்பு இறப்பு வலையில் அகப்பட்டுக் கொண்டவரேயாவர். பற்றற்றால் தான் ஒருவன் பிறப்பை அறுப்பான்; பற்று விடாதவனுக்கு மேலும் மேலும் பிறப்பு வந்துகொண்டே யிருக்கும்.

ஆசைக்கட்டு நீங்கவேண்டும்; அதற்கு எல்லாக் கட்டுக்களையும் கடந்த இறைவன்பால் அன்பைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

ஆகவே எல்லாப் பற்றையும் விட்டு நீங்குதலே துறவாகு மென்பதாம்.

---

௩௬. மெய்யுணர்தல்

பொய்யான பொருளை மெய்யானது என்று நினைக்கும் மயக்கத்தால் கிழான பிறப்பு உண்டாகும்; மெய்யறிவு பெற்றவர்க்குப் பிறப்பு நீங்கும்; வீட்டின்பம் கிடைக்கும். ஐயம் நீங்கி உண்மை தெளிந்தவர்க்கு இம் மண்ணுலகத்தைவிட வீட்டுலகம் பக்கத்திலேயே இருப்பதாகும். ஐந்தாசைகளையும் அறுத்தவர்க்கும் மெய்யறிவு இல்லாவிட்டால் பயனில்லை. எந்தப் பொருள் எப்படியெப்படி இருந்தாலும், அந்தப் பொருளின் உண்மையைக் கண்டு தெளிந்து அறிவதே அறிவிற் சிறந்த அறிவாகும்.

உண்மைப் பொருளைக் கண்டுகொண்டவர்களே இவ்வுலகில் மீண்டும் பிறவாதவர் ஆவார். உண்மையானதை ஒருவன் அறிந்துவிட்டால், அவனுக்கு இனிப் பிறவி வருமென்று நினைக்க வேண்டுவதில்லை. பிறப்பு என்னும் துன்பங்கெடச் சிறப்பான உண்மைப் பொருளைக் காண்பதுவே மெய்யறிவாகும். எல்லாவற்றிற்கும் அடிப்படையான உண்மையை உணர்ந்து நடக்கவேண்டும்; அவ்வாறு நடந்தால் அதையழித்துவிட்டுத் துன்பங்கள் அணுகா.

காமம் சினம் அறியாமை என்னும் இம் மூன்றின் பெயர்கூடத் தம்மிடம் வாராமற் காத்தால், அவைகளால் வரும் வினைகள், தம்மிடம் வாராமற் கெடும்.

ஆதலால் மெய்யறிவே பிறவியை அறுக்கும் மருந்து என்று சொல்லலாம்.

கூஎ. அவா அறுத்தல்

அவா! என்னும் ஆசையே பிறவிக்கு நல்ல விதை. அது எல்லா உயிர்க்கும் எந்தக் காலத்தும் வரும். ஒருவன் ஒன்றை வேண்டினால் பிறவாமல் இருப்பதையே வேண்டவேண்டும். அப் பிறப்பு ஒழிவது ஆசை அற்றால் தான். ஒன்றிலும் ஆசை கொள்ளாததைப் போல் சிறந்த செல்வம் வேறொன்றுமில்லை. எங்குப் பார்த்தாலும் அதை ஒத்ததும் இல்லை. ஒருவர்க்கு வீட்டுக்கு வழியென்று சொல்லப்படுவது அவாவில்லாமல் இருப்பதுவே; அதுவும் உண்மையுணரத் தானே வரும். பிறவியற்றவர் என்றால் அவாவை அறுத்தவரே. அவ்வாறின்றி ஆசையறுதவர் பிறவியற்றுப் போனவராகச் சொல்ல முடியாது. ஒருவனை வீட்டு நெறி சேராமல் கெடுப்பது அவாவே. அதை அஞ்சித் தம்மிடம் வராமல் காப்பதுவே துறவறமாகும். அவாவை மிக அறுத்துவிட்டால் அவனுக்குக் கெடுதல் இல்லாத வழி வேண்டிய அளவு தானே வரும். அவா இல்லாதவர்க்குத் துன்பமேயில்லை. அஃதுள்ளவர்க்கோ எல்லாத் துன்பமும் வரும். துன்பத்தில் துன்பமாகிய ஆசை ஒருவனுக்கு அற்றுப் போனால் அவனுக்கு இடையறாத இன்பம் உண்டாகும். நிறைவில்லாமல் பெருகிக் கொண்டிருக்கும் தன்மையான ஆசையை ஒழிக்க வேண்டும்; ஒழித்து விட்டால் அதுவே பிறப்பு இறப்பு இல்லாத வீட்டுலக இன்பத்தைக் கொடுக்கும்.

ஆகவே, அவாவை அறுக்க வேண்டியது முதன்மையான தென்பதாம்.

---

௩௮. ஊழ்

ஒருவனுக்குப் பொருள் கைகூடிவருங் காலத்தில் முயற்சி தானே வரும். அப் பொருளை இழப்பதற்கு முயற்சி இல்லாமல் சோம்பலே உண்டாகும். உலகம் இரண்டு வேறுபாட்டோடு இருக்கிறது. அது பொருட் செல்வம் உடையார்; கல்விச் செல்வம் உடையார் எனத் தனித் தனியே கொண்டு இருப்பது; இவ்விரண்டும் ஒருவரிடத்தில் இருப்பது அரிது. அச் செல்வத்தைப் பெருக்க எண்ணினால் நல்லன தீயனவாக முடியும்; தீயன நல்லனவாக முடியும். ஆதலால் தனக்குக் கிட்டாத ஒன்றை 'வா' என்று அழைத்தாலும் வாராது; தனக்கு வருவதொன்றைப் 'போ' என்று துரத்தி விட்டுவிட்டாலும் போகாது. ஊழ்வினை வலிமையால் முன்பே வகுத்து வைத்தபடியே நடக்கும்.

கோடிக் கணக்காக ஒருவன் பணத்தைத் திரட்டி வைத்திருந்தாலும் அவனுக்கு ஏற்பட்ட அளவுக்குத் தான் அதை அனுபவிக்க முடியும். பொருள் மிகுதி அளவுக்குத் தக்கபடி நிரம்ப அனுபவிக்க முடியாது.

நன்மையாக எல்லாம் நடக்கும்போது அதை இன்பமாக நினைப்பவர், துன்பம் வருங்காலத்து ஏன் வருத்தப் படவேண்டும்? எவ்வளவோ நுட்பமான நூல்களைக் கற்றாலும் ஊழால் ஏற்பட்ட அவ்வவர் உண்மையறிவே மிகுந்திருக்கும். கற்றதற்காகத் தனியே மிகுந்த அறிவு வந்துவிடாது. ஆதலால், ஒருவன் ஊழ் வலிமையைக் கடந்து போக வேறொரு முயற்சி செய்தாலும் ஊழே அதையும் கடந்து தன் வலிமையைக் காட்டிவிடும்.

ஆதலால் ஊழைப் பார்க்கினும் மிக்க வலிமையுடையது வேறொன்றுமில்லை என்பதாம்.

உ. பொருட்பால்

௩௯. இறைமாட்சி

படையும் குடிகளும் செல்வமும் அமைச்சும் நட்பும் அரணும் ஆகிய அறுவகை உறுப்பும் உடையவன், அரசர்களுள் சிங்க ஏறுபோல் சிறந்தவனுவான். அவ்வாறமைந்த அரசனுக்கு எதற்கும் அஞ்சாதிருத்தல், ஈகைக் குணம், அறிவு, ஊக்கம் என்னும் நான்கு குணங்களும் நிரம்பியிருத்தல் இயற்கையாகும். இவைகள் நிரம்பிய அரசன், எச் செயல்களையும் விரைவில் முடித்தல், கல்வி, துணிவான செயல் இவைகளும் உள்ளவனுக இருத்தல் வேண்டும்.

இவ்வுடைமையெல்லாம் பெற்ற மன்னன், அற வழியில் வழுவாது, தீமையை நீக்கி, வீரத்தில் மிக்கவனுய் இருப்பானுனல் அவன் ஆட்சிபுரியும் ஆளுகை 'அரசு' ஆகும். அவ்வரசு நாட்டுக்கு வேண்டும் பொருளை, அது வரும் வழியில் மேன்மேல் வளர்த்தல், வந்த பொருளைத் திரட்டி வைத்தல், அத் திரட்டிய பொருளைப் பாது காத்தல், ஆகிய துறைகளில் வல்லமையுடைய தாகுதல் வேண்டும். அச் சிறந்த மன்னன், யாவரும் எளிதிற் காண அமைந்தவனுக, இன் சொல்லே பேசுபவனுக, இருப்பானுனல், உலகத்தார் அவனையே மிக உயர்த்திக் கூறுவர். இன்சொல்லோடு ஈகைக் குணம் வாய்ந்த அவ் அரசனை, உலகம் புகழ் கூறிப் பெரிதும் பாராட்டும்; அவன் நினைத்தனவெல்லாம் கைகூடும். இம் முறையில் மக்களைக் காத்து வரும் மன்னனை மேற்பட்ட கடவுளாகக் கருதி மேல் நிலையில் வைத்து மக்கள் போற்றுவர். கேட்கும் காதுகள் வெறுக்கத் தக்க சொற்களைக் கேட்டும் பொறுமையுடனிருக்கும் அரசன் பண்பைப் பாராட்டி மக்கள் அவன் குடைக்கீழ் வாழ விரும்புவர்; வேண்டுவார்க்கு வேண்டியவை கொடுத்தல்; இரக்கம், நடுநிலைமை, குடிகளைக் காத்தல் என்னும் நான்குடன் விளங்கும் அரசன் அரசர்கட்குள்ளே விளக்கொளிபோல் மேன்மையனுவன்.

௪0. கல்வி

ஒருவன் கற்கவேண்டிய நூல்களை நன்றாகக் கற்க. அவ்வாறு கற்றவன், அக் கற்ற வழியிலேயே நடக்க வேண்டும். எண்ணென்று கூறப்படும் கணித நூலையும், எழுத்தென்று கூறப்படும் இலக்கண நூலையும் மக்கட்கு இரு கண்களென்று அறிந்தோர் கூறுவர். கண்ணுடையவ ரென்று உயர்த்திச்சொல்லப்படுவோர், கற்றவர்களே. மற்ற வர்கள் கண்கள் உடையவர்களானாலும் நல்லன அறிவிக்கும் கல்வியின்மையால் அவை முகத்தில் இரண்டு புண்களாம்.

செல்வமுள்ளவனிடத்தில் வறியவர் குறையிரந்து நின்று அவரிடம் செல்வப் பொருளைப் பெறுவது போலக் கல்விப் பொருளையும் அஃதுடையாரிடத்துப் பணிந்து நின்று கேட்டுக் கற்றரே உயர்ந்தோராவர். அதற்கு நாணமுற்றுக் கல்லாதவர், இழிந்தாராவர். மணற்பாங் குள்ள நிலத்தில் தோண்டிய கிணறு தோண்டிய அள வுக்கு நீர் ஊறும்; அதுபோல, மக்கட்குத் தாம் கற்ற அளக்குவு அறிவு மேலோங்கி நிற்கும். கற்ற ஒருவனுக்குத் தன்னுடையன்றி எல்லா நாடும், எல்லா ஊரும் தன் நாடு போல் எல்லாங் கொடுத்துப் பயன் தரும். அவ்வாறிருக்க ஒருவன் என்ன காரணத்தால் தான் வயது முதிர்ந்து சாகுங்காலம் வரையிலுங்கூடக் கற்காமல் காலங் கழிக் கின்றானோ? ஒரு பிறப்பிற் கற்ற கல்வி, அவன் ஏழு பிறப்புக்களினும் வந்து பயன் கொடுக்கும். அது, கூடிப் பேசி, அளவளாவி மகிழ்ந்து, பின்பு பிரியுங்கால் 'இனி எக்கால் இவரைக் காண்போ'மென்று நினைக்கச் செய்யும் தகுதியுடையது. புலவர் தொழிலும் அதுவே. கல்வி யால், கற்ற தாம் இன்பமடைவதோடல்லாமல், உலக மக் களும் இன்பமடைவது தெரிந்து கற்றறிந்தார் அக் கல்வியை மேலும் மேலும் விரும்புவர். ஆதலால் என்றுங் கெடாத உயர்ந்த செல்வம் கல்வி ஒன்றே. மற்றச் செல் வங்கள் அழிந்து போவதால் செல்வங்கள் ஆகா.

ஆகவே, கல்வியே சிறந்த செல்வம் என்பதாம்.

௪௧. கல்லாமை

ஒருவன், நூல்களில் எதையும் படிக்காமல் கற்றோர் கூடிய அவையில் ஒன்றைப் பேச முன்வருதல், குறித்த இடம் (கட்டம்) இல்லாமல் உண்டை உருட்டிச் சூதாடுதற் போல் பயன்படாது போகும். கல்வியில்லாதவன், கற்றோர் அவையில் ஒன்றைக்கூற விரும்புதல், இரு கொங்கைகளும் இல்லாத பெண்தான் சிறந்த அழகி யென்ற எண்ணத்தைப்போல் சிறப்புறுது. அது, நகைப்புக்கிடம்.

கற்றோர் அவையில் ஒன்றும் பேச எண்ணுதிருந்தால், கல்லாதவர்களும் மிக நல்லவர்களென்றே சொல்லலாம். ஏனெனின், கல்வியில்லாதவனுடைய கூர்மையான அறிவு, மிக உயர்ந்ததாக இருந்தாலும் கற்றோர் அதனைப் புறக்கணித்து விடுவர்; கல்லாதவன் ஒன்றைச் சொன்னால், கற்றவன் அதில் ஏதுங்கேட்டால் விடை தெரியாது விழிப்பன். கல்லாதவர்கள், உயிரோடு இருக்கின்றார்களென்ற ஒன்றேயன்றி அவர்கள் உவர் நிலத்தைப் போலப் பயனற்றவர். கல்லாதவன் தோற்றமும் அழகும், உள்ளறிவு இல்லாமையால் பாவையின் அழகைப்போல் பயனற்றன.

கல்லாதார் செல்வமுள்ளவராக இருப்பினும், அவர் செல்வம், யாருக்கும் பயனில்லாமல் தீமையே தரும்; ஆதலால், நல்லாரிடத்து உண்டான வறுமையிலும் இச் செல்வம் துன்பந் தருவதாம்; கல்லாதவர் உயர்ந்த குடியிற் பிறந்திருந்தாலும் கீழ்க் குடியிற் பிறந்த கற்றவர் பெருமை அவர்க்கு வராது; கிட்டாது; ஆகவே, மாடு ஆடுமுதலிய விலங்குகளோடு, கல்லாதவர்களை ஒப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும்.

ஆகவே, கல்லாமையானது மிக்க இழிவுடையது என்பதாம்.

௬௨. கேள்வி

ஒருவனுக்குச் செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமாவது, காதாற் கேட்கப் பெறும் கேள்விச் செல்வம் ஒன்றே. அச் செல்வம், மற்ற எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது; உயர்ந்தது. காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோதுதான், சிறிது வயிற்றுக்கு உணவு ஊட்ட வேண்டும்.

செவியுணவென்னும் கேள்வியையுடைய மக்கள், அவியுணவை உண்ணும் மேலோரோடு ஒத்த உயர்ந்த தன்மையராவர். ஆதலால் ஒருவனுக்குக் கல்விகற்க வாய்ப்பில்லாது போனாலும் கற்றோர் சொல்லும் அரும் பொருள்களைக் கேட்குக. அக் கேள்வியறிவு தனக்குத் தளர்ச்சி வந்த காலத்து ஊன்றுகோல்போல் வந்து தாங்கும். வழுக்கித் தள்ளும் சேற்று நிலத்தில் ஊன்று கோல் தாங்கி உதவுவதுபோல, ஒழுக்கத்தில் மிக்கவர் கூறும் அறவுரைகள், ஒருவனுக்கு மனத் தளர்ச்சி யேற்பட்ட காலத்து வந்து அத் தளர்ச்சியைப் போக்கும்.

ஆகையால் ஒரு சிறிதளவாவது, நல்ல அறவுரைகளைக் கேட்டல் வேண்டும். அக் கேட்ட அளவிற்கு அது, நிறைந்த பெருமையைக் கொடுக்கும்; கல்வியை நுணுகிக் கற்றறிந்து, அதன் மேலும் மிக்க கேள்விச் செல்வமும் பெற்ற நல்லோர், ஒரோ ஒருகால் ஒன்றை மாறுபாடாகக் கருதிய காலத்திலும் அறிவற்ற சொற்களைக் கூறார். இவ்வாறான கல்வி கேள்வியைக் கேட்க விரும்பாதவர் காதுகள், பிறவற்றைக் கேட்பனவானாலும் அவை செவிட்டுக் காதுகளே. நுட்பமான கேள்வி இல்லாத மக்கள், பணிவுள்ள சொல்லுடையவராக இருத்தல் முடியாது. இக் கேள்விச் சுவையைக் கேட்காமல் வாயாற் சுவை பார்த்து உண்ணும் அறிவற்ற மாக்கள், உலகில் இருந்தும் பயனென்ன? செத்தும் ஆவதென்ன? ஒன்றுமில்லையே.

ஆகவே, யாவரும் கேள்வியுணர்வுடையராக இருத்தல் வேண்டுமென்பதாம்.

௬௩. அறிவுடைமை

ஒருவனுக்கு அறிவு ஒன்றுதான் கெடுதல் வராமல் காக்கும் கருவியாகும். அதுவுமன்றி அது, பகைவரால் அழிக்கமுடியாத உள்கோட்டையுமாகும். அவ்வறிவு, மனதைச் சென்ற இடத்தெல்லாம் செல்லவிடாது; தீமையையெல்லாம் போக்கும்; நல்ல வழிகளில் செலுத்தும். எந்த எந்தப் பொருள்கள் எவ்வெவ்வாறு இருக்குமோ அந்த அந்தப் பொருள்களை அவ்வவ்வாறு கண்டு உணரச் செய்யும். அவ்வறிவு தான் நுட்பமான பொருள்களையும் பிறருக்கு எளிதில் உணரும் வண்ணம் சொல்லுமாறு செய்ய வல்லது. அது, நுட்பமான பொருள்களைப் பிறர் சொல்லக் கேட்பிப்பது; கேட்டு, அதன் உண்மைகளை அறிந்துணரச் செய்வது; ஒருகால் முகம் மலர்ந்தும் ஒருகால் முகம் வாடியும் இல்லாமல் என்றும் ஒரே தன்மைத்தாய் இருக்குமாறு ஆக்குவது.

உலகம் எவ்வாறு நடக்கிறதோ? அவ்வுலகத்தோடு ஒட்டி ஒருவன் நடப்பதே அறிவுடைமை. ஆதலால், அறிவுடையவரென்று சொல்லப்படுபவர், பின் வரக்கூடியவைகளை முன்பே அறிய வல்லவரே. அதை அறிய மாட்டாதவர், அறிவில்லாதாரே. அறிவில்லாமையென்று சொல்லப்படுவது, தீய செயல்களுக்கு அஞ்சாத தன்மையே. தீய செயல்களுக்கு அச்சங் கொள்வதே அறிவுடையார் தொழில். அன்றியும் பின்வரக் கூடியவற்றை முன்பே ஆராய்ந்தறிவதே அறிவு. அவ்வாறறிந்து தமக்கு வரும் தீமையை வாராமல் முன்பே தடுப்பர்; அதனால் அவர்க்கு நடுக்கங் கொள்ளுமாறு வருந் துன்பம், உண்டாகமாட்டாது. ஆதலால் உலகில், அறிவுடைய மக்களே எல்லாச் செல்வமும் ஒருங்கே படைத்தவர் ஆவர். அஃதில்லாதவர்க்கு எல்லாச் செல்வமும் வாய்த்திருப்பினும் அவை யெல்லாம் இல்லாதவரேயாவர்.

ஆகவே, மக்களாய்ப் பிறந்தோர் அறிவுடையராக இருக்க வேண்டுமென்பதாம்.

சச. குற்றங்கடிதல்

செருக்கு வெகுளி காமம் முதலிய குற்றமற்றவரின் செல்வம் மேலும் மேலும் உயரும் தன்மையுடையது. அரசனுக்குக் குற்றமாவன கொடுக்க வேண்டிய பொருள் களைக் கொடாதிருத்தலும், அளவு கடந்த பெருமையும், அளவற்ற மகிழ்ச்சியுமாகும். இக்குற்றங்களுள் தினையளவு சிறுகுற்றம் தன்னிடம் நேர்ந்தாலும் அதனைப் பனையளவு பெரிதாகக் கருதி, அதனால் வரும் பழிக்கு நாண மடைவர்.

ஆதலால் குற்றமே ஒருவனுக்குக் கேடு தரும் பகை யாகும். எனவே ஒருவன் குற்றம் தன்பால் வராமல் காக்க வேண்டும். இக்குற்றங்கள் தனக்கு வருமுன் காவாதவனுடைய வாழ்க்கை, தீமுன் இருக்கும் வைக் கோற் போர்போல் அழிவடையும்.

ஒருவன் தன் குற்றத்தை முன்னரே யறிந்து நீக்கிப் பின் மற்றவர் குற்றத்தைக் கண்டு திருத்த வல்லவனா னால், அவனிடம் குற்றம் ஏது? செய்யக் கூடியவற்றைச் செய்யாது இவறன்மை (உலோபம்) உடையவன் செல்வம் பின் தானாகவே அழிந்து போகும்.

பொருள் மேல் கடும்பற்று வைத்து நடக்கும் குற்றம், மற்றக் குற்றங்களோடு சேர்த்து எண்ண முடியாது. இது அந்த எல்லாக் குற்றங்கட்கும் மேம்பட்டது. எந்தக் காலத் திலும் ஒருவன் தன்னைச் செருக்கால் உயர்த்திக் கொள் ளாது நடக்க வேண்டும். தீமைதரும் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

தான் விரும்பியவற்றை அவ்விருப்பமும் அறியாத படி அவ்வளவு மறைவாய் நுகரக் கூடியவனாக இருந்தால், பகைவரால் தன்னை வெல்ல எண்ணிய எண்ணம் வீணாகும்.

ஆகவே, குற்றத்தை நீக்கி நடக்க வேண்டும் என்பதாம்.

௪௫. பெரியாரைத் துணைக்கோடல்

ஒருவன், அறத்தின் தன்மை தெரிந்து, அவ்வறத்தினால் முதிர்ந்த பெரியாரின் நட்பை நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். தனக்கு வந்த துன்பங்களை நீக்கி, அத் துன்பம் வராதபடி முன்னரே காக்கும் தன்மையுடையாரைத் துணையாகக் கொள்க. அப்பெரியாரைப் பேணித் தமக்கு உரியராகக் கொண்டு நடக்கும் செயலானது, அருமையானவை இவையென்று கருதப்படுபவை எல்லாவற்றிலும் மிக அருமையானதாகும்.

தமக்கு மேலானவர்க்கு நண்பராக நடத்தல், எல்லா வலிமையினும் முதன்மை பெற்ற வலிமையாகும். அரசியலானது அமைச்சரைக்கொண்டு நடத்தலால் அரசன் அத்தகைய பெரியோரை யாய்ந்து துணையாகக்கொள்ள வேண்டும். நல்லோர் நட்பாளனாக நடக்கும் ஒருவனைப் பகைவரால் வெல்ல முடியாது. தீய செயலைக் கண்டால் இடித்துரைத்துத் திருத்தவல்ல நல்லோருடைய நட்புடையவரைக் கெடுக்கும் பகைவர், உலகத்தில் யாருமில்லை. திருத்தி அறவுரை கூறவல்ல பெரியார் சார்பற்ற காவலிழந்த மன்னனை, ஒருவரும் கெடுக்க முற்படவேண்டுவதில்லை. தானாகவே, போகா வழி போய்க் கெட்டழிவான்.

முதலில்லாத வணிகர்க்கு ஊதியம் வருவதில்லை. அது போலத் தம்மைத் தாங்கும் துணைச் சார்பில்லாத அரசர்க்குக் கெடாத நிலைமை ஒன்று உண்டாகாது. ஒருவன் பலருடன் பகை கொண்டு அதனால் வரும் துன்பத்தைப் பார்க்கினும் நல்லோர் நட்பை விட்டு நீங்குதலால் பத்து மடங்கு தீமை உண்டாகிக் கெடுவான்.

ஆதலால் யாவரும் பெரியோர்களையே தமக்குத் துணையாகக் கொள்ள வேண்டுமென்பதாம்.

௪௬. சிற்றினஞ் சேராமை

பெரியோர் சிறு கூட்டத்தாரைச் சார அஞ்சுவர். சிற்றினத்தாரோ தம்மோடு ஒத்தாருடன், சேர்ந்தபொழுதே தமக்குச் சுற்றமாகக் கொண்டு விடுவர். ஆதலால், நிலத்தின் தன்மைக்கேற்ப நீரினது தன்மை வேறுபடுவது போல, மக்களும் தாம் சார்ந்த இனத்துக் கேற்ப, அறிவு வேறுபாடு அடைவர். மக்கட்கு அறிவானது, தம் மனம் காரணமாக உண்டாகும். அவ்வறிவு, மனத்தின் கண்ணே உண்டாவது போல வெளிக்குக் காட்டினாலும், தாம் சார்ந்த இனத்தினது அறிவே மேலோங்கி நிற்கும். மனத்தின் தூய்மையும் செயலின் தூய்மையும் ஆகிய இரண்டும், தாம் சார்ந்த இனத்தினால் தூயதாம் தன்மை பற்றுக் கோடாக உண்டாகும்.

ஆதலால், மனத்தூய்மை உடையவர்க்கு நன்மக்கட் பேறு கிடைக்கும்; நல்லினத்தைச் சார்ந்து நடப்போர்க்கு எல்லாம் நன்மையாகவே முடியும். மனத்தூய்மையை நிலையாகக் கொண்ட மக்கட்கு, அது, செல்வத்தைக் கொடுக்கும்; நல்லினத்தார் சேர்க்கை, எல்லாப் புகழையும் கொடுக்கும். இயற்கையாகவே மனநன்மை வாய்க்கப் பெற்றவர்க்கு, நல்லோர் சேர்க்கை, மிக்க வலிமையைத் தரும்.

நல்ல மனத்தைப் பெற்றார்க்கு இம்மையில் அல்லாமல், மறுமையிலும் இன்பங்கிட்டும்; அவ்வின்பத்துக்கு வலிமையைக் கொடுப்பது, நல்லினத்தின் கூட்டுறவே யாகும். ஆதலால், நல்லினச் சார்புபோல் சிறந்த துணை, வேறொன்றுமில்லை; தீயினச் சார்புபோல் துன்பங் கொடுப்பது, மற்றொன்றுமில்லை.

ஆதலால், சிற்றினத்தாரை விலக்கி, நல்லினத்தாரோடு கூடி வாழ வேண்டுமென்பதாம்.

சுஎ. தெரிந்து செயல்வகை

ஒருவன் ஒரு தொழிலை மேற்கொண்டு நடத்துங்கால், அதனால் அழிவதையும் அழிந்தபொருள் பின் கிடைப்பதையும், பின் அதனால் வரும் நன்மையையும் முன்பே நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்யவேண்டும். அதைச் செய்யுங்கால், தாம் அத்தொழிலை நடத்தத் தெரிந்த கூட்டத்தாரோடு தெளிந்து எண்ணிச் செய்யவேண்டும். அத்தகையோர்க்கு அருமையான கிட்டாத பொருள் உலகத்தில் ஒன்றுமேயில்லை.

ஆதலால், நன்மை தேடக்கருதி முதலினையும் இழந்து தவிக்குந் தொழிலை, அறிவுடையோர் தாம் மேற்கொண்டு நடத்தமாட்டார்கள்; அவர்கள், தாம் கண்டு தெளியாதவைகளையும் தொடங்கிச் செய்யமாட்டார்கள். நன்றாக எண்ணி முடிவு செய்யாது ஒன்றைத் துவங்குதல், பகைவருக்கு ஊக்கங் கொடுப்பதாக முடியும். ஆகவே, செய்யக்கூடாத வொன்றைச் செய்தால், அச் செயல் வீணாகும். செய்யக் கூடியவற்றைச் செய்யாவிட்டால் அதுவும் வீணாகும்.

ஒரு தொழிலைத் தொடங்குங்கால், நன்கு எண்ணியே தொடங்க வேண்டும். தொடங்கியபின் எண்ணுவோமென்றிருத்தல், தீமையையே தரும். முடியும் வழியறிந்து செய்யாத முயற்சி, பலர் துணைநின்று காத்தாலும் காக்க முடியாதுபோகும். நல்லனவற்றைச் செய்தாலும் அவரவர் தகுதிக்கேற்பச் செய்யாவிட்டால், அதனால் தவறுதலே உண்டாகும். ஆதலால், ஒருவன் தனக்குப் பொருத்தமற்றவைகளைச் செய்தால் உலகத்தார் வெறுப்பர். அவ் வெறுப்புக்கு இடனின்றி நன்கு ஆராய்ந்து ஒரு தொழிலை மேல் நடத்தல் வேண்டும்.

எந்த வேலையையும் நன்கு ஆராய்ந்தே செய்யவேண்டுமென்பதாம்.

௩அ. வலியறிதல்

ஒருவன் ஒன்றைச் செய்யப் புகுங்கால், செய்யப் போகும் தொழில் வலிமை, தன் வலிமை, பகைவன் வலிமை, துணையாளர் வலிமை இவைகளை நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து செய்தல்வேண்டும். தம்மால் ஆகுமவற்றை அறிந்து, அதிலேயே தம் கருத்தைச் செலுத்தி நடப் போர்க்கு முடியாத பொருள் ஒன்றுமேயில்லை. இதை யறியாது தம் மன எழுச்சியால் பகைவருடன் எதிர்த்து நின்று, அவரை வெல்ல வழியறியாமல் இடையில் கெட் டொழிந்தார் பலராவார். அடக்கமில்லாதவன், தன் வலிமையளவினை அறியாதவன், தன்னையே மேலாக எண்ணுவோன், விரைவில் கெட்டுவிடுவான். மயிலிறகு மிக மெல்லியது. அதை ஒரு வண்டியில் அளவுக்குமீறி ஏற்றினல் அவ் வண்டியின அச்சும் பாரந்தாங்காது முறிந்துபோகும். அதுபோல, வலிமையற்றூர் பலருக்கு முன்பு, வலிமைபெற்ற ஒருவன் நின்று எதிர்த்தால் கெட் டொழிவான்.

ஒரு மரத்தினது நுனிக் கொம்புவரை ஏறினவன், அந்த அளவோடு நிற்கவேண்டும். அதற்குமேல் தாவி ஏறினல் விழுந்து இறந்துபோவான். ஆகவே, தன் வலி மைக்கு மேற்பட்ட செய்கை, தனக்கே கெடுதியாம்.

ஒருவன் தன் கையில் உள்ள பொருளின் அளவு தெரிந்து செலவிடவேண்டும். அதுதான் பொருளைப் பாதுகாக்கும் வழியாகும். வருவாய் கூடுதலாக இல்லா விட்டாலும் குற்றமில்லை, செலவு குறைவாக இருக்கு மாறல். தனக்குள்ள பொருளினது அளவு இவ்வளவு தான் என்று அறிந்து வாழ்வு நடத்தாதவன் வாழ்க்கை, இருப்பதுபோல் தெரிந்து விரைவில் அழிந்துபோம். தனக்குள்ள பொருளின் அளவைச் சீர்தூக்கி அறிதல் வேண்டும். அப்படியின்றிச் செலவு செய்தால் தன் செல்வங் குறைந்து முழுதும் அழிந்துபோகும். ஆதலால் தன் வலிமை தெரிந்து நடப்பதேமேல்.

சுஅ. காலமறிதல்

தன்னைப் பார்க்கிலும் வலிமையுள்ள ஆந்தையைக் காக்கை பகற்காலத்தில் வென்றுவிடும். அதுபோல் அரசனும் தன் பகைவரை வெல்லும் காலத்தைப் பார்க்க வேண்டும். தன்பால் விட்டு நீங்காதவாறு செல்வத்தைக் கட்டுங் கயிறுவது, காலமறிந்து ஒரு தொழிலை நடத்துவதேயாகும்.

அரசன் ஒருவன் ஒன்றை முடிக்குங் கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செய்தால் அரசர்களால் செய்ய முடியாத செயல்கள் எதுவுமே இல்லை. காலமும் இடமும் பார்த்தறிந்து ஒருவன் ஒன்றைச் செய்யத் தொடங்குவானானால், இவ் வுலகம் முழுதையும் ஆளக் கருதினானாலும் அது அவனுக்குக் கைகூடிவரும். அதனால் உலகத்தைத் தமக்குள் அடக்கியாளக் கருதுவோர், அது கிட்டுங் காலத்தை எதிர்பார்த்து இருப்பார்கள்.

வலியவன், பகைவரை எதிர்க்காமல் அடங்கியிருப்பது, போர்க்கிடாயானது பாய்வதற்குக் கால்வாங்கிப் பின்னுற் போவதைப் போன்றதாம். ஒரு தொழில் கிட்டுங் காலம் வரையும் காத்திருந்தே முடிப்பர். ஒருவரை வெல்லக் கருதியவன், அக்காலம் கிட்டும்வரையும் அவரைக் கண்டாற் பணிந்து செல்க. முடியுங்காலம் கிட்டுமாயின் அவர் அழியுமாறு முடிக்க. தமக்கு ஆகுங்காலம் வந்து சேருமானால், அக்காலம் போகுமுன் விரைந்துமுடிக்க.

கொக்கானது, தனக்கு ஏற்ற இரை கிடைக்கும்வரை அடங்கியிருந்து, தக்க இரை கிடைத்தபொழுது, விரைந்து அவ்விரையைக் கொத்திக் கொள்ளுதல்போல, பகையை வெல்லுங் காலம் வரும்வரை எதிர்நோக்கி யிருந்து, அக்காலம் நெருங்கியவுடன் திடுமெனப் பகையை முடித்தல் வேண்டும்.

ஒருவன் ஒன்றைச் செய்யுங்காலம் பார்த்து முடிக்க வேண்டு மென்பதாம்.

---

௫0. இடனறிதல்

ஒருவன், தன் பகைவரை வெல்லும் இடங்கண்ட போது அல்லாமல், எதிர்ப்பதற்கு எதுவும் செய்தல் கூடாது. இகழ்தலும் ஆகாது; வலிமையுள்ளார்க்கும் அரணைச் சேர்ந்தால் ஆக்கம் உண்டாகும்.

வலிமையற்றோரும் தக்க இடனறிந்து தம்மைப் பாதுகாத்துப் பகைவரை எதிர்த்தால் வெல்ல வல்லவராவார். இடத்தினை யறிந்து அரணைப் பொருந்தி நின்று போர் செய்வாராயின் பகைவர் வெல்வோம் என்ற எண்ணத்தை யிழந்துவிடுவர். முதலையானது நீரில் இருக்குங்கால் மற்ற எல்லா விலங்குகளையும், மக்களையுங்கூட வென்று விடும். அதுபோல் தக்க இடத்திலிருந்தால் பகைவரால் வெல்லமுடியாது.

உருளை வலிமைபெற்ற நீண்ட தேரும் கடலில் ஓட மாட்டாது; கடலில் ஓடுகின்ற மரக்கலம் (கப்பல்) தரையில் ஓடாது. அதுபோல அவரவர்க்கேற்ற இடத்தில் இருந்தால்தான் வலிமை பெறமுடியும்.

பகைவர்களை வெல்லுதற்கு ஏற்ற இடத்திலிருந்து தொழிலை மேற்கொண்டால், துணையில்லாமலே அவரை வெல்லலாம். பெரும் படையோன் குறைந்த படையோன் இருக்குமிடத்திற்குப் போர் செய்யப்போனால், ஊக்கம் அழிந்துவிடுவான். பாதுகாப்பும் படைப்பெருக்கமும் இல்லாதவரையும் இருக்குமிடத்தில் வெல்லமுடியாது.

போர் வீரர்களைக்கூடக் கொல்லும் வலிமையுள்ள யானையை, அதன் கால்களை அமிழ்த்தும் சேற்று நிலத்தில் நரிகூடக் கொன்றுவிடும்.

ஆதலால், இடமறிந்தே எந்தத் தொழிலையும் தொடங்கவேண்டு மென்பதாம்.

ருக. தெரிந்து தெளிதல்

அறமும் பொருளும் இன்பமும் தன் உயிர்க்கு வரும் அச்சமும் என்னும் நான்கு நிலைகளை, ஒருவன்பால் கண்டு தெளிந்துகொண்டபின்பே, அவனை அத்தொழிலில் ஈடுபடுத்தவேண்டும். உயர்ந்த குடியிற் பிறந்து குற்றங்கள் இல்லாது, தமக்கு வருகின்ற குற்றங்கட்கு நாணுகின்ற தன்மையுடையவனே அதற்கு ஏற்றவன் ஆவான்.

கற்றற்கு அரிய நூல்களைக் கற்றுணர்ந்த அறிஞர் களிடத்தும் அறியாத்தன்மை இருப்பது இயற்கை. ஆதலால், அவற்றுள் அவர்பால் உள்ள நற்குணத்தை யும் தீக்குணத்தையும் ஆராய்க; பின்னர்த் தெளிக. அவற்றுள், நற்குணமிக்குள்ளவனை ஏற்றுக்கொள்க. ஒருவன் பெருமைப்படுதற்கும், சிறுமைப்படுதற்கும் அவ னவன் செய்யுந்தொழிலே உரைகல்லாக அமைந்துள்ளது.

சார்பு இல்லாதவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது. அவர்கள் தமக்குவரும் பழிபாவங்கட்கு அஞ்சமாட் டார்கள். அவர்மேல் பற்றுதல்கொண்ட காரணமாக தொழிற்கு உரிமை ஆக்கினால், அது எல்லா அறியாமை யும் கொடுக்கும். நன்கு தெரியாமல் தெளிந்தெடுத்தால் அது வழிவழியாகத் தீராத் துன்பந் தரும். யாரையும் அவர் தன்மை தெரியாது கொள்வதுகூடாது. அவர் தன்மை நன்கு தெரிந்த பின்பே முடிக்கக் கருதியவற்றை அவர்பால் முடிக்கவிடுக.

அரசன், ஒருவனை ஆராயாமல் தெளிதலும் தெளிந்த வன்பால் ஐயங்கொள்ளுதலும் நீங்காத துன்பத்தையே தரும்.

ஆதலால் யாரையும் நன்கு தெரிந்து தெளிந்தே அவரை அவ்வவ் வேலையில் விடவேண்டு மென்பதாகும்.

---

௫௨. தெரிந்து வினையாடல்

ஒரு தொழிலால் வரும் நன்மையும் தீமையும் நன்கு ஆராய்ந்து செய்தல் வேண்டும். பொருள் வருவாயை விரிவுபடுத்தல் வேண்டும்; அதனால் செல்வம் பெருக்குதல்வேண்டும்; இக் கருத்துடன் இருப்பவனே ஒரு தொழிலைச் செய்தற்கு உரிமையாவான்.

அன்பும் அறிவும் தெளிவும் ஆசை இன்மையும் உடையவனிடத்ததே தெளிவு. எவ்வளவு நன்றாகத் தொழில் தெரிந்தவரும் அவ்வத் தொழில் வேறுபாட்டால் மனம் மாறுபடுபவராகவே இருப்பர். நன்கு அறிந்து வேலை செய்பவனையே அல்லாமல், இவன் சிறந்தவனென்று நம்பி, அவனை அதைச் செய்யவிடலாகாது. அப்படிச் செய்யவிட்டாலும், அவன் நிலையை ஆராய்ந்து, தொழிலின் தன்மையையும் அறிந்து, காலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு, அறிந்து செய்தல் வேண்டும்.

இதனை, இவன், இத் தன்மையினால் முடிப்பான் என்று தெரிந்துகொண்டு, அப்பால், அத்தொழிலை அவனிடம் விடுதல் வேண்டும். ஒருவனை ஒருவேலைக்கு உரியவனாகத் தேர்ந்தெடுத்து வேலை செய்யும்படி செய்க. அப்படிச் செய்தபின் அவன் அவ்வேலையைத் தன் வேலையாகக் கருதி நடந்துவருங்கால் அவனை மாறுபாடாக நினைத்தல்கூடாது. நினைத்தால் செல்வம்விட்டு விலகிப் போம்.

ஒரு தொழிலைக் கெடுதல் இல்லாமல் நடத்திச் செல்வோன், வழியே உலகமும் சென்று நன்மையடையும். ஆதலால், வினை செய்தற்குரியோன், ஒழுங்காக அதைச் செய்கின்றானா? என்று அரசன் நாள்தோறும் தெரிந்து கொண்டே இருத்தல்வேண்டும்.

ஆகவே, நன்கு தொழில்தெரிந்த ஒரு தொழிலாளியைக்கொண்டே தொழிலைச் செம்மைபெறச் செய்தல் வேண்டு மென்பதாம்.

ருங. சுற்றம் தழால்

பழைய உறவு விடாது பாராட்டுவது, சுற்றத்தார் இடத்தேதான் அமைந்துள்ளது. அச் சுற்றமும் அன்பு நீங்காததாய் ஒருவனுக்குக் கிடைக்குமானல், அஃது அவனுக்கு வளம் பெருகும் செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

சுற்றத்தாரோடு அளவளாவி வாழாதவன் வாழ்வு, கரையில்லாத ஊருணியில் நீர் தங்காதவாறுபோலக் கெட்டுவிடும். சுற்றத்தார்சூழ வாழ்தல் செல்வம் பெற்றவன் அடையும் பயனாகும். வேண்டுவன கொடுத்தல், இனியசொற் பேசுதல் உடையவன், சுற்றத்தாரால் பெரிதும் விரும்பப்படுவான்.

பெருத்த கொடையாளனாய், சினமில்லாதவனாகவும் இருப்பானானல், அவனிடம் சுற்றத்தார் தாமாகவே வந்து கூடுவார். காக்கைகள், தமக்குக் கிடைத்த இரையை மறைக்காமல் தம் இனத்தை அழைத்து, உண்ணும். அதுபோல் ஒருவன் தன் சுற்றத்தார்க்குப் பகுத்துக் கொடுத்து உண்டால், அறமும், பொருளும் பெருகும்; இன்பமும் தானே வந்து சேரும். ஒருவன் சுற்றத்தாரைப் பொதுவாகக் கருதாமல் அவரவர் தகுதிக்கேற்பக் கருதி அதனல் பலர், சுற்றத்தாராக வந்து சேருவர்.

சுற்றத்தார், ஒருவனை முதலில் அன்பனாகக் கொள்வர்; பின்பு அவனைவிட்டுத் துறந்தும் போவர்; பின்னும் வந்து அவனிடம் சேர்வர். அத்தகையாளரை, அரசன், அதற்கான காரணத்தைக் கண்டறிந்து ஆராய்ந்து தன்பால் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆகவே, ஒருவன், சுற்றத்தாரோடு சேர்ந்து அளவளாவி இருத்தல் வேண்டுமென்பதாம்.

௩௪. பொச்சாவாமை

ஒருவனுக்குச் சினத்தைப் பார்க்கினும் மறவி, கேடு தருவதாகும். ஒருவன் அறிவை வறுமை கெடுப்பது போல, மறவி, புகழைக் கெடுத்துவிடும். அம்மறவியுடையார்க்கு நல்ல புகழே கிட்டாது. அது, எவ்வகைப்பட்ட அறநூல் ஆசிரியர்க்கும் முடிந்த முடிபாகும்.

மனத்தில் அச்சங் கொண்டவர், பாதுகாப்பான இடங்களில் இருந்தாலும் பயனில்லை; அதுபோல மறவியை யுடையார்க்குச் செல்வமிருந்தாலும் பயனொன்றுமில்லை.

பின்வரக் கூடியவற்றை முன்னரே அறிந்து செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாது மறந்திருந்தோன், பின்பு அதனால் வரும் துன்பத்துக்கு வருந்த நேரிடும்.

ஒருவனுக்கு யாரிடத்தும் எக்காலத்தும் மறவாத குணம் வாய்க்கப்பெற்றால், அதைப்போல் சிறந்த நன்மை வேறொன்றுமில்லை. மறவாமையாகிய கருவிகொண்டு காரியங்களைப் பேணிச் செய்து வந்தால் அவனுக்கு அருமையான பொருள் யாதுமே இல்லை.

நல்லோரால் புகழ்ந்தவையென்று கூறிய நற்செயல்களை ஒருவர், மறவாது செய்தல் வேண்டும். அவ்வாறு கொள்ளாது ஒருவர் மறப்பாரானால், அவர்க்கு எக்காலத்தும் நன்மையே உண்டாகாது.

தாம் மகிழ்ச்சியினால் மயங்கியிருக்குங்காலத்து முன்பு இம் மகிழ்ச்சி காரணமாகக் கெட்டுப்போனவர்களின் நிலையை நினைக்கவேண்டும். ஒன்றை நினைந்தானொருவன், அதனை மறவாது நினைத்தால் நினைத்தவெல்லாம் எளிதில் அடையப் பெறுவான்.

ஆதலால் மறவியில்லாமல் இருப்பவனுக்கு எல்லா நலமும் பெருகிவருமென்பதாம்.

ருரு. செங்கோன்மை

அரசன், தன் குடிகள் குற்றஞ் செய்யின் யாராக இருந்தாலும் அவரவர்களின் செயல்கட்குத் தக்கவாறு ஆராய்ந்து கண்ணோடாது ஒறுத்தல் செய்வதே செங்கோல் முறையாகும்.

உலகத்து உயிர்கள் எல்லாம் மழையால் வாழுகின்றன. மக்கள் மன்னனது செங்கோல் முறையால் வாழுவர். ஆதலால், அந்தணர் நூலாகிய மறைக்கும், அறத்துக்கும் செங்கோல் முறையே முதன்மையாக அமைந்தது; குடிகளைத் தழுவிச் செங்கோல் செலுத்துவோன் அடிச்சுவட்டைத் தழுவி உலகத்தோர் வாழ்வர். அவ்வாறு செங்கோல் செலுத்தும் மன்னவன் நாட்டில் மழை பெய்வது குறையாது; விளைவு பெருகும்.

இத்தகைய அரசன் வேலால் வெற்றிபெற வேண்டுமென்பதில்லை; அவன் செங்கோல் ஆட்சியே வெற்றியைத் தேடித் தரும். அம்மன்னன் செங்கோல் நெறி முறையை நன்கு செலுத்துவன்; அதனால் உலகத்தை யெல்லாம் காக்கவும் வல்லவனாவான்; அவனை அச் செங்கோல் முறையே காத்து நிற்கும்: அவனுக்கு வேறு காவல் வேண்டுவதில்லை.

இவ்வாறு காக்கும் அரசன், காண்டற்கு எளிமை, அறிந்து முறை செய்பவனாக இருத்தல் வேண்டும்; இதில் தவறுவானாயின் தானே தாழ்வடைந்து கெடுவான். குடிகளை வேறெவரும் வருத்தாதவாறு பாதுகாக்க வேண்டும்; அவர்களிடங் குற்றங் கண்டவிடத்து ஒறுத்தல் வேண்டும்; குற்றமுடைய கொடியர்களை அரசன் ஒறுத்தல், பயிர்களையழிக்கும் களைகளைக் களைவதுபோல நலஞ் செய்வதாகும்.

ஆதலால் செங்கோல் முறை தவறாது அரசன் குடிகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதாம்.

௫௬. கொடுங்கோன்மை

குடிகளை வருத்தி முறையில்லாது அரசு செய்யும் அரசன், கொலைத் தொழிலில் ஈடுபட்டு நடக்கின்ற கொலைஞர்களினும் கொடுமையுடையவன் ஆவான். அவன் குடிகளைப் பொருள் தருமாறு வேண்டுதல், வேற்படையைக் கையில் தாங்கிய கள்வன் ஒருவன், வழிச் செல்வானைப் பார்த்துப் 'பொருளைக் கொடு' என்று கேட்பது போன்ற கொடுஞ் செயலாகும்.

நாள்தோறும் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அரசன் முறை செலுத்தா விட்டால், அவன் ஆளும் நாடு, நாளுக்கு நாள் நலிவடையும். முறைதவறி நாட்டை ஆளும் அரசன், முன் சேர்த்த பொருளையும் பின்தொகுக்க இருக்கும் குடிகளையும் ஒருங்கே இழந்து விடுவான். அரசன் வருத்தும் துன்பம் பொறுக்காமல் குடிகள் அழுத கண்ணீரே அரசன் செல்வத்தைக் குறைக்கும் வாளாகும்.

அரசனுக்குப் புகழ் வருவது, செங்கோல் முறை ஒன்றினாலேயே. அரசன் குடிகளிடம் இரக்கமில்லாமல் நடத்தும் கொடுங்கோல் ஆட்சியானது, உலகத்துக்கு மழையில்லாமைபோல மக்களுக்குக் கேடு தருவதாகும்.

செங்கோல் முறையில் ஆளாத அரசன் நாட்டுக் குடிகளுக்கு, வறுமையுடன் வாழும் துன்பத்தைக் காட்டினும் செல்வமுள்ளவராக வாழ்வது, பெருந் துன்பத்தைக் கொடுக்கும். முறைதவறி அரசன் நடப்பானாயின், அவன் நாட்டில் பருவமழை பெய்யாது பஞ்சம் உண்டாகும்.

அரசன் முறையோடு அரசுபுரியான் எனின் ஆக்களின் பால் குறையும். அந்தணரும் நூல்களை மறந்து விடுவர்.

ஆதலால், அரசன் கொடுங்கோலனானால் நாடு நாள்தோறும் சீர்கேடடையும் என்பதாம்.

௫௭. வெருவந்த செய்யாமை

ஒருவன் குற்றஞ் செய்தால், தக்கவாறு ஆராய்ந்து ஒறுப்பவனே வேந்தனுவான். அக்குற்றத்திற்காக ஒறுக்குங்கால், மிகக் கடுமை போல் காட்டி, சிறிதளவாக ஒறுத்தல் வேண்டும். அத்தகைய அரசனுக்குச் செல்வம், நெடுநாள்வரை நிலைத்திருக்கும்.

கொடுங்கோல் மன்னனுனல், அவன் உறுதியாக விரைவிற் கெடுவான். 'கொடிய'னென்று குடிகள் பழி தூற்றும் துன்பச் சொல்லைப் பெற்ற அரசன், தன் வாழ்நாள் சுருங்கப் பெறுவான்; விரைவில் செல்வமும் இழப்பான்.

காண வேண்டுவார்க்குக் காண முடியாதவனுய், கடுகடுத்த முகத்தையுடையனுய் இருக்கின்ற அரசனது பெருஞ் செல்வம், பேயைக் கண்டதைப் போன்றது; அஃது, அச்சத்தோடு கெடுதலும் கொடுக்கும்.

அரசன் கடுஞ் சொல்லனுய்க் கண்ணேட்டமும் இல்லாதவனுய் இருந்தால் செல்வம், நிலைக்காமல் கெட்டு ஒழியும். கடிய சொல்லும், அளவுக்கு மீறித் தண்டித்தலும் அரசனது வலிமையை அராவி ஒழிக்கும் அரமாகும்.

ஒருவன் குற்றத்தை, அரசன் தன் அமைச்சரோடு ஆராயாமல் தானே சினந்தால், அரசனது செல்வம், நாள் தோறும் குறையும்.

தன் நாட்டில் போர் மூளுமுன் பாதுகாப்புச் செய்யாத மன்னன், போர் மூண்டபோது பாதுகாக்க வழி தெரியாது கெட்டொழிவான். கொடுங்கோல் மன்னன், அறநூல்களைக் கற்காதவர்களையே நட்பாகக் கொள்வான்; அக்கூட்டுறவு நிலமகளுக்குப் பெருஞ்சுமையாக இருக்கும்.

ஆதலால், அரசன், குடிகள் துன்புற்று வருந்தாத செயல்களைச் செய்து, ஆளுதல் வேண்டுமென்பதாம்.

௫அ. கண்ணோட்டம்

கண்ணோட்டம் (தாட்சணியம்) என்னும் மிக அழகிய பெண்ணொருவள் இருப்பதால்தான், இவ்வுலகம் நடை பெற்று வருகின்றது. ஆதலால், உலக நடை, இக் கண்ணோட்டத்தாலேயே நடக்கின்றது. அஃதில்லாத மக்கள் இருப்பது, நிலத்துக்குச் சுமையேயல்லது வேறல்ல.

பாடலுக்கேற்ற இசை பொருந்தா விட்டால், அவ் விசையால் என்ன பயன்? ஒன்றுமில்லை. அதுபோல் கண்ணோட்டமில்லா விட்டால் கண்ணிருந்தும் மக்கட்கு என்ன பயன்? கண்ணோட்டமில்லாதவர் கண்கள், பார்ப்போர்க்கு அவர் முகத்தில் இருப்பன போல் தோன்றுமே தவிர, அதனால் யாருக்கு என்ன பயனுண்டு? கண்ணுக்கு அழகு என்று சொல்லப் பெறுவது, கண்ணோட்டத்தையே. அஃது இல்லாவிட்டால் அக்கண்களைக் கண்ணென்று கொள்ளாமல், புண்ணென்றே கொள்ளுதல் வேண்டும்.

கண்கள் பெற்றிருந்தும் கண்ணோட்டமில்லாத மாந்தர் மக்களாகார்; அவர், மண்ணோடு பொருந்தியுள்ள மரத்தையே ஒத்தவராவார். உலகில் கண்ணோட்டமில்லாதவர் எவரோ அவர், கண்ணிருந்தும் குருடரேயாவார். கண்ணுடையவராக இருப்பின், அவர், கண்ணோட்டமில்லாமல் இருக்க முடியாது.

முறைதவறாத கண்ணோட்டமுடைய மக்கட்கு, இந்த உலகம் உரிமையாகும் கடமையுடையது. அதனால் தமக்குக் கேடு செய்ய எண்ணுவோரிடத்தும் கண்ணோட்டங் கொள்ள வேண்டும்; அவர் குற்றத்தைப் பொறுப்பதே சிறந்த பண்பில் முதன்மையாகும். எல்லோராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தை விரும்புவோர், தம்மோடு பழகினோர் நஞ்சிட்டாலும் அதனையும் உண்டு அமைவார்.

ஆதலால் மக்கள் யாவரும் கண்ணோட்டமுள்ளவராக வாழ்தலே உயர்ந்த பண்பாகுமென்பதாம்.

ருசு. ஒற்றாடல்

ஒற்றரும் சிறப்புடைய அறநூலும் ஆகிய இரண்டும் அரசனுக்குக் கண்ணாகக் கொள்க. எல்லோர்க்கும் எங்கும் நடப்பவற்றை ஒற்றனால் அறிய வேண்டுவது அரசன் தொழிலாகும். ஆதலால், ஒற்றனால் ஒற்றியறிந்து அதன் பயனை அறியா மன்னவனுக்கு வெற்றியடையக் கூடிய தன்மை இல்லை.

தம் காரியம் செய்வார், சுற்றத்தார், பகைவர் என்பவர்களை ஆராய்ந்தறிவோனே சிறந்த ஒற்றனாவான். அவ்வொற்றன, பிறர் கண்டால் ஐயப்படாத வடிவும், அவ்வாறு ஐயப்பட்டாலும், அவ்விடத்து அஞ்சாது, மனத்தி லுள்ளதை வெளிப்படுத்தாமலும் இருப்போனே சிறந்தவனாவான்.

எல்லாம் துறந்தவர் போல வேடமுடையவனாகிச் செல்ல வேண்டிய இடங்கட்குச் சென்றறிந்து, பகைவர்கள் ஒறுத்தபோதும் வெளிப்படுத்தாதவனே ஒற்றன் ஆவன். அவன் மறைந்தவைகளையும் அதற்குரியார் வழியாகத் தெரியவல்லனாய்க் கேட்டவற்றைத் தெளிவுபெற அறியும் துணிபுள்ளவனாதல்வேண்டும்.

ஒற்றன், தெரிந்து வந்து கூறியவற்றையும் மற்றோர் ஒற்றன் வாயிலாகத் தெளிவுபெற உணர்தலே அரசனுக்கு உயர்வாகும்.

அரசன், அவ் வொற்றர்க்குச் செய்யும் சிறப்பு வரிசைகளும் மற்றோர் ஒற்றனுக்குத் தெரியாவாறு செய்க. தெரியும்படி செய்யின் மறைந்தவை வெளிப்படுத்தப்பட்டதாக முடியும்.

ஆதலால், அரசன் ஒற்றரை நன்கு ஆராய்ந்தறிய வேண்டுமென்பதாம்.

௬0. ஊக்கமுடைமை

ஒருவரை உள்ளவர் என்று சிறப்பித்துச் சொல்லச் செய்வது ஊக்கம். அஃதில்லாதவர் வேறு என்ன இருந்தாலும் அஃது உள்ளவர் ஆவரோ? ஆதலால் ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலைபெற்ற உடைமையாகும். மற்றப் பொருளுடைமையோ நிலையில்லாது அழியும் தன்மையானது. ஊக்கத்தையே கைப்பொருளாக அடைந்தவர் செல்வத்தை இழப்பினும் இழந்தேமென்று வருந்தமாட்டார். கெடாத ஊக்கமுள்ளவனிடத்துச் செல்வம் தானே வழி கேட்டுக் கொண்டுபோய்ச் சேரும். நிறை நீரின் அளவுக்கு நீர்ப்பூக்கள் உயர்ச்சியாகும். அதுபோல மக்களின் உள்ளத்தினளவுக்கு அவர் உயர்வடைவர்.

ஒருவன் நினைப்பன எல்லாம் தம் உயர்வையே நினைக்குக. நினைத்த அளவு உயர்வு கிடைக்கா விட்டாலும் அது, தவறாத தன்மையை யுடையதாகும். அம்பு தன் மேல் பாய்ந்தாலும் யானையானது தன் ஊக்கங் குன்றாது. அதுபோல ஊக்கமுடையாரும் தாம் கருதியவை முடியாவிட்டாலும் ஊக்கங் குன்றார்.

ஊக்கமில்லாதவர், யாம் சிறந்த கொடையாளி யென்னும் செருக்கடையமாட்டார். யானையானது உருவிற் பெரிது; கொம்புகளும் உடையது; ஆனாலும் ஊக்கமில்லை. ஊக்கமுள்ள புலி சிறியது; அது எதிர்ப்பட்டால் யானை அஞ்சுகின்றது. அதுபோல ஊக்கமுடையவர் உருவு முதலியவற்றில் சிறியராயினும் சிறப்படைவர். ஆதலால் ஒருவனுக்கு ஊக்கமுடைய தன்மையே வலிய அறிவாகும். அவ்வூக்கமில்லாதவர் மக்களாகார். மரத்தையே ஒப்பர். ஆனால் மரத்துக்கும் இவர்கட்கும் வேறுபாடு மக்கள் வடிவம் பெற்றுள்ள தொன்றைத்தவிர மற்றப்படி மக்கட்குரிய தன்மையில்லை.

ஆதலால் ஊக்கமுடைமையே எல்லோர்க்கும் சிறந்த நற்பேறு என்பதாம்.

௬௧. மடியின்மை

ஒருவனுக்குச் சோம்பலென்னும் இருட்டுச் சேருமாயின் தான் பிறந்த குடியென்னும் விளக்கானது அழிந்து போகும். ஆதலால் தம் குடும்பத்தைக் குடும்பமாக உயர்த்த விரும்புவோர், சோம்பலைச் சோம்பலாகவே விட்டொழிப்பர். விடக்கூடிய சோம்பலை விடாமல் கைக்கொண்டு நடக்கும் அறிவிலான் பிறந்த குடும்பம் அவன் அழியுமுன் தான் முன்பே அழிந்து போகும்.

சோம்பலிலேயே வாழ்ந்து நல்ல முயற்சி செய்யாதார்க்குத் தம் குடும்பமும் கெட்டுப் பல குற்றங்களும் மிகுதியாகும். கெட்டுப் போகும் தன்மையர் விரும்பி ஏறும் மரக்கலமாவது, உடனே செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருத்தல், மறத்தல், சோம்பல், தூக்கம் என்னும் இந்நான்குமே யாகும்.

உலகம் முழுதும் ஆண்ட அரசருடைய செல்வம் தானே வந்து சேர்ந்தாலும், சோம்பலுள்ளோர் உயர்ந்த பயனை அடைய முடியாது. சோம்பலுடையவராய் நன்கு முயற்சி செய்யாதவர், தம் நட்புடையவராலும் இகழ்ச்சியடையப் பெறுவர்.

ஆதலால் ஒருவன் குடும்பத்தில் சோம்பலுண்டாகப் பெறுமானால் தன் பகைவர்க்கு அடிமையாம் தன்மையை உண்டாக்கிவிடும். எனவே, ஒருவன சோம்பல் ஆம் தன்மையை மாற்றிவிட்டால் அவன் குடும்பத்துள்ளும ஆண்மையுள்ளுமிருந்து குற்றமெல்லாம் கெட்டுவிடும். தன் திருவடியால் இறைவன் அளந்த உலகமெல்லாவற்றையும் சோம்பலில்லாத மன்னவன் கருதின் அடையப்பெறுவான்.

ஆதலின், ஒருவனுக்குச் சோம்பலில்லாமல் வாழும் வாழ்க்கையே மிகச் சிறந்ததென்பதாம்.

சுஉ. ஆள்வினையுடைமை

ஒருவன், இக்காரியம் நம்மால் முடித்தல் அரிது என்று எண்ணாது முயற்சி செய்க. அது, முடித்தற்கு ஆம் தகுதியை உண்டாக்கும். அம் முயற்சியாகிய குறையைச் செய்யாமல் இருப்பவர்களை உலகம் கைவிட்டு விட்டது. ஆதலால் செய்யக் கூடிய தொழிலை விடாது செய்க.

எல்லார்க்கும் உபகாரம் என்னும் உயர்வு முயற்சியென்னும் உயர்குணத்தின்கண் நிலைபெற்றுள்ளது. முயற்சியற்றவன் உபகாரியா யிருக்குந்தன்மை, படைக்கு (போருக்கு) அஞ்சும் பேடி கையில் உள்ள வாள், வலிமை இல்லாமைபோலக் கெட்டுவிடும்.

தன் இன்பத்தை விரும்பாமல் தொழிலையே முடிக்கும் குறிக்கோள் உள்ளவன், தன்னைச் சார்ந்தோரின் துன்பங்களை யெல்லாம் கெடுத்துத் தாங்கும் தூண்போல் ஆவான். ஆதலால் முயற்சியே செல்வத்தைப் பெருக்கும். முயற்சியில்லாதிருத்தல் வறுமையில் செலுத்தி விடும்.

கரிய உருவினளாகிய மூதேவி, ஒருவன் சோம்பலில் தங்குவாள்; தாமரை மலரில் உறையும் திருமகள், ஒருவன் முயற்சியில் நிலைப்பாள். ஆதலின் நன்மை தருவதாகிய ஊழ் இல்லாமை யார்க்கும் பழிப்பாகாது. அறியவேண்டுவதற்றை அறிந்து முயற்சி செய்யாதிருப்பதுவே பழிப்பாகும். அவ்வாறு முயன்றால் ஊழினால் தான் கருதிய பயனைத் தாராதாயினும், தன் உடம்பு வருந்தி உழைத்த அளவிற்காவது கூலிபோலப் பயனைக்கொடுக்கும். விடாத முயற்சியுடையார், ஊழின்வலிமை தன் பால் வாராது புறங்காண வாழ்வர்.

ஆதலால் ஒவ்வொருவரும் ஆள்வினையுடையராக இருத்தல் வேண்டுமென்பதாம்.

கூடு. இடுக்கண் அழியாமை

ஒருவனுக்குத் துன்பம் வருங்கால் மகிழ்ந்து இருக்க. அத்துன்பத்தை அடுத்து மேலேறிச் செலுத்துவது அஃதொன்றேயன்றி வேறில்லை. வெள்ளம்போல் அளவற்ற துன்பங்களெல்லாம் அறிவுள்ளவன் தன் மனத்தில் ஒன்றை எண்ணினால் அது நீங்கிவிடும். துன்பத்துக்கு அஞ்சாத தன்மையுடையவர், அத் துன்பத்துக்குத் தாம் துன்பங்கொடுத்து நிற்பர்.

கடுமையான இடங்களிலெல்லாம் இழுத்துச் செல்லும் பாரவண்டியிற் பூட்டிய எருதுபோல, துன்பம் வருங்கால் அத் துன்பத்தைப் பொருட்படுத்தா திருப்பவனுக்கு வரும் துன்பம், தான் துன்பப்படுமே தவிர, அது அவனை ஒன்றும் செய்யாது. இடைவிடாமல் மேலும் மேலுந் துன்பங்கள் தொடர்ந்துவரினும் அதற்கு மனங் கலங்காதவனிடம் வரும் துன்பம் நீங்கும்.

செல்வம் பெருகிவந்த காலத்து மிச்சப் படுத்தாதவர், வறுமைவந்த காலத்து யாம் வறுமையுற்றேம் என்று துன்பப்பட்டு மனங் கலங்கமாட்டார். அறிவுடைய மக்கள், உடம்பானது துன்பங்களுக்கெல்லாம் இடமாகை உள்ளதென எண்ணித் துன்பங்கண்டு வருந்தமாட்டார்கள்.

இன்பத்தை விரும்பாமல் துன்பம் வருவது இயற்கையென்றிருப்பவன், எக்காலத்தும் தான் துன்பப் படமாட்டான். இன்பம் வந்த காலத்து அதை இன்பமாகக் கருதாது காலங்கழிப்பவன், துனபம் வந்தபோது மனம் வருந்தமாட்டான். ஆதலால் துன்பத்தை இன்பமாகக் கொண்டு ஒருவன் நடப்பானானால் தன் பகைவரும் தன்னை விரும்பும் மேன்மை உண்டாகும்.

ஆதலால், ஒருவன் தனக்குவரும் துன்பங்களுக்கு மனங் கலஙகாமல் இருக்கவேண்டு மென்பதாம்.

---

௬௪. அமைச்சு

அமைச்சராவார், ஒரு தொழிலைச் செய்தற்கு ஆகுங் கருவி, அதற்கேற்ற காலம், அதைச் செய்யும் வழி, இவை களாற் செய்யப்பெறும் அரியமுயற்சி, இவைகளை நன்கு எண்ணவல்லவரே ஆவர்.

உறுதியும் குடிகளைக் காத்தலும், கற்றலும், விதி விலக்குகளை அறிதலும், செய்யுந் திறனும் ஆகிய ஐந்தும் பொருந்தி அமைச்சன இருத்தல் வேண்டும்; பிரிக்க வேண்டியோரைப் பிரித்தலும, பிரிந்து செல்லவிடாமல் பேணிக் கொள்ளலும், மீண்டும் சேர்த்தலும் நன்கு ஆராய்ந்தறிதலும் அதை முடித்தலும் விளக்கிச் சொல்வதும் செய்யவல்லவனே அமைச்சன்.

அறத்தை அறிந்து கல்வியால் நிறைந்து அமைந்த சொல்லையுடையவனும் வினை செய்யுந்தன்மைகளை அறிந்தவனும் அமைச்சன் ஆவான். அவன் இயற்கையாகிய அறிவோடு நூலறிவுமுடையவனாக இருந்தால் அவன் முன் சூழ்ச்சிகள் நில்லா.

தொழில் செய்வதை அறிந்திருந்த போதினும் உலக நிலையை அறிந்தே செய்தல்வேண்டும். அரசன அறியாது பிறர் கூறுவதையும் கொள்ளாது இருப்பானாயினும் உறுதி கூறுவது அமைச்சன் கடனாகும். அரசனுக்குக் கேடு சூழும் அமைச்சனைக் காட்டினும எழுபதுகோடி பகைவர் இருந்தாலும் தீமை இல்லை. செய்யப்படும் வினைகளை முறைப்பட ஆய்ந்திருந்தும் முடிக்கும் திறமையிலாத அமைச்சரும் உளர்.

ஆதலால் அமைச்சன் சிறந்தவனாக அமைதலே நன்றென்பதாம்.

கூரு. சொல்வன்மை

அமைச்சரானவர்க்கு நாவால் பேசுந் திறம் என்னும் நலம், மற்ற எல்லா நலங்களினும் சிறந்தது. அது, ஆக்கவும் அழிக்கவும் ஆகும் தன்மையைச் செய்யக்கூடியதாகலின், சொல்லில் சோர்வடைதலாகாது.

கேட்டோரைக் கவர்ச்சி செய்யும் தன்மையனவாய்த் தம் பகைவரும் பகைமையைவிட்டு நட்புக்கொள்ள விரும்பச் செய்வதே சொல்லின் வன்மையாகும். ஒருவர் பேசுங்கால் தம் தன்மை, கேட்போர் தன்மைகளை நன்கறிந்து பேசுதல் வேண்டும் அப்படிச் சொல்லுதற்கு மேற்பட்ட அறமோ பொருளோ வேறில்லை. ஆதலால் ஒன்றைப் பேசுங்கால் அப் பேச்சிலுள்ள ஒரு சொல்லை வேறொருசொல் வந்து வெல்லாதபடி ஆராய்ந்து சொல்லுக. அப்படிச் சொல்லுங்கால் பிறர் கேட்டு அதை அவர் விரும்புமாறு சொல்லிப் பிறர் பேசுங்கால் குணத்தைமட்டும் கொள்ளுதல் குற்றமற்றோரின் உயர்ந்த கொள்கையாகும்.

தான் எண்ணியவற்றைப் பிறர் மனங்கொள்ளச் சொல்ல வல்லனாய், அப்படிச் சொல்லுதலின் சோர்வற்றவனாய் அவைக்கு (சபைக்கு) அஞ்சாமல் பேச வல்லனாய் இருப்பவன் எவனோ? அவனை மாறுபட்டு வெல்வது யாராலும் ஆகாது. முறைப்படத் தொகுத்துச் சொல்ல வல்லவரை அடையப்பெற்றால் உலகம் மிக விரைவில் அவரை ஏற்றுக்கொண்டு அவர் ஏவல்வழி நிற்கும். குற்றமற்ற சில சொற்களைச் சொல்ல அறியாதார் சொல்வனவற்றை மிக விரித்துச் சொல்லவே விரும்புவர். தாம் கற்றவற்றையும் அறிந்தவற்றையும் யாவரும் நன்கு அறியுமாறு சொல்ல அறியாதவர், கொத்தினிடத்தே நன்றாக மலர்ந்திருந்தும் மணமற்ற மலர்போல் பயனற்றவராக இருப்பர்.

ஆதலால் அமைச்சர் யாவரும் பேசுந்திறமை யுடையவராக இருப்பதுவே சிறந்ததென்பதாம்.

---

௬௬. வினைத் தூய்மை

ஒருவனுக்குத் துணையின் நன்மையானது செல்வம் ஒன்றைமட்டுந்தான் கொடுக்கும்; ஆனால் வினையின் நன்மையானது அவர் வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கும். ஆகையால் புகழுடன் நன்மைதராத எந்தத் தொழிலையும் ஒருவன் என்றைக்கும் நீக்கியே நடக்க வேண்டும். மேன்மையடைய வேண்டுமென்று கருதுகின்றவர், தம் புகழ் கெடுதற்குக் காரணமான தொழில்களை விட்டுவிடுதல் வேண்டும்.

கலக்கமில்லாத தெளிவினையுடையார், தாம் துன்புற்ற காலத்தும் கிழ்மையான செயல்களைச் செய்யமாட்டார். பின் இரங்கி வருந்தும்படியானவைகளைச் செய்யாதிருக்கக் கடவன். ஒருகால்செய்யநேரின் அதற்குமேல், அவ்வாறான காரியத்தைச்செய்யாதிருத்தல் நல்லது.

தன்னைப் பெற்ற தாயின் பசியைக் காணினும் தீய செயல்களைச் செய்யா தொழிவானாக. தீயவற்றைச் செய்து அதனால் வரும் பழியையேற்று அடைந்த செல்வத்தைக் காட்டிலும் நல்லோர் நுகரும் வறுமையே சிறந்தது.

நல்லோரால் விலக்கப்பட்டவைகளை விலக்காமல் அவற்றைச் செய்தால் முடியமாட்டா. முடிந்தாலும் பின் அது துன்பத்தையே கொடுக்கும். ஒருவன் பிறர் வருந்துமாறு செய்துகொண்ட பொருளகளெல்லாம், அவர்கள் வருந்திய தன்மைபோலவே, தானும் அழுமாறு போகும். நல்வழியில் வந்த பொருள்களை இழந்தானாலும் அவனுக்கு அது, பின்வந்து பயன் கொடுக்கும். தீவினைகளால் பொருள் தொகுத்து வைத்தல், பச்சைமண் கலத்தில் நீர் நிறைத்துவைத்தலோடு ஒக்கும்.

ஆதலால் ஒருவன் நல்வழிகளிலேயே தொழிலாற்ற வேண்டுமென்பதாம்.

கூஎ. வினைத்திட்பம்

ஒருவன் ஒருவினை செய்தற்கண் திண்மையென்று சொல்லப்படுவது மனத்தின் உறுதியையே. மற்றவை யெல்லாம் உறுதியல்ல. அத்தொழிற்கு இடையூறு நிகழாமல் நீக்குதல், வந்தபின் தளர்ச்சி கொள்ளாமை ஆகிய இவ்விரண்டின் வழியே செல்வதே வினைத்திட்பம் ஆராய்ந்தறிந்தவரின் குறிக்கோளாகும்.

ஒரு தொழில் முடிந்த பின் வெளிப்படுத்துதல் தான் ஆண்மையாகும்; இடையில் வெளியாக்கினால் அதனால் நீங்காத துன்பமுண்டாகும். ஆதலால் யாரும் இதை முடிப்பேனென்று வாயால் சொல்லுதல் மட்டும் எளிதாகும். ஆனால் சொன்னபடி செய்தலோ அரிதாகும். தொழில் செய்யுந் திறத்தினால் சிறப்படைந்து உயர்வு பெற்றோரின் வினைத் திண்மையானது, நாடு காவலனை அரசனிடத் தடைந்து எல்லோராலும் நன்கு மதிக்கப் பெறும். ஆதலால் ஒன்றைச் செய்யக் கருதியவர், அதை முடிப்பதில் திண்மையுடையவராக இருந்தால் அவர் நினைத்தன நினைத்தவாறே தவறாது முடியும்.

உருண்டு செல்லும் பெரிய தேர்க்கு அச்சில் இருந்து தாங்குகின்ற சிறிய ஆணியை ஒத்தவரை, இவ்வுலகம் தன்னிடம் கொண்டுளது. அதனால் உருவத்தால் சிறிய வரென்று கருதி ஒருவரையும் இகழ்தலாகாது.

மனந்தெளிந்து செய்வதாக உறுதி கொண்ட தொழிற்கண் கலங்காமல் விரைந்து செய்க. அத் தொழிலைச் செய்யுங்கால் துன்பங்கள் மிக வந்தாலும் அதற்குத் தளராமல் முடிவில் இன்பந்தரும் தொழிலைத் துணிந்து செய்க. வேறு எத்தகைய திட்பம் பெற்றவ ராக இருப்பினும் செய்யுந் தொழிலில் உறுதிப்பாடில்லாத வர்களை உலகம் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

ஒருவர் ஒன்றைச் செய்யுங்கால் வினைத் திட்பமுடைய வராக இருத்தல் வேண்டு மென்பதாம்.

௬அ. வினைசெயல்வகை

ஒன்றை ஒருவன் செய்ய எண்ணுதற்கு எல்லை, இது வென்று துணிவு கொள்ளலே ஆகும். அத்துணிவு பெற்ற பின் அதைச் செய்யாது காலம் நீட்டித்தல், தீமை தருவதாகும். காலம் தாழ்த்துச் செய்யக் கூடியவைகளைக் காலந்தாழ்த்தே செய்ய வேண்டும். விரைந்து செய்யக் கூடியவைகளைக் காலங் கடவாமல் விரைந்து செய்ய வேண்டும்.

இயன்ற இடத்திலெல்லாம் அத்தொழிலைச் செய்து முடித்தல் நன்றாகும். அது இயலவில்லையானால் அது, நடக்கும் இடம் நோக்கியேனும் செய்தல் வேண்டும். செய்யத் தொடங்கிய தொழிலும் ஒழிக்க வேண்டிய பகையும் தீயின் குறைபோல் வளர்ந்து பின் தெரியாமல் கெடுக்கும். ஒன்றைச் செய்யுங்கால் அதற்கேற்ற பொருள் கருவி காலம் தொழில் இடமாகிய ஐந்தையும் நன்றாக எண்ணிச் செய்தல் வேண்டும். தொழில் முடியும் இடையூறுகளும் அது முடிந்தால்வரும் பயனும் பார்த்துச்செய்தல்வேண்டும். அவ்வாற்றால் தொழில் செய்யத் தொடங்கினான் செய்கின்ற முறைமையாவது, அத்தொழிலை அறிந்தவன் கருத்தைத் தான் அறிவதேயாகும்.

ஒரு தொழில் கொண்டு மற்றொரு தொழிலையும் முடித்துக் கொள்ளுதல், ஒரு யானையைக் கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பது போல ஊதியமாகும். தனக்கு நட்புடையார்க்கு நன்மை செய்தலைப் பார்க்கிலும் பகைவராக உள்ளோரை நட்பாக்கிக் கொள்ளுதல் விரைவாகச் செய்யத் தக்கதாகும். வலிமை குறைந்தவர், தம்மினும் வலியவர் பகையாக எதிர்த்து வந்த காலத்துத் தம்மைச் சார்ந்தோர் உள்ளம் நடுங்குதலைக் கண்டஞ்சி, சந்துகிடைத்தால் பகைவரை வணங்கியேனும் ஏற்றுக் கொள்வர்.

ஆதலால் வினை செய்யுங்கால் ஆராய்ந்தே செய்ய வேண்டு மென்பதாம்.

௬௯. தூது

அரசர் முதலியோரிடத்துத் தூது சென்று உரைப்பவன் தன்மையாவது, தன் சுற்றத்தாரிடத்து அன்புடையனு யிருத்தல், உயர்ந்த குடிப்பிறப்பு, அரசர் விரும்பும் பண்புடையனு யிருத்தல் ஆகும். அவ்வாறு தூது செல்வோனுக்கு இன்றியமையாத குணங்கள் அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்லும் திறமை ஆகிய மூன்றுமாகும்.

வேற்படை தாங்கும் அரசரிடம் சென்று வெற்றிச் செய்தியை அறிவிப்பவன் நூல்களைக் கற்றுணர்ந்தவருள் சிறந்தவனுக இருத்தல் வேண்டும். தூதுவன், இயற்கையறிவும், தோற்றப்பொலிவும், ஆராய்ந்தறிந்த கல்வியறிவும் ஆகிய இம்மூன்றின் மிக்கானுக இருத்தல் வேண்டும்; இவனே தூது செல்லற்கேற்றவன் ஆவான்.

தான் சொல்லுமவற்றை ஒன்றுபடுத்திச் சொல்லி கடுஞ்சொற்களை நீக்கி இன்சொற்கள் கூறித் தலைவனுக்கு நன்மை செய்வோனே தூதனுவான். கற்பன கற்றுப் பிறருடைய கடும் பார்வைக்கு அஞ்சாதவனுய்த் தான் கேட்போர் உள்ளத்தில் பதியச் சொல்லிக் காலத்தில் முடிக்கத் தக்கவனே தூதனுவான்.

தான் செய்யும் முறையை யறிந்து, காலம் பார்த்துச் சொல்லுதற்கேற்ற இடத்தையும் அறிந்து, சொல்லுபவற்றை முன்னே அறிந்து சொல்ல வல்லவனே முதன்மையான தூதனுவான். பொருட்பற்றில்லாத தன்மையும், பிறர் துணையுடைமையும், துணிவும், உண்மை பேசுதலும் ஆகிய நான்கும் உள்ளோனுக இருத்தல் வேண்டும்.

தன் தலைவன் சொல்லியனுப்பிய செய்தியைப் பிற தலைவனுக்குச் சொல்லுதலுடையவனே தன் மேல் வரும் துன்பத்துக்கு அஞ்சாத தன்மையோனுவன். தன் உயிர்க்கு முடிவு வந்த காலத்தும் அதற்கு அஞ்சாது உறுதியை எடுத்துரைக்க வல்லவனே தூதனுவன்.

எ௦. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அரசரைச் சார்ந்து வாழ்வோர், அவரை விட்டு நீங் காமலும், நெருங்காமலும் நெருப்பில் குளிர்தல் காய்வோர் போல் இருக்க வேண்டும். அவ்வாறு நடக்குங் காலத்து அரசர் விரும்புபவற்றைத் தாம் விரும்பாது இருத்தலா னது அரசனுல் நிலையான செல்வத்தைத் தருவதாகும். இவ்வாறு நடப்பவர் தம்பால் பிழைகள் வாராமல் காக்க வேண்டும்; பிழை நேர்ந்ததாகக் கேட்டு அரசன் ஐயப்பட்டால், அரசனைப்பின் தெளிவுபடுத்துதல் எவரா லும் இயலாததாகும். ஆதலால் அரசன் அருகில் இருந்து தாம் செவிக்குள் பேசுதலும், அதனோடு சேர்ந்து சிரிப்ப தும் விட்டு விடுதல் வேண்டும்.

எதையும் செவி கொடுத்துக் கேளாது சொல்வோனை நெருங்கி வினவாமல் அவனுகவே அந்த மறைப் பொருளை அடக்காமல் கூறினுல் கேட்டல் வேண்டும். ஒன்றை அரசனுக்குச் சொல்ல இருப்போர், அரசனது குறிப்பினை அறிந்து, சொல்லுதற்கு ஏற்ற காலத்தையும் தெரிந்து கேட்கும் அரசனுக்கு அதில் வெறுப்புத் தோன்ருமல் சொல்லுதல் வேண்டும்; சொல்லும்போது அவன் மனம் ஏற்குமாறு சொல்லுதல் வேண்டும்; அரசன் விரும்புவனவற்றைச் சொல்லி, பயனற்றவைகளை அவன் வினவிக் கேட்டாலும் சொல்லா திருத்தல் வேண்டும்.

அரசர், 'நமக்கு இளைஞர்; நமக்கு இன்ன முறையுடை யவர்' என்று எண்ணி இகழ்வது கூடாது. அவருடன் சார்ந்திருக்கும் அரசுத் தன்மையான ஒளியோடு பொருந்த நடக்க வேண்டும். நிலைபெற்ற அறிவுடையோர் அரசரால் நன்கு மதிக்கப்பட்டோ மென்று எண்ணிப் பொருத்த மற்றவைகளைச் செய்யமாட்டார்கள். 'யாம் அரசருக்குப் பழைய நட்பினேம' என்று எண்ணிப் பொருத்தமில்லாத வைகளைச் செய்யும் உரிமை கெடுதலைத் தரும்.

ஆதலால் அரசரிடம் பழகுவோர் அரசர் தன்மையை உணர்ந்து நடக்க வேண்டு மென்பதாம்.

எக. குறிப்பறிதல்

ஒருவன் ஒன்றைக் கூறாமலே முகக் குறிப்பினால் அறியக் கூடியவன், எக்காலத்தும் உலகத்துக்கு ஓர் அணியை ஒத்தவனாவான். மனத்தில் நினைத்ததைச் சிறிதும் ஐயமில்லாமல் அறிந்துகொள்ளக் கூடியவனைத் தெய்வத்தோடு ஒத்தவனாக மதிக்க வேண்டும். குறிப்பினால் பிறர் குறிப்பினை அறிய வல்லவனை ஒருவர் தம் உறுப்புகளுள் ஒன்றைக் கொடுத்தாவது துணையாகக் கொள்ளுதல் வேண்டும். ஒருவன் கருதியதனை அவன் கூறாமலே அறிய வல்லவரோடு அதை அறியமாட்டாத மற்றையோர் உறுப்பால் ஒத்தவராக இருந்தபோதினும் அவரை வேறாகவே கருதவேண்டும். ஏனெனின்? குறிப்பால் குறிப்பை உணராத கண்கள், ஒருவன் உறுப்புக்களுடன் தானொன்றாக ஒத்திருந்தபோதினும் அவற்றால் என்ன பயன்?

அடுத்த பொருளைக் காட்டுகின்ற பளிங்குபோல, ஒருவன் நெஞ்சத்தில் மிக்குள்ளதை முகம் காட்டாநிற்கும். அம்முகம், ஒருவன் மகிழினும் சினப்பினும், தான் முற்பட்டு அந்நிலையைத் தெரிவிக்கும். ஆதலால் முகத்தைப் பார்க்கினும் பேரறிவுடைய பொருள் உலகத்தில் வேறு யாதுளது? குறையுற்றவன் மனத்திலுள்ளதைக் குறிப்பாலறிந்து, அதைத் தீர்க்கவல்லவரைப் பெற்றால், குறையுற்றோன் (அவரிடம் எதையும் சொல்லாமல்) அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாலே போதும். கண்ணின் பார்வை வேறுபாடுகளைக் கண்டறியவல்லவர்களைப் பெற்றால், ஒருவன மனத்திலுள்ள பகையையும் நட்பையும் அவனுடைய கண்களே சொல்லிவிடும். நாம் நுட்ப வறிவுடையோம் என்று மற்றையோர் கருத்தை அறிவோரின் அளவுகோலாவது கண்ணல்லாமல் வேறல்ல. எல்லாம் கண்ணால் அறியலாம்.

ஆதலால் உலகத்தில் பிறரின் குறிப்பறிந்து நடப்பது சிறந்த பண்பாகுமென்பதாம்.

எஉ. அவையறிதல்

சொற்களின் தொகுப்பினை அறிந்த தூய்மையுடைய வர் தாம் ஒன்றைக் கூறுங்கால், அவையின் தன்மையை அறிந்து, ஆராய்ந்து எடுத்துச் சொல்லுதல் வேண்டும். அன்றியும் சொற்களின் நடையை அறிந்து நடக்கும் நன் மையை யுடையவர் ஓர் அவையில் ஒன்றைச் சொல்லுங் கால், அவ் வவையின் கால நிலையை நன்கறிந்து சொல்லல் வேண்டும். அவையினது தன்மையை அறியாதவர் ஒன்றை அவையிற்சொல்ல முற்பட்டால் அவர் பேச அறியாதவரும் சொல்வன்மை இல்லாதவரும் ஆவர்.

அறிவுமிக்கார் அவையில் அறிவு மிக்காராய் நடக்க வேண்டும். அறிவற்றார் அவையில் தாமும் அறிவில்லா தவராய் நடக்கவேண்டும். தம்மினும் மிக்க அறிவுடையார் அவையில், முதலில் ஒன்றைச் சொல்லாதிருப்பது நல்ல தென்று வகுக்கப்பட்டவற்றுள் எல்லாம் மிக நல்லதாகும்.

அறிவாற் சிறந்தார் அவையினிடத்து ஒருவன் குற் றத்துக்காளாதல், நல்வழியில் நடக்கப் புக்காரொருவன் அந் நெறியினின்று நிலைதளர்ந்து வீழ்ந்ததை யொக்கும். குற்றமறச் சொற்களை ஆய்ந்துணர்வதில் வல்ல அறிஞர் அவையிடத்தே, பல நூல்களையும் கற்று அதன் தன்மை யறிந்தவரின் கல்வியானது நன்றாக விளக்கம் பெறும்.

ஆதலால் தாமே உணர்பவரின் முன்னிலையில் கற்ற வர் பேசுதல், தானே வளரும் பயிருள்ள பாத்திக்கண்ணீரைச் சொரிந்தாற் போல்வதாகும். நல்லார் அவையில் அவர் மனங்கொள்ளுமாறு சொல்ல வல்லார் அறிவில்லாதவர் கூட்டத்தில் மறந்தும் பேசுதல் கூடாது. அவ்வாறு பேசினால் அப் பேச்சு தூய்மையில்லாத முற்றத்தில் ஊற்றிய அமிழ்தம்போல் வீணாகும்.

ஆதலால் அவையறிந்து பேச வேண்டுவது, கற்று வல்லாரின் கடமையாகும் என்பதாம்.

எகூ. அவையஞ்சாமை

சொல்லின் தொகுப்பினை அறிந்த தூயமையை யுடையார், இது, நல்ல அவை, இது தீய அவையென அறிந்து நல்லோர் அவைக்கண் ஒன்றையும் வாய் சோர்ந்து சொல்லமாட்டார்கள். கற்றார் அவையில் தாம் கற்ற நுண்பொருளை அவர் மனங் கொள்ளுமாறு சொல்ல வல்லார், கற்றோர் எல்லோரினும் இவர் நன்கு கற்றார் என்று உயர்த்திச் சொல்லுதற்கு உரியார் ஆவார். போர்க்களத்தில் சென்று போர் செய்து மாள்வோர் பலராவர்; கற்றார் அவையில் அஞ்சாது பேசவல்லார் மிக அரியராவர்; அவ்வாறு அஞ்சாது சொல்ல வல்லவர், தாம் கற்ற பலவற்றையும் கற்றார் அவையில் அவர் மனங் கொள்ளுதற்கேற்பச் சொல்லி, தாம் கற்றவற்றினும் மிக்க நுண் கருத்துக்களைக் கற்றாரிடமிருந்து அறிந்துகொள்க.

அவைக்கு அஞ்சாமல் மறுமொழி கொடுத்தற் பொருட்டுச் சொல் இலக்கண முறையால் அளவை நூல் முதலியவற்றையும் கற்குக. பேசுந்திறமையில்லாதவர்க்கு நூல்களைக் கற்ற அறிவினாலாகிய பயனென்ன? ஒன்று மில்லையன்றோ? மன ஊக்கமில்லாதார் கையில் வாள்கொண் டிருந்தும் பயனில்லாதவாறு போலாகும். அவையில் பேசுந் திறமையில்லாது அஞ்சுவானுக்குக் கற்ற நூல்களி னால் உண்டாகும் பயனென்ன? அது, போர்க்களத்தில் பேடி கையிற்கொண்ட வாள் போலாகும்.

நல்லார் அவையில் தாம் கற்றவைகளை நன்கு எடுத்துக் கூறும் திறனற்றவர், பல நூல்களைக் கற்றும் பயனற்றவரேயாவர். அவர் பல நூல்களையும் நன்கு கற்றறிந்தும் கல்லாதவரினும் கடைப்பட்டவரே யாவர். அவைக்கு அஞ்சித் தாம் கற்றவைகளை அவையின்கண் சொல்லுந் திறனற்றவர், உலகில் உயிரோடிருந்தாலும் இறந்தவரை ஒத்தவரே ஆவர்.

ஆதலால், அவைக்கு அஞ்சாது உரைத்தலே கற் றோர்க்கு மேன்மையைத் தரும் என்பதாம்.

௭௪. நாடு

குன்றாத விளைச்சலை உண்டாக்கும் உழவரும் சிறந்தோர்களும் கெடாத பெருஞ் செல்வர்களும் இணைந்து வாழும் இடமே நாடாகும். அந்நாடு, அளவற்ற பொருளால் கேடின்றி விரும்பத் தக்கதாகி, விளைவதே நாடாகும்.

பாரமெல்லாம், தன்மேல் வருமாயினும் அவைகளை ஒருங்கே தாங்கி அரசனுக்கு வரிப்பொருள் முழுதும் கொடுக்கத் தக்கதே நாடு ஆகும்; மிக்க பசியும் நீங்காத நோயும் அழிவைச் செய்யும் பகையுமில்லாமல் இருப்பதே நாடாகும்.

பலவகையான வேறுபாடுற்ற கூட்டமும், தம்முடனிருந்தே பாழ்படுத்தும் உட்பகையும், அரசரை வருத்தும் கொல்லும் வினைக்குறும்பரும் இல்லாத நாடே நாடென்பது.

கெடுதல் என்பதையே அறியாமலும் ஒருகால் கெட்டாலும் தன் வளங்குன்றாததுமாகிய நாடே, நாட்டுள் தலைமையானதாகும். ஊற்றுநீர் மழைநீர் என்ற இருவகை நீரும், உயர்ந்த மலையும், அதிலிருந்து வரும் அருவிநீரும், அழியாத கோட்டையும் நாட்டிற்கு உறுப்பாம்.

நோய் இல்லாமை, செல்வம், விளைவு, இன்பம் பாதுகாப்பு என்னும் ஐந்தும் நாட்டிற்கு அழகாம். நாடென்று உயர்த்திக் கூறப்படுவது, தன்பால் எல்லா வளங்களும் அமைந்துள்ளதே. வேற்று நாட்டை எதிர்பார்ப்பது நாடென்று கூறப்படாததாகும். மேற்கூறிய வளமெல்லாம் ஒருங்கே அமைந்திருந்தாலும் வேந்தனோடு சார்ந்து அமைதி பெறாத நாடு, பயனற்றதாகும்.

ஆதலால், பசி பிணி இல்லாமல் வேந்தனோடு ஒற்றுமைப்பட்டு வாழ்வதே நாட்டுக்குச் சிறப்பாகு மென்பதாம்.

எரு. அரண்

பிறர் நாட்டின்மேற் படையெடுத்துப் போர் செய்யச் செல்வார்க்கும் அரண் (கோட்டை) ஆனது சிறந்தது. அஃதல்லாமலும் பிறர்க்கஞ்சித் தன்னைப் புகலிடமாக அடைந்தவர்க்கும் அதுவே சிறந்தது. அவ்வரண் என்று கூறப்படுவது, 'வற்றாத நீர்நிலையும், வெற்றிடமும்' மலையும், அழகிய நிழலையுடைய மரச் செறிவுள்ள காடுமேயாகும்.

இவ்வாறான அரண், உயர்ச்சி அகலம் வலிமை தன்பால் வந்து பிறர் சேர்வதற்கு அருமையென்னும் இந் நான்கின் அமைவேயென்று நூலோர் கூறுவர். அது, காக்க வேண்டிய இடம் சிறு அளவினதாய், விரிவான இடம் உடையதாய் அமைந்து மிக்க பகைவரின் ஊக்கத்தை அழிப்பதாகும். பின்னும் வேறொருவரால் கொள்ளுதற்கு அரியதாய், தன்னிடம் எல்லா உணவு வளங்களும் உடையதாய், தன்னுள் இருப்பார்க்கு எளிய தன்மையுடையதாய் இருக்கவேண்டும்.

இன்னும் அவ்வரண் எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி, பிறரால் அழிவுவந்த காலத்து அதைக் காத்தற்கு நல்ல வீரர்களைக் கொண்டமைவதாக உள்ளதாகும். பகைவர் முற்றுகையிட்டும் முற்றுகையிடாது போர் செய்தும் வஞ்சச் சூழ்ச்சி செய்தும் வேறெவ் வாற்றானும் பகைவரால் கைப்பற்றிக் கொள்ள இயலாத அருமைப்பாடு உடையதே அரண் ஆகும்.

போர்முனையில் பகைவர் அழியும்படியாக உள்ளிருந்தோர் செய்கின்ற போர் வன்மையால் பெருமைபெற்றுச் சிறப்புடையதாய் விளங்குவது அரண் ஆகும். இவ்வரண் மேற்கூறிய மாண்புடையதாக இருப்பினும் தொழிலில் மேம்பாடு இல்லாதாரிடத்திருப்பின் பயனில்லாததாகும்.

ஆதலால், அரண் இருப்பின் பகைவரை வெல்வது எளிதெனக் கொள்ளலாம் என்பதாம்.

எகூ. பொருள்செய்வகை

ஒரு பொருளாக மதித்தற்குத் தகாதாரையும் ஒரு பொருட்டாக மதிக்கவைக்கும் செல்வப் பொருளைப்போல ஒருவனுக்கு வேறு சிறந்த பொருள் உலகத்தில் இல்லை. ஏனெனின்? எல்லாப் பெருமையும் உடையராயினும் செல்வமில்லா வறிஞரை எல்லோரும் இகழ்ந்து பேசுவர். செல்வமுள்ளோரை எல்லோரும் போற்றிக் கொண்டாடிச் சிறப்புச் செய்வர். ஆதலால் செல்வப் பொருளென்னும் கெடாத விளக்கு, தாம் எண்ணிய நாட்டிடைச் சென்று பகையென்னும் இருளை மாய்க்கும். செய்யுந் திறமை யறிந்து நல்ல வழியில் ஈட்டிய பொருள் அதை யுடையானுக்கு அறத்தையும் இன்பத் தையும் ஒருங்கே கொடுக்கும். மக்கள்பாற்கொண்ட அருளோடும் அன்போடும் சார்ந்து வாராத பொருட் பெருக்கத்தை வேண்டாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

தானே பிறரிடமிருந்து திறையாகக்கிடைத்த பொருளும், சுங்கத்தால் வரும் பொருளும், தன் பகைவர் திறையாகக் கொடுத்த பொருளும் அரசனுக்குச் சேரவேண்டிய பொருள்களாகும். அன்பு ஈன்ற அருள் என்று கூறப்படும் குழந்தையானது, பொருள் என்று சொல்லப் பெறுகின்ற செவிலித் (ஊட்டும்) தாயால் வளர்வதாகும். கைப்பொருளுடையான் ஒருவன், ஒரு தொழிலைச் செய்தல், இரு யானைகள் போர் செய்தலை மலைமீதேறியிருந்து பார்ப்பதுபோல் இன்பந் தருஞ்செயலாம் பொருளை நிறையத் தேடி ஈட்டுதல் வேண்டும். ஏனெனின்? பகைவரின் செருக்கை அழிக்கும் படைக்கலம் (வேல்) அப் பொருளைக் காட்டினும் கூர்மையுடையதின்று. பொருளை ஈட்டியவர்க்கு அறமும் இன்பமும் எளியதாய்க் கிடைக்கும்.

ஆகவே, ஒருவன் அறமும் இன்பமும் எய்துவதற்குச் சிறந்த துணை பொருள் ஆதலால், அதனை நன்கு ஈட்டுதல் வேண்டுமென்பதாம்.

எள. படைமாட்சி

யானை முதலிய நால்வகைப் படைகளும் அமைந்து, போரின்கண் வரும் ஊறுபாட்டிற்கு அஞ்சாத வெல்கின்ற படையானது, அரசனுக்குரிய செல்வங்கள் யாவற்றினும் தலை சிறந்ததாகும். போரில் உலைவு ஏற்பட்டால் அஞ்சாது தாங்கும் வன்கண்மை வழி வழி வரும் படைக்கே உரியது.

கடல்போல் எலிகள் கூடி முழங்கினாலும் நாகப்பாம்பு மூச்சுவிட்டால் யாவும் அழிவடையும். அதுபோல, சிறந்த வீரன்முன் பல போர்வீரர்கள் நின்று எதிர்த்தாலும் தம் வீரம் இழந்து உடனே மாள்வர். தொன்று தொட்டு வந்த அஞ்சாத தன்மையுடையதுவே, அரசனுக்குரிய சிறந்த படையாகும்.

கூற்றுவனைவன் சினங்கொண்டு மேலேறிக் கொல்ல வரினும் நெஞ்சொருமித்து எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையதுவே படையாகும். அஞ்சாமை, மானம், சிறந்தவழியில் நடக்கும் நடக்கை அரசரின் நமபிக்கைக்கு உரிமையாதல் என்னும் நான்குமே அப் படைகட்குக் காவலாம்.

அப் படையானது தன்மேல் வந்த பகைவரது போரைத் தாங்கி அவருடைய தூசிப்படையை யெதிர்த்து மேற்செல்லும் தன்மையுடைய அச்சேனை வெல்லும் திறமும் எதிர்ப்பைத் தாங்கும் ஆற்றலும் இல்லாததாயினும் அணிவகுப்புத் தன்மையால் பெருமை பெறுவதாகும்.

சிறுமையும் அரசனிடம் மாருத வெறுப்பும், வறுமையுமின்றி இருக்குமானல் அத்தகைய படை, வெற்றியடையும். அபபடை நிலையுடைய வீரர்களை மிகுதியாகப பெற்றிருந்தபோதினும், படைக்குத் தலைமையேற்கும் வீரர் இல்லையாயின், படை எதிர்த்து நிற்காது.

ஆதலால் படை மாண்புடையதாக இருந்தால்தான் பகைவரை வெல்லலாம் என்பதாம்.

எஅ. படைச்செருக்கு

பகைவர்களே! எம் தலைவன் முன்னின்று போர் செய்து, அவனால் வெல்லப்பட்டு இறந்து, பின் நடுகல்லில் புகழ் பொறிக்க நின்றோர் பலராவர்; ஆதலால் எம் படைத் தலைவன் முன்னின்று போர் செய்ய ஒருப்படாதீர்! காட்டு முயலை எய்து கொன்ற அம்பைப் பார்க்கினும், யானையை யெறிந்து, தவறிய வேலினைக் கையிற் கொண்டிருத்தல் இனிமையானது.

பகைவர்மேல் இரக்கங் காட்டாத் தன்மையை மிக்க ஆண்மையென்று கூறுவர்; தாழ்வு நேர்ந்தகாலத்து இரக்கங் காட்டி அவர்க்கு உதவி செய்தலை, அதற்குக் கூர்மையென்று சொல்லுவர். தன்னை யெதிர்த்து வந்த யானையின்மேல் தன் கையிலிருந்த வேலை எறிந்தான்; அடுத்து வரும் யானையைக் குத்தக்கையில் வேலில்லை; தன் மார்பில் தைத்துள்ள வேலைக்கண்டு பறித்து மகிழ்ந்து நின்றான் ஓர் வீரன். விழித்திருந்த கண்ணில் வேல் கொண்டு எறிந்தாலும் அஞ்சிக் கண் இமை கொட்டினால், அது வீரர்க்கு இழுக்கு ஆகும். தான் உடம்பில் விழுப் புண்படாத நாட்களைப் பயனற்ற நாளாகப் போர்வீரன் எண்ணுவான். உலகில் நிலவும் புகழை மட்டும் விரும்பி வாழ விரும்பாத போர் வீரர், வீரக்கழல் அணிதல், ஓர் அழகுடையதே ஆகும்.

போர் வந்தால் உயிர்விடுதற் கஞ்சாது போர்புரியும் வீரர், தம் தலைவன் வேண்டா என்று சினந்தாலும் தம் வீரத்திறகுறையாமல் போருக்கே செல்வர். தாம் குறித் ததைக் குறித்தபடி செய்ய உயிர்கொடுக்கும் வீரரை, இகழுவார் யாருமில்லை. தம்மைப் பாதுகாத்த அரசரின் கண்கள் நீர் பெருகியோடப் போர்வீரன் சாகப்பெற்றால் அச்சாவு பிறரிடம் இரந்தாவது ஏற்றுக்கொள்ளும் தகுதியது.

ஆதலால் படைகள் வீரத்துடன் செருக்கும் நீங்காத வாறு இருக்கவேண்டு மென்பதாம்.

எசு. நட்பு

நட்பைப் போலச் செய்தற் கரியவைகள் வேறு என்ன? அந்நட்பைச் செய்து கொண்டால் தாம் செய்யப் புகும் தொழிலுக்கு வேறு பாதுகாப்பு என்ன இருக்கின்றது? நல்லோரின் நட்பு மூன்றும் பிறையைப் போல நாள் தோறும் வளரும். தீயோர் நட்பு, நிறை நிலாப்போல, நாளுக்கு நாள் குறையும். எனவே, நல்லோர் நட்பே கொள்ளற்குரியது. நற்குண நற்செய்கையுடையார் நட்புப், பழகுந்தோறும் கற்கக் கற்க இன்பங் கொடுத்தல்போல இன்பந் தருவதாகும். உலகில் ஒருவர்க்கொருவர் நட்புடையரா யிருத்தல், நகைத்திற்கிடனுன சிலவற்றைப் பேசிச் சிரிப்பதற்கல்ல. குற்றங்காணபபடின் அறிவுரை கூறி அவரைத் திருத்துதற் பொருட்டே யாகும். ஒருவரோடொருவர் நட்பாவதற்குச் சேர்ந்து உரையாடலும், பழகுதலும் வேண்டுவதில்லை. ஒத்த உணர்ச்சியே நட்பாகும் உரிமையைக் கொடுக்கும். ஆகவே, முகம் மட்டும் மலர வெளிக்காட்டிநட்புக் கொள்வது, நட்பாகாது; நெஞ்சிடமும் மலர உள்நட்புக் கொள்வதே நட்பாகும்.

அந்நட்பு, ஓர் அவையில் ஒருவன் உடுத்த ஆடை சோர்ந்தபோது அவன் கையானது சென்று உதவி, அதனை உடுத்து அவனது மானத்தைக் காத்தல் போல, நட்புச் செய்தவனுக்குத் துன்பம் வந்த காலத்துச் சென்று உதவுவதே நட்பாகும். அது, மேல் மேல் ஓங்கி வளரும் நிலைமை யாதென்றல்? எப்போதும் வேறுபாடில்லாமல் தன்னால் இயலும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலைமையாகும். 'இவர் நமக்கு இவ்வளவு சிறந்த அன்பினர்; நாம் இவர்க்கு இத் தன்மையுடையோம்' என்று உயர்வாகப் பாராட்டிக் கூறினும் அந் நட்புச் சிறவாது நிலையழிந்து போகும்.

ஆதலால் உலகில் நல்ல நட்புப்போலச் சிறந்ததில்லை யென்பதாம்.

அo. நட்பாராய்தல்

நட்புச் செய்த பின், அந் நட்பையுடையவர்க்கு அதி லிருந்து விடுதலை பெற இயலாது. ஆதலால், ஆராயாது நட்புக் கொள்ளுதலைப் போலக் கேடு தருவது வேறில்லை. ஆய்ந்து ஆய்ந்து ஒருவரோடு நட்புக் கொள்ளாதவன் நட்பு, முடிவில் தான் சாவதற்கான துன்பத்தைக் கொடுக்கும். ஆதலால் ஒருவன் குணத்தையும், அவன் குடிப் பிறப்பையும், குற்றத்தையும், குறைவில்லா அவன் சுற்றத்தின் தன்மையையும் அறிந்து நட்புச் செய்தல் வேண்டும். நல்ல குடியிற் பிறந்து தன் பால் வரும் பழிக்கு நாண கொள்வானின் நட்பைப், பொருள் கொடுத் தாவது கொள்ளுதல் வேண்டும்.

உலக நடைக்கு மாறுபட்டு நடந்தால் அவர் வருத்த முறும்படி சொல்லிவிலக்கியும், செய்யாதவாறு நெருக்கியும் திருத்தவல்லர், ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். நண்பர்களுக்கு வருங்கேடு நண்பர்களின் தன்மைகளை இவ்வளவின என்று நீட்டி அளந்து பார்ப்பதோர் அளவு கோலாகும். ஒருவனுக்கு மேன்மை யென்பது, அறிவில் லார் நட்பை நீக்கி விடுவதேயாம். ஊக்கம் குறைதற்குக் காரணமான செயல்களைச் செய்ய நினைத்தல் கூடாதது போல், ஒருவனுக்குத் துன்பம் வந்தபோது கைவிடுவாரின் நட்பைக் கொள்ளுதல் கூடாது. கெடுங்காலத்துக் கைவிட்டு நீங்குவார் நட்பினை, இயமன் உயிரைக் கொண்டு செல்லும்போது நினைத்தாலும் மனத்தையும் சுடும். ஆகவே குற்றமற்றார் நட்பை விடாமற் கொள்ளவேண்டும்; ஒன்றைக் கொடுத்தாவது தீயவர் நட்பை விலக்குதல் வேண்டும்.

ஆகலான், நட்புச் செய்வோர், நட்பை நன்கு ஆராய்ந்து தெளிந்து நல்லோர் நட்பையே ஏற்றுக்கொள் ளுதல் வேண்டு மெனபதாம்.

அக. பழைமை

பழைய நட்பென்று சொல்லப்படுவது யாதென்றால், அஃது, உரிமைபற்றி நண்பர் செய்பவற்றை ஒதுக்காமல், அதற்கு உடன்படுவதாம். ஆதலால் நட்பிற்கு உறுப்பாக உள்ளது நண்பினர் உரிமையாகச் செய்வனவாம். அதனால், அதற்கு இனியவராதல் நல்லோரின் கடமையாகும். இருவர் நட்புகட்கிடையே ஒருவன் உரிமைபற்றிச் செய்தவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பழகிய நட்பு என்ன பயனைக் கொடுக்கும்? ஆதலான் உரிமை பற்றி நண்பராயினார் கேட்காமல் ஒன்றைச் செய்து விடுவாராயின் அந்த உரிமையைப் போற்றி விரும்பப்படும் தன்மையினால் அதை விரும்புவர்.

நண்பர்களானவர் வெறுக்கத் தக்கவற்றைச் செய்தால் அதற்குக் காரணம் அறியாமை, அல்லது மிக்க உரிமை என்று அறிதல் வேண்டும். உரிமையின் எல்லையில் நின்றவர், தமக்குக் கெடுதல் நேர்ந்த இடத்தும் பழைய காலத்து நட்பை விடமாட்டார். அன்புடனே பழகிய நட்பினை யுடையவராய் வந்தோர், தம் நண்பரால் கெடுதல் நேர்ந்த காலத்தும் அன்பு நீங்கார். அத்தகையோர் நண்பர் செய்த பிழையைத் தாம் பொறுப்பதன்றிப் பிறர் சொன்னாலும் அதை யேற்றுக் கொள்ளார். உரிமையாளர்க்கு நண்பர் தவறு செய்தால் அத்தவறு செய்த நாளே சிறந்த பயனுள்ள நாளாம்.

உரிமை நீங்காது பழைய நட்பினையுடையார் நட்பினை, அவர் தவற்றுக்காக விட்டுவிடாத நட்புடையாரின் தன்மையை உலகம் விரும்பியேற்கும். பழைய நண்பர் தவறு செய்யினும் தம் உரிமைப் பண்பிலிருந்து மாறாதவர், பகைவராலும் பாராட்டி விரும்பப் படுவோராவர்.

ஆதலால் பழகிய நண்பர் தவறு செய்தாலும் தவறெனக் கருதாது உரிமையென்றே ஏற்றுக்கொண்டு அவர் நட்பைக் கைவிடா திருத்தல் நட்புக்குச் சிறப்பென்பதாம்.

அஉ. தீநட்பு

அன்பு மிகுதியினால் அவரை உண்ணலாம் போன்ற அவாத் தோன்றினாலும், தீக்குணமுடையவர் தீ நட்பானது வளர்வதைப் பார்க்கினும் தேய்ந்தொழிதல் சிறந்ததாகும். தமக்குப் பயன் கிடைத்தபோது சார்ந்தும், பயன் அற்ற போது அவரை விட்டு நீங்கியும் போகும் ஒப்பற்றவர் நட்பைப் பெற்றால் என்ன ? விட்டால் தான் என்ன ? பயனென்றும் இல்லை.

நட்பின் தன்மையைப் பார்க்காது தமக்குக் கிடைக்கும் ஊதியத்தைப் பார்க்கும் நண்பரும், அன்புக்காக ஒருவரை ஏற்காமல் பொருளை மட்டும் விடாது பற்றுகின்ற பொதுப் பெண்டிரும், மற்றவர் நன்மையைக் கருதாது திருடும் கள்வரும் ஆகிய இவர் ஒத்த தன்மையராவர். போர்மூண்ட காலத்தில் போர்க் களத்தில் வீழ்த்திச் செல்லும் குதிரையைப் போலுள்ள தியார் நட்பினும் தனிமையாக இருப்பது நன்மையாகும்.

பிறர் கூட்டுவித்தாலும் கூடாதவரின் தீயநட்பு உண்டாவதைப் பார்க்கினும் இல்லாமல் இருப்பதே நல்லது. அறிவற்றவனது மிக நெருங்கிய நட்பினும் அறிவுடையார் பகை கோடி மடங்கு நன்மையானது. அகத்தில் நட்பினர் நன்மையை விரும்பாது புறத்தில் நகைவிளைக்கும் தன்மையுடையவர் நட்பைப் பார்க்கினும் பகைவரால் வருவன பத்துக் கோடி மடங்கு நன்மையாகும்.

தம்மால் ஆகுங் காரியத்தைச் செய்யாதார் நட்பை, வெளியிற் கூறாமலே விட்டுவிடுதல் வேண்டும். செய்யும் செயல் வேறாகவும் சொல்லுஞ் சொல் வேறாகவும் உள்ளோரின் நட்பு, நனவினன்றிக் கனவிலும் துன்பந் தருவதாகும். வீட்டில் நட்புக் கொண்டாடி அவையின்கண் பழிப்பவர் நட்பைச் சேராமல் விட்டுவிடுதல்வேண்டும்.

ஆதலால் எக்காலத்தும் தீயவர் நட்பைக் கொள்ளலாகாது என்பதாம்.

அ௯. கூடா நட்பு

முன்பு சேராமல், சேரும் இடம் வாய்க்கும் வரை கூடியிருக்கும் நட்பானது, சிறந்த இடங் கிடைத்தால் அறவே அடித்து உடைப்பதற்குத் துணையாகும் பட்டடை போலாகும். தமக்கு உற்றுர் போன்று உறவல்லாதவருடைய நட்பு, இடங் கிடைத்தால் பெண்கள் மனம்போல வேறுபாடடையும்.

பல நல்ல நூல்களைக் கற்றிருந்தாலும், நல்ல மனமுள்ளவராகப் பழகுந் தன்மை மாண்படையாதவர்க்கு இல்லை. கண்டபோது முகத்தில் இனிமை காட்டிச் சிரித்து, உள்ளத்தில் தீமை கொண்டவர்களுடன் நட்புக் கொள்ள அஞ்சுதல் வேண்டும். மனத்தால் தம்மோடு சேராமல் பழகுகின்றவரை அவர் சொல்லை நம்பித் தெளியக் கூடாது.

நண்பர் போன்று நன்மையானவற்றைச் சொன்னாலும் பகை கொண்டவர் சொல் விரைவில் உணரலாம். வில்லின் வளைவு வணக்கமாகத் தோன்றினாலும் நன்மையாகக் கொள்ளக்கூடாது. பகைவர் வணங்கிய கையிடத்திலும் கொலைக் கருவி மறைவாக இருக்கும். பகைவர் அழுத கண்ணீரும் அத்தன்மையதே.

நட்பை மிகுதியாகச் செய்து, உள்ளூறத் தம்மை இகழும் பகைவரைத் தாமும் நட்பினுள் மகிழும்படி செய்து, பின் அவர் நட்பை விடுதலே நன்மையாகும். பகைவர் தமக்கு நட்பாகும் காலம் வந்தால், அவருடன் முக நட்பு வைத்துக்கொண்டு அகத்தில் நட்பு நீக்கிப் பின் அதையும் விட்டுவிடுதல் வேண்டும்.

ஆதலால் கூடா நட்பு எப்போதும் கூடாததாய் இருப்பதால், அந்நட்பை விலக்கிவிட வேண்டுமென்பதாம்.

அசு. பேதைமை

பேதைமை யென்பது யாதென்றால் தனக்குக் கேடு தருவதை ஏற்றுக்கொண்டு நன்மை தருவதை விட்டு விடுதலாம். ஒருவனுக்கு அறியாமையுள் மிக்க அறியாமை யாவது, தனக்கு ஒவ்வாதவற்றில் அவாக் கொள்ளுத லாகும். நாண வேண்டும் செயல்களுக்கு நாணமை, ஆராய வேண்டுமவற்றை ஆராயாமை, யாரிடத்தும் அன்பில் லாமை, எதையும் பேணமை, இவைகளே பேதையின் தொழில்கள்.

நல்ல நூல்களைக் கற்றும், பொருள்களை நன்கறிந்தும், பிறர்க்கு எடுத்துச்சொல்லியும் தாம் மட்டும் அடங்கி நடக்காத பேதையரைக் காட்டினும் பேதையர் ஒருவரு மில்லை. பல பிறவிகளிலும் தான் கிடந்தழுந்தும் நிரயத் துன்பத்தை இவ்வொரு பிறவியில் செய்பவனே பேதை.

பேதை, ஒரு தொழிலைச் செய்ய முற்பட்டால் அத் தொழிலும் கெடும்; தானும் தளை (கட்டில்) யில் மாட்டிக் கொண்டு துன்புறுவான். பேதை பெருஞ் செல்வம் பெற்றால் அயலார் உண்டு களிப்பர்; தம்மவர் பசியால் வாடுவர். பேதையின் கைக்கு ஒன்று கிடைக்குமாளுல், அவன் நிலைமை பித்துப் பிடித்த ஒருவன், கள் குடித்து மயங்கின செயல் போலாகும்.

பேதையரின் நட்பு, மிகமிக இனிமையுடையது. ஏனெனின் பிரிவு நேர்ந்தால், துன்பம் எதுவும் தருவ தில்லை. அப் பேதை நல்லோர் கூட்டத்தில் போய் நுழைவது, ஒருவன் தூய்மையற்றவைகளை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்த தன்மையைப் போன்றதாகும்.

ஆதலால், பேதையாரோடு நட்புக் கொள்ளலாகாது என்பதாம்.

அரு. புல்லறிவாண்மை

ஒருவனுக்கு இல்லாமை யெல்லாவற்றுள்ளும் இல்லாமையாவது, அறிவில்லாமையே. மற்றப் பொருள் இல்லாமையை உலகம் இல்லாமையாகக் கொள்ளாது, புல்லறிவாளன், ஒருவனுக்கு ஒன்றை மனமுவந்து கொடுத்தால், அது பெறுவோன் நல்லூழேயாம்.

புல்லறிவாளர் தம்மைத் தாமே வருத்தும் வருத்தம், பகைவராற் கூடச் செய்ய முடியாது. புல்லறிவென்று சொல்லப்படுவது தம்மைத் தாமே 'யாம் நல்லறிவுடையோம்' என்று, மதிக்கும் மயக்க அறிவாகும். கல்லாத வற்றையும் கற்றதாகக் காட்டிக் கொள்ளுதல், அவர் குற்றமறக் கற்று வல்ல பொருள்களைக் குறித்தும் மற்றவர் கட்கு ஐயத்தை உண்டாக்கும்.

அவர், தம்பாலுள்ள குற்றத்தை அறிந்து நீக்கா விட்டால் ஆடையால் உடம்பில் மறைத்தற்குரிய பகுதியை மறைப்பது புல்லறிவாகும். மறைவான பொருள்களை மனத்தினுள் அடக்காமல் வெளியாக்கும் புல்லறிவாளன் தனக்குமிக்க வருத்தத்தை உண்டாக்கிக் கொள்வான். அவன் அறிவுடையார் சொல்லும் நல்லவைகளைக் கேட்கான்; தானும் அறியான்; உடலை விட்டுஉயிர் நீங்கும் வரையும் உலகிற்கே ஒரு நோயாவான்.

தான் எல்லாம் அறிந்ததாக மதித்து ஒன்றும் அறியாதவனுக்கு ஒன்றை அறிவிப்போன், தானே அறிவில்லாதவனாய் நிற்பான்; புல்லறிவாளனோ தான் அறிந்த வகையால் அறிவாளனாகத் தோன்றுவான். அவன் உலகத்தார் உண்டென்று கூறுபவற்றை இல்லையென்று கூறுவான்; உலகில் திரிகின்ற ஒரு பேயென்று கருதப் படுவான்.

ஆதலால், புல்லறிவாளர் தாம்கொண்டதே உண்மை யென்று கருதும் தன்மையராவர் என்பதாம்.

அகூ. இகல்

உலகில் எல்லா உயிர்கட்கும் வேறுபாடு உண்டு; அது தீயகுணத்தை வளர்க்கும்; அக் குற்றத்தையே இகல் (மாறுபாடு) என்று சொல்வர் அறிவுடையார். ஒருவன் தன்னோடு சேராமல் வேறுபடுதலை யெண்ணி வெறுப்பனவற்றைச் செய்தாலும் இகல் கொண்டு அவனுக்குக் கேடு செய்யாதிருத்தல் சிறந்ததாகும்.

மாறுபாடு என்னும் துன்பந்தரும் நோயை ஒருவன் நீக்கினால், அஃது அவனுக்குக் கெடாத புகழைக் கொடுக்கும். இகலென்று கூறப்படும் துன்பங்களுள் கொடிய துன்பம் கெட்டு விடுமானால் அஃது ஒருவனுக்கு இன்பத்துளெல்லாம் மிக்க இன்பத்தைக் கொடுக்கும். மாறுபாட்டுக்கு மடங்கி நடக்கும் தன்மையுடையவரை வெல்லக் கருதுவோர் யாருமில்லை.

இகல் கொள்வதால் வெல்லுதல் இனியதென்று நினைப்பவன் வாழ்க்கை தவறிப் போதலும் முழுதும் கெடுதலும் விரைவில் உண்டாகும். இகலொடு சார்ந்த தீய அறிவினையுடையவர் மேன்மை கொள்ளுதற்குக் காரணமான உண்மைப் பொருளை அறியமாட்டார். இகலிற்கு மடங்கி நடத்தல் ஒருவனுக்குச் செல்வத்தைத் தரும். அஃதின்றி அதனை எதிர்த்து நின்றால் கேடு வந்து தாக்கும்.

செல்வம் பெருகுங்கால் ஒருவனுக்கு இகல் தோன்றுது. கேடு வருங் காலத்தில் மாறுபாட்டு எண்ணம் உண்டாகும். ஆதலால் துன்பந் தருபவை யெல்லாம் இகல் ஒன்றாலேயே உண்டாகும். நட்பொன்றினாலே நல்ல அறமாகிய பெருமித நிலை உண்டாகும்.

ஆதலால், இகலென்னும் தன்மையை ஒருவன் நீக்கி நடந்தால் அவன் கெடாத புகழுடன் வாழலாமென்பதாம்.

அஎ. பகைமாட்சி

வலியாரோடு பகைத்தல் கூடாது; மெலியாரோடு பகை கொள்ளலாம். யாரிடத்தும் அன்பில்லாதவன்; அதுவே யன்றி வலிமையான துணையில்லாதவன்; பகைவனை எவ்வாற்றால் வெல்லமுடியும்? அச்சங் கொள்ளாததற்கு அஞ்சுவோன்: அறியவேண்டு மவற்றை அறியாதவன்; அமைதியில்லாதவன்; ஈகையில்லாதவன்; பகைவர் வெல்வதற்கு மிக எளிமையானவன் ஆவான்.

சினம் நீங்காதவன்; நிலைமையற்றவன்; இத் தகையோனை வெல்வது யாவர்க்கும் எளிமையானதாகும். நல்வழி அறியாதவன்; பொருத்தமான நல்ல செயல்களைச் செய்யாதவன்; தனக்கு வரும் பழிகளைப் பாராதவன்; பண்பாடு இல்லாதவன்; இத் தகையான் அவன் பகைவர்க்கு இனிதாக வெல்லத் தக்கவன் ஆவன்.

அளவு காணமுடியாத சினமுடையவன்; மேல் மேல் வளர்கின்ற மிக்க காமத்தையுடையவன்; இத் தன்மையோன் பகையை எவரும் விரும்பி ஏற்றுக் கொள்ளலாம். ஒரு தொழிலைத் தொடங்கிச், செய்ய அறியாதவன் பகையை, பொருள் கொடுத்தாவது கொள்ளலாம்.

நற்குணமில்லாமல் பல குற்றங்களும் உடையவனானால் அவன் துணையற்றவன் ஆவான். தனக்கென ஒரு துணையும் வலிமையும் இல்லாமையால் அந்நிலையே அவன் பகைவர்க்கு நன்மையாகும். அறிவுமில்லாமையோடு அச்சமும் உள்ளவரைப் பகைவராகப் பெற்றால் அவரை எதிர்த்துப் பகை கொள்வோர்க்கு உயர்ந்த இன்பங்கள் நீங்கா. கல்வி கற்காதவனைப் பகைத்துக் கொள்ளும் எளிய செயலைக் கூடச்செய்ய இயலாத ஒருவனிடம் எந்தக் காலத்தும் புகழ் வந்தடையாது.

ஆதலால், பகையை ஒருவன் தகுதியறிந்து கொண்டே வெல்ல வேண்டுமென்பதாம்.

அஅ. பகைத்திறம் தெரிதல்

பகையென்று சொல்லப்பெறும் தீமையை ஒருவன் விளையாட்டாகக் கூடக் கொள்ளுதல் கூடாது. ஒருவன் வில்லே ஏராகக் கொண்டுள்ள கொடியாரோடு பகை கொண்டாலும், சொல்லே ஏராகவுடைய அறிஞர்களின் பகையைக் கொள்ளுதல் ஆகாது. தனியாக இருந்து பலரோடும் பகை கொள்பவன, பித்துக் கொண்டவரினும் அறிவற்றவனுவான்.

பகையையே நட்பாகக் கொண்டு நடப்பவன், பெருமையில் இவ்வுலகம் அடங்கி நிற்கின்றது. ஒருவனுக்கு யாதொரு துணையுமில்லே; அவனுக்குத் துன்பஞ் செய்யும் பகை இரண்டு; அவ்வாருயின், அப்பகை இரண்டில் ஒன்றைத் தனக்குத் துணையாகக் கொள்க.

பகைவனே முன் அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும் தாழ்வு ஏற்பட்டபோது தெளியாமலும் நீக்காமலும் விட்டு விடுதல் வேண்டும். அறியாத நட்பினர்க்குத் தன் துன்பத்தைச் சொல்லலாகாது. தன் மெலிவு பார்க்கும் பகைவர்க்குத் தன் வலிமைக் குறைவைக் காட்டலாகாது.

செய்யும் வகையையறிந்து தன்னே வலிமைப் படுத்திக் கொண்டு தன்னேப் பாதுகாத்துக் கொண்டால் பகைவர் செருக்குத் தாளுகவே அழிந்து போகும். முள் மரத்தை இளேதாக இருக்கும்போதே கிள்ளி யெறிந்துவிடுதல் வேண்டும். வளர விட்டுவிட்டால் அது பெரிதாகி வெட்டுவோரின் கையையும் வருத்தும். அதுபோலப் பகை தோன்றியபோதே ஒழிக்க வேண்டும். வளரவிட்டால் தம்மையே அது அழிக்கும். பகைப்போரின் செருக்கை அடக்காமல் விட்டு வைத்திருப்பவர், மூச்சு விடும் காலம் அளவுகூட உயிரோடு வாழ்ந்திருக்க மாட்டார்.

ஆதலால், பகையை வளர விடாமல் களேந்தெறிய வேண்டுமென்பதாம்.

அகூ. உட்பகை

நிழலும் நீரும் முன் இன்பமாக இருந்த போதினும் நோயுற்ற காலத்தில் துன்பம் தரும். அதுபோல, உறவினர் முன்பு நல்லராயினும் துன்பஞ் செய்வாராயின் அச்செயல் தீயனவேயாகும். ஆதலால் வாளையொத்த கேடு செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டுவதில்லை; உறவினர் போலிருந்து உட்பகை கொண்டிருப்போர்க்கு அஞ்சவேண்டும். உட்பகைக்கு அஞ்சி, ஒருவன் தன்னைக் காத்துக் கொள்க; காவா விட்டால், மண்ணை அறுக்கின்ற கருவிபோல, உடனிருந்தே அழித்து விடும்.

மனக் கோட்டமுள்ள உட்பகை உண்டானால், அது அவனுக்குச் சுற்றம் சேர்ப்படாமைக்குக் காரணமான குற்றங்கள் பலவற்றையும் தரும். அவ் வுட்பகை வருகின்ற முறையில் வருமானால், அஃது ஒருவனுக்கு இறக்கும் வகையான குற்றங்கள் யாவும் கொடுக்கும். பகைத் தன்மை உற்றாரிடத்தே உண்டாகுமானால், இறவாமல் தப்பிப் பிழைப்பது அருமைப்பாடாகும்.

செப்பினது சேர்க்கை இணைந்திருந்த போதிலும்' பிளவுபட்டே யிருப்பது போல, உட்பகையுடையவர் ஒன்று பட்டிருந்தாலும், மனத்தில் வேறுபட்டே யிருப்பர். உட்பகையுள்ள குடும்பம், அரத்தால் அராவப் பொன் தேய்ந்து அழிவதுபோல, நாளுக்கு நாள் கெடும். எள்ளுக் காயின் பிளவு போல உட்பகை சிறிதாக இருந்தாலும், ஒரு குடும்பத்தை அழிக்கத் தக்க கேடு அதனால் உண்டாகும். ஆதலால், மனத்துட் பகைகொண்டுள்ளாரோடு கலந்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிலினுள்ளே பாம்போடு சேர்ந்தே குடியிருந்தாற் போல மனக் கலக்கத்தையே உண்டாக்கும்.

ஆதலால், உட்பகையை அறவே விட்டொழித்து வாழ்வது முதன்மையான தென்பதாம்.

---

௯௦. பெரியாரைப் பிழையாமை

எதையும் முடிக்கவல்ல பெரியாரின் ஆற்றலை இகழா திருத்தல், தமக்குத் துன்பம் வாராமல் காப்பவர் காவலு ளெல்லாம் முதன்மையானது. இத்தகைய பெரியாரைப் போற்றாது நடந்தால் அவரால் தமக்கு நீக்க முடியாத துன்பம் ஏற்படும். ஒருவரைக் கொல்ல வேண்டின் அவ்வாறே முடிக்க வல்லவரிடத்து, ஒருவன் கெட விரும்பினால் கேளாமலே குற்றத்தைச் செய்யலாம்.

எல்லாஞ் செய்ய வல்லவர்க்கு, அஃதியலாதார் துன்பஞ் செய்ய முற்படுதல், கேடு செய்யும் இயமனைக் கைகாட்டி, 'வருக'வென் றழைத்தல் போல்வதாகும். கொடிய வலியினையுடைய அரசரின் சினத்துக்கு இலக் கானவர், எங்கே சென்று எங்கிருந்தாலும் ஆங்காங்கே இருக்க இயலாது அழிந்தொழிவர். ஆதலால், ஒருவன் நெருப்பால் சுடப்பட்டாலும் அவன் தப்பித்துக் கொள்ள லாம். ஆனால் பெரியோர்க்குக் குற்றஞ் செய்து அக் குற்றத்தால் வரும் துன்பத்துக்குத் தப்பிப் பிழைத்தல் முடியாது.

பெருமை வாய்ந்த தக்கோர் சினந்தாராயின், வகை வகையான சிறந்த வாழ்க்கையும் இந்திரச் செல்வமும் என்னாகும்? அழிந்தொழியும். ஆகவே மலைபோல் உயர்ந்த பெரியோர் ஒருவனை வெகுண்டால் உலகில் அழியாமல் நிலைபெற்றாற் போல் உள்ளாரும், தம் சுற்றத்தோடு ஒருங்கே அழிவர்.

உயர்ந்த கொள்கையுடைய பெரியார் வெகுளுவாரா னால் அரசனும் தன் அரசநிலைமாறிக் கெட்டு விடுவான்; மிகச் சிறப்பாக அமைந்த பெருமை வாய்ந்தவர், வெகுண் டால் மிகமிக உயர்ந்த சார்புடையராயினும் அதற்குத் தப்ப இயலாது கெடுவர்.

ஆதலால், பெரியார்க்குப் பிழை செய்யாது வாழ்வதே சிறப்புடையதென்பதாம்.

கூக. பெண் வழிச்சேறல்

தம் மனையாளை விரும்பி அவள் நோக்கப்படி நடப்பவர், மாட்சிமிக்க அறப்பயனை அடையார்; தம் கடமை செய்தலை விரும்புவோர், வேண்டாத பொருளும் அவ்விருப்பமே. தன் ஆண் தன்மையை இழந்து, தன் மனையாளின் பெண் நலத்தை விரும்பினேன் செல்வத்தைத் தன் விருப்பம் போல் கொடுக்க இயலாததனால் அது நாணத்தைக் கொடுக்கும்.

ஒருவன் தன் மனைவியிடத்துத் தாழ்ந்து நிற்கின்ற அச்சம், பெரியோரிடத்துச் செல்லுங்கால் அவனுக்கு எக் காலத்தும் நாணத்தைக் கொடுக்கும். மனையாளுக்கு அஞ்சி இம்மை மறுமைப் பயனை இழந்து நிற்கின்றவன் செய்கின்ற காரியங்கள் உயர்வடையாது கெடும். மனைவிக்கு அஞ்சி நடக்கின்றவன், எந்தக் காலத்தும் நல்லோர்க்கு நன்மை செய்ய அஞ்சுவான்.

ஆதலால், தம் மனைவியின் மெல்லிய தோளுக்கு அஞ்சுவோர் தேவர்கள் போல் இவ்வுலகத்தில் சிறப்புற வாழ்ந்தாலும் பெருமையற்றவரே ஆவர். மனைவியின் ஏவலைச் செய்து வாழ்கின்ற ஆண் பிறப்பை விட, நாணத்தைத் தன் இயற்கையாகக் கொண்ட பெண் பிறவியே பெருமையுடையதாகும். ஏனெனின், தம் மனையாள் விரும்பியபடி நடக்கும் தன்மையர், தம் நண்பர் குறையை நீக்கமாட்டார் ; அறமும் செய்யமாட்டார்.

அறவழி நடக்கும் செயலும் அதற்குக் காரணமான பொருளீட்டும் முயற்சியும் இதனின் வேறான இன்பமும் தம் மனைவியின் ஏவலைச் செய்வோரிடத்து இருக்கமாட்டாது. ஆதலால் எண்ணுகின்ற நெஞ்சப் பாங்குடையவர்க்கு எக்காலத்தும் மனையாளின் நோக்கம் போல் நடக்கும் அறியாமை இல்லை.

ஆதலால், பெண் வழிச்சேருது பெருமையோடு வாழ வேண்டுமென்பதாம்.

கூஉ. வரைவில் மகளிர்

அன்பால் விருப்பங் கொள்ளாமல்; பொருட்காக விருப்பங்கொள்வாள் வரைவில் மகளிராவர். இவர் இனிய மொழி துன்பங் கொடுக்கும். அம் மகளிர் தமக்குக் கிடைக்கும் பயனை ஆராய்ந்தறிந்து பசப்புரை பகரும் பண்பற்ற தன்மையரின்; தீயொழுக்கத்தைத் தெரிந்து நட்புச் செய்யாது விட்டுவிடுதல் வேண்டும்.

பொருளையே விரும்பும் பொதுப் பெண்களின் பொய்க் கூட்டுறவு, இருட்டறையில் முன்பின் அறியாத ஒரு பிணத்தைத் தழுவி மகிழ்தலை ஒக்கும். ஆதலால், அருட் பொருளை ஆராய்ந்தறியும் அறிவினையுடையார், பொது மகளிரின் புன்மையான இன்பத்தை விரும்பார்.

பொருளொன்றையே விரும்பிப் பொருள் தருவார்க் கெல்லாம் தம் புன்மையான இன்பத்தைத் தரும் பொது மகளிரின் உறவை அறிஞர் விரும்புவாரல்லர். தம் புகழை உலகில் நிறுத்தும் தன்மையராகிய உயர்ந்தோர் ஆடல் பாடல் அழகென்றவற்றால் ஆடவரை மயக்கும் பொருள் மகளிரின் சிற்றின்பத்தை விரும்பிச் சேரார்.

பொது மகளிரின் தோளை, நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் ஆற்றல் இல்லாதவர் புணர்வர். பொது மகளிரின் சேர்க்கை வஞ்சத்தைக் கண்டறியும் தன்மையற்றவர்க்கு 'மோகினிப் பேய்' என்று கூறுவர் பெரியோர். உயர்ந் தோர், தாழ்ந்தோர் என்னும் பாகுபாடில்லாது பணங் கொடுப்போருடன் புணருகின்ற வரைவில் மகளிரின் தோள், அறிவற்ற கீழ்மக்கள் அமிழ்ந்து கிடக்கின்ற நரகம் ஆம். கவட்டை மனத்தையுடைய பொதுமகளிரும், கள்ளும் சூதும் திருமகளால் வெறுத் தொதுக்கப்பட் டவரின் நட்பாகும்.

ஆதலால், வரைவில் மகளிரின் கூட்டுறவு, நன்மை யின்றித் தீமையே தருவதென்பதாம்.

கூஅ. கள்ளுண்ணாமை

கள்ளின் மேற் காதல் கொண்டு நடப்பவர், எக் காலத்தும் யாராலும் அஞ்சப்படார்; புகழும் இழந்து விடுவார்; ஆதலால் எவரும் கள்ளை உண்ணாதிருப்பாராக; நல்லோரால் மதிக்கப்படாதவர் கள்ளை உண்ண வேண்டு மானால் உண்க. குடித்துக் களிப்பது, பெற்ற தாய்க்கும் வருத்தந் தருமானால், நல்லோர் முன் அது எவ்வளவு அருவருக்கத் தக்கது? கட்குடி யென்னும் பெருங் குற்ற முடையவரைக் கண்டு நாணம் புறங்காட்டி ஓடிவிடும்.

விலை கொடுத்துக் கள்ளுண்டு அறியா நிலையைத் தேடிக் கொள்ளுதல், அறியாமையே ஆகும். கள்ளுண் போர் மயக்கத்தால், உறங்கினோர் அன்றி இறந்தவரோ டொத்தவராவர்; அவர் எந்தக் காலத்தும் நஞ்சுண்பவ ரோடு ஒத்தவராவர். கள்ளை மறைத்துண்டு தம் அறிவு தளர்வோர், இகழ்ச்சி சொல்லி எல்லோராலும் சிரிக்கப் படுவோராவர்.

கள்ளுண்டவன் தன் நெஞ்சில் ஒன்றையும் ஒளித்து வைக்க இயலாமல் வெளிப்படுத்தி விடுவான். ஆதலால் கள்ளுண்டு நான் அறியேனென்று சொல்வதைக் கூடக் குடியர் விட்டுவிடுதல் வேண்டும். கள்ளுண்பவனைத் திருத்த முற்படுதல், நீரினுள் மூழ்கிக் கிடப்பவனை மற் றொருவன் விளக்கெடுத்துத் தேடிப் பிடித்தல்போல் இயலாத செயலாகும்.

கள்ளுண்ணாதபோது கள்ளுண்டவனது அறிவுக்கேடு கண்டு 'கள்ளுண்டால் இவ்வாறு தானே நடப்போம்' என்று நினைக்கவேண்டும்.

ஆதலால், கள்ளுண்டல் அறிவு மயக்கத்தைக் கொடுப்பதால் அதை உண்ணாதிருக்க வேண்டு மென்ப தாம்.

கூசா. சூது

வெல்ல வல்லன் ஆனாலும் சூதை விரும்பா திருப் பாயாக. வென்றாலும் அது, தூண்டில் முள் இரையை மீன் விழுங்கினாற்போல் பின் துன்பந் தரும். சிறு பொருளைச் சூதாற் பெற்று ஆசையால் பெரும்பொருளையும் இழக்கும் சூதர்க்கு நன்மை பெற்று வாழும் வழி உண்டாகுமா? உண்டாகாது.

உருளும் கவற்றிலுள்ள ஆயத்தை ஓவாது கூறிக் கூறிச் சூதாடுவானானால் ஒருவன் ஈட்டிய பொருளும் வருவாயும் வேறொருவனைப் போய்ச் சேரும். சூது தன்னை விரும்பியவர்க்குப் பல துன்பங்களையும் கொடுத்துப் புகழையும் கெடுக்கும். சூதைப் போல வறுமை தருவது வேறொன்றுமில்லை. சூதாடு கருவியையும், இடத்தையும், ஆடும் வன்மையையும் விடாதவரே இப்போது வறுமை நிலையில் இருப்பவராவர்.

சூதென்னும் தொழிலுள்ளவர், வயிறு நிறைய உணவு கிட்டாதவராகிப் பல துன்பப்படுவர். ஒருவன் சூதாடு மிடத்தையே சேருவானானால், அது செல்வத்தையும் நற் குணங்களையும் ஒருங்கே கெடுத்துவிடும். இச் சூதானது பொருளைக் கெடுத்து, பொய்யை மேற்கொள்ளச் செய்து மனத்திலுண்டாகும் இரக்கத்தையும் கெடுத்துத், துன் பத்தை உண்டாக்கும்.

சூதாடலையே கொள்வானானால் அவனுக்குப் புகழ் கல்வி செல்வம் உணவு உடை யென்னும் ஐந்தும் கிட்டாது. துன்பம் வருவதை மேலும் மேலும் உயிர் விரும்புமாறு போல, சூதாடுவோன் ஓட்டமாக வைத்து ஆடும் பொருள்கள் இழக்குந்தோறும் விடாமல் மேலும் மேலும் அச் சூதாடலையே விரும்புவான்.

ஆதலால், சூதாடலை விட்டொழிக்க வேண்டுமென் பதாம்.

௯௫. மருந்து

மருத்துவ நூலோர் வாதம் பித்தம் ஐ (சிலேத்துமம்) என எண்ணிய மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் ஒருவனுக்கு நோய் உண்டாக்கும். ஒருவன் முன் உண்ட உணவு செரித்தது அறிந்து பின் உண்பானானால் அவன் உடம்புக்கு மருந்தென்ற ஒன்றே வேண்டுவதில்லை. முன் உண்டது செரித்தால் அதுபோல் பின்னும் செரிக்கும் அளவறிந்து உண்ணல் வேண்டும்; அஃது, அரிய உடலைப் பெற்றவன் நெடுநாள் வாழத்தக்க வழியாகும்; முன் உண்டது செரித்ததை யறிந்து மிகப் பசித்த பின் தன் உடலுக்கு மாறுபாடு இல்லாத உணவை உண்டால் நோயால் அவனுக்குத் துன்பம் வராது.

செரித்த தறிந்து உண்பவன் உடலில் இன்பம் எவ்வாறு உண்டாகுமோ? அவ்வாறே மிக்க இரை யெடுப்பவனுக்கு நோய் நிலைபெற்று நிற்கும். உணவைச் செரிக்க வைக்கும் சூட்டின் அளவு தெரியாமல் உண்பானானால் அளவின்றி நோய் உண்டாகும். நோய் வந்தால் அந்நோயைத் தீர்ப்பதற்கு, நோய் இன்னதெனத் தெரிந்து, அதன் பின் அது வருதற்குக் காரணத்தை யறிந்து, பின், அது தீர்க்கும் வழியையும் அறிந்து உடலுக்குப் பொருத்த முறச் செய்க.

மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய அகவையையும் நோயின் அளவையும் அதைத் தீர்த்தற்கேற்ற காலத்தையும் ஆராய்ந்து நோயை நீக்கவேண்டும். நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என, மருத்துவ முறை, அந்த நான்குவகை கொண்டதாகும்.

ஆதலால், ஒருவன் தன் உடம்புக்கு ஏற்ற உணவுகளையே உட்கொண்டு வந்தால், மருந்தென்ப தொன்றும் வேண்டாது நெடுங்காலம் வாழலாம் என்பதாம்.

சுசு. குடிமை

நடுவு நிலையும் நாணமும் உயர் குடிக்கண் பிறந்தவரிடத்தல்லாமல், மற்றவரிடத்து அமைவதில்லை. நற்குடியிலே பிறந்தவர்கள் ஒழுக்கம் உண்மை நாணம் ஆகிய இம் மூன்று பண்புகளிலும் வழுவமாட்டார்; நற்குடியில் பிறந்தவர்க்கு யாரிடத்தும் முகமலர்ச்சியும், வறியார்க்குக் கொடுத்தலும், இன்சொற் பேசுதலும், ஒருவரையும் இகழ்ந்து பேசாத இயல்பும் ஆகிய நான்கும் உரிய பண்புகள் என்று சொல்லலாம்.

பல கோடிக் கணக்கான பொருளைப் பெற்றாராயினும் நற்குடிப் பிறந்தவர், ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யமாட்டார். தம்மால் ஒருவர்க்கு ஒன்று கொடுக்க இயலாத வறுமைக் காலத்தும் தம் பண்பாட்டில் மாறாமல் இருப்பர். குற்றமற்ற தம் குடிப்பிறப்புக்கு ஒப்ப வாழ விரும்புவோர், வறுமையுற்ற காலத்தும் உயர்வில்லாத செயல்களைச் செய்யமாட்டார். குடிப்பிறந்தாரிடத்துள்ள குற்றம் சிறிதாயினும் வானத்திலுள்ள நிலவின் களங்கம் போல் வெளிப்பட்டு நிற்கும்.

இக் குடிப்பிறந்தோர்பால் இரக்கமற்ற தன்மை தோன்றுமானால் அவரை அக் குடிப்பிறப்புப் பற்றி ஐயங் கொள்ள நேரும். நிலத்தின் இயல்பை அதில் முளைத்த பயிர்கள் காட்டுவது போல, நற்குடிப் பிறந்தவரின் தன்மையை அவர் சொற்களே வெளிப்படையாகக் காட்டும். ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையனாக வேண்டும்; குடிப்பிறப்பின் உயர்வு வேண்டுமானால் பணியப்படுவோர் யாவரிடத்தும் பணிவு வேண்டும்.

ஆதலால், நல்ல குடிப் பிறப்புடையாரிடத்து, ஒழுக்கம், உண்மை, நாணம் முதலியன விளங்கித் தோன்றுமென்பதாம்.

---

௯௭. மானம்

இன்றியமையாத சிறப்புடைய செயல்களே யானாலும், குடிப்பெருமைக்கு இழுக்காகும் செயல்களை ஒருவன் செய்தலாகாது. புகழோடு பெரிய ஆண்மையையும் விரும்புவோர், புகழ்தேடும் வழியிலும் குடிப் பெருமைக்கு ஏலாத செயல்களைச் செய்யமாட்டார். ஆதலால் ஒருவன் செல்வமுள்ள காலத்தில் யாருக்கும் பணிதல் வேண்டும். அவனே வறிஞனான காலத்து யாருக்கும் பணியாத உயர்வு கொள்ள வேண்டும்.

மக்கள் தம் நிலை தடுமாறிய காலத்தில், தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற மயிரினைப்போல் மதிக்கப் படார். மலைபோல் உயர்ந்த நிலையினரும் தாழ்வான செயல்களைக் குன்றிமணியளவு செய்தாலும் தாழ்ந்து போய் விடுவர். மதியாமல் இகழ்கின்றவரின் பின்னே சென்று பணிவுற்று நிற்கும் நிலை, ஒருவனுக்கு இவ்வுலகில் புகழ் தராது; மறுமையில் தேவருலகினும் செலுத்தாது; அதனால் வேறு பயனென்ன? தன்னை மதியாதார் பின் சென்று ஒருவன் பொருள் பெற்று வாழ்தலைக் காட்டினும் அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்து போனான் என்று சொல்லப்படுதல் நல்லதாம்.

ஒருவனுடைய குடிப்பிறப்புக்குரிய மானங்கெட நேர்ந்தபோது, இறவாமல் அவன் இருப்பது, பயனற்ற உடலை இன்னும் வாழவைக்கும் மருந்தாகுமோ? பயனில்லையன்றோ? தன் மயிரொன்றற்றால் உயிரை மாய்த்துக் கொள்ளும் கவரிமானை யொத்த குணத்தினர், மானங் கெட நேர்ந்தால், தம் உயிரை மாய்த்துக்கொள்வர். ஆதலால் தமக்கோர் இழிவு வந்த காலத்து உயிர் வாழாமல் இறக்கும் இயல்புடைய மானமுடையவரின் புகழை, உலகத்தார் புகழ்ந்து கொண்டாடுவர்.

ஆதலால், மானமே உயர்குடிப் பிறந்தார்க்குச் சிறப்புத் தருவதாம்.

கூஅ. பெருமை

ஒருவனுக்குப் புகழாவது செய்தற்கரியவைகளைச் செய்வேனென்று கருதும் ஊக்க மிகுதி; அஃதின்றி வாழ்வே மென்று நினைத்தல் இழிவாகும். எல்லா உயிர்களும் பிறப்பால் ஒரே தன்மையன. ஆனால் செய்யும் தொழில்களின் வேறுபாட்டால் பெருமை சிறுமை யென்னும் தன்மைகளால் ஒத்திருப்பதில்லை. மேன்மையற்றவர் மேலான இடத்திருந்தும் மேன்மையுடையராகார்; மேன்மையானவர், கீழிடத்திருந்தும் கீழ்மையுடையவராகார்.

ஆதலால் கற்புடைய பெண்கள் போல ஒருவன் நிறை வழுவாமல் தன்னைத்தான் காத்து வந்தால் அவனுக்குப் பெருமையுண்டு. செய்தற்கரிய செயல்களைப் பெருமையுடையார் கெட்டுப் போன காலத்தும் செய்வர். பெரியாரைச் சார்ந்து அவர் தன்மையை நாமும் அடைவோம் என்னும் கருத்து, சிறியோர் உணர்ச்சியில் உண்டாவதில்லை. எனவே, சிறப்பு நிலையும் தனக்கு ஒவ்வாத சீரற்ற கீழ்மக்களிடம் உண்டாமானால், அஃது அவர்க்குச் செருக்கையே தரும்.

பெருமையுடையோர், என்றைக்கும் செருக்கின்றிப் பணிவுடன் நடப்பர்; சிறியோர், தமக்கொரு சிறப்பு வந்த காலத்துத் தம்மைத் தாமே வியந்து மேன்மைப்படுத்திக் கொள்வர். பெருமைக் குணமாவது செருக்கின்றியிருத்தல்; சிறுமைக் குணமாவது, பெருமையில்லாத போதும் பெருமையிருப்பதாகக் கொண்டு செருக்குக் கொள்ளுதல். பெருமையுடையார் பிறர் குறைபாட்டை மறைக்கும் பண்புடையராவர்; சிறியர் பண்போ, பிறர் குற்றத்தையே யெடுத்துக் கூறித் தூற்றுவதாகும்.

ஆதலால், பெரியோரியல்பு நல்லன செய்தல்; சிறியோர் இயல்பு தீயன செய்தலாம்.

ககூ. சான்றாண்மை

தம் கடமை யுணர்ந்த பெரியோர்க்கு நல்லவை செய்த லெல்லாம் அவர் கடமையாம். ஆதலால் சான்றோரின் நன்மையாவது அவருடைய குணங்களாற் சிறந்த நன்மையே. அஃதன்றி மற்ற நலம், வேறு எந்த ஒரு நலத்தினும் சேர்ந்துள்ள தன்று. எவரிடத்தும் கொள்ளும் அன்பும், பழிபாவங்கட்கு நாணுதலும், யாருக்கும் உதவி செய்யும் தன்மையும், பழகினர்பாற் கொள்ளும் கண்ணோட்டமும், எவ்விடத்தும் உண்மை பேசுதலும் ஆகிய ஐந்தும் நற்குணங்கள் நிறைவு (சால்பு) என்னும் பாரத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகும்.

தவமாவது ஓருயிரையும் கொல்லாத நன்மையைக் கொண்டு நடப்பதாம்; அது போலச், சான்றாண்மை யென்பது, பிறர் தீமையை யெடுத்துக் கூறாமையாம். ஒரு தொழிலைச் செய்வாரின் ஆற்றலாவது, அதைச் செய்து முடிக்க வல்லாரை இணக்கஞ் செய்து கொள்ளுதல்; அதுவே பகைவரை யொழிக்கும் கருவியாம்.

எனவே, குணங்களால் நிறைந்தவர்க்கு நிறையென்ன வென்றால் தமக்கு ஒப்பாகாரிடத்தும் பணிவுடையரா யிருத்தல். தமக்குத் துன்பஞ் செய்தவர்க்கும் நன்மையே செய்யா விட்டால், அச்சால்புக் குணத்தால் கிட்டும் பயனென்ன ? சால்பு என்ற செல்வம் இருந்தால் அவனுக்கு வறுமையால் இழிவு நேராது.

சான்றாண்மைக் குணமென்னுங் கடலுக்குக் கரை யென்று சொல்லுதற்குரியார், உலகம் இறுதியானாலும் தம் தன்மையிற் குன்றாதவரே; ஆதலால் சான்றவர் தம் உயர்குணத் தன்மையில் குறைவாரானால் நிலமும் தான் தாங்கும் தன்மையை விட்டு அழியும்.

ஆதலால், சான்றாண்மை யுடையாராலேயே உலகம் நிலைபெற்றிருக்கின்ற தென்பதாம்.

கoo. பண்புடைமை

எல்லாரிடத்தும் எளிய தன்மையில் நடக்கக் கூடிய வராக இருத்தலால், பண்புடைமை யென்னும் நன்னெறி எளிதாகும். அன்புடையராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறத்தல் ஆகிய இவ்விரண்டு குணங்களும் பண்புடைய ராகும் நல்வழியாகும். வடிவத்தால் மக்களை யொத் திருத்தல் ஒப்பாகாது; நற்பண்புகளால் ஒத்திருத்தலே ஒப்பாகும்.

நீதியையும் அறத்தையும் விரும்பித் தமக்கும் பிறர்க் கும் பயன்படுவாரின் உயர்ந்த பண்பினை உலகம் கொண் டாடும். ஒருவனை விளையாட்டினும் இகழ்தல் துன்ப மாகும்; பிறருடைய இயல்பை யறியும் பண்புடை யோர்க்கோ, பகைமையினும் நற்பண்புகளே உள்ளன. உலகம் பண்புடையாரைப் பொருந்தியிருப்பதால், நிலை பெற்றிருக்கின்றது. இல்லையெனில் மண்ணில் மறைந்து போகும்.

அராவிக் கூர்மையாக்கும் அரம் போல, ஒருவர் தம் மதிநுட்பத்தால் கூர்மைமிக்காராயிருப்பினும் உயர்குணம் அவரிடம் இல்லாததால் அவர் மக்களானாலும் ஓரறி வுடைய மரத்தையே ஒத்தவராவர். நட்புக்கொள்ள இயலாதவராய்த் தீமை செய்கின்றவரிடத்தும் பண்புடை யராய் நடக்க இயலாமை, இழிவான தாகும்.

உலக மக்களோடு அளவளாவி மகிழும் பண்பற்றவர் கட்கு, இவ்வுலகம் பகற்பொழுதினுங் கூட இருட்டினைப் போல் மயக்கந் தருவதாகும். எனவே, பண்பில்லாதவனி டத்துச் சேர்ந்த பெருஞ்செல்வம், நல்ல ஆவின்பால் தான் சார்ந்த கலத்தின் தன்மையால் கெட்டுப்போகும் தன்மை போல் கெடும்.

ஆதலால், உலக மக்களோடு அளவளாவி மகிழும் பண்புடையாராலேயே உலகம் நடந்து வருகின்றதென்ப தாம்.

௧0௧. நன்றியில் செல்வம்

தன் வீடு நிறையச் செல்வத்தைக் குவித்து வைத்து உலோபத் தன்மையால் அதை யெடுத்துச் செலவு செய்து உண்ணுதவன், தன்னால் ஒன்றும் செய்தற்கு உரிமையில்லாமையால், உயிருடன் இருப்பினும் அவன் செத்தவனேடொப்பாவான். பொருளினால் எல்லாம் ஆகு மென்று கருதி, அதனையே தேடிக் குவித்து, பிறர்க்கு வேண்டுவதொன்றும் கொடுக்காத பற்றுள்ளம் உடையானுக்குச் சிறப்பற்ற பேய்ப் பிறப்பு உண்டாகும்.

பொருளீட்டுதல் ஒன்றே கொண்டு புகழை விரும்பாத ஆண் மக்களினது பிறப்பு, பூமிக்குப் பாரமேயன்றி வேறில்லை. ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பின், நிலைத்து நிற்பதாக எதைக் கருதுவானே? அறிகிலேம். ஒருவர்க்கு ஒன்றைக் கொடுத்தலும் தாம் நுகர்தலும் இல்லாதவர்க்குக் கோடிக்கணக்கான செல்வம் உண்டானாலும் ஒன்றும் பயனில்லை.

தானும் நுகராது, தக்கார்க்கும் கொடாது இருப்பவனது பெருஞ் செல்வமானது நோய்வாய்ப்பட்டது போலாம். வறியார்க்கு ஒன்று ஈயாதவன் செல்வமானது, அழகு இளமை முதலியவற்றுல் சிறந்த ஒருத்தி, கணவனின்றித் தனியேயிருந்து மூப்படைந்தாற் போலப் பயனற்றது. யாராலும் விரும்பப்படாதவன் செல்வமானது, ஊரின் நடுவில் நஞ்சு மரம் பழுத்தாற் போல மக்களுக்குக் கேடு விளைவிக்கும். எவரிடத்தும் அன்பு நீங்கித் தன்னையும் உடாமல் உண்ணுமல் வருத்தி அறத்தையும் போற்றுமல் சேர்த்து வைத்த பெரும் பொருளை வேறொருவர் கொண்டு போய் இன்பந் துய்ப்பர். புகழ்மிக்க செல்வர்க்குண்டாம் வறுமை, மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மையுடையது.

ஆதலால், செல்வம் படைத்தவன் அதன் பயன் பெறும் வழியில் ஈந்துவக்க வேண்டுமென்பதாம்.

௯0௨. நாணுடைமை

தீய செயல்களைச் செய்தற்கு நாணுதலே, ஆண்களுக்குரிய நாணமாம்; மற்றவை பெண்களுக்குரிய நாணமாகும். உணவு உடை உறக்கம் முதலிய எல்லாம் மக்களெல்லோர்க்கும் பொதுவானவையே. ஆனால் நன் மக்கட்குச் சிறப்பு, நாணுடைமையே யாகும்.

எல்லா உயிர்களும் தம் உடம்பையே நிலைக்களனாகக் கொண்டு நடப்பனவாகும். அது போல, உயர்ந்தோர், நாணத்தையே நிலைக்களனாகக் கொண்டு நடப்பர். நாணத்தால் நிரம்பியவருக்கு நாணம் அணிகலனன்றோ? அவ் அணிகலன் இல்லையாயின், அவர் பெருமைமிக்க வீறுப்பு நடை அவர்க்கு ஒரு நோயன்றோ? பிறர் பழியையும் தம் பழியென்று நாணுறுவோரை, உலகத்தார் நாணத்திற்கே இருப்பிடமென்று புகழ்வர்.

உயர்ந்தோர் தமக்குப் பாதுகாப்பாக நாணத்தையே பற்றிக் கொள்வதல்லாமல் உலகத்தில் வாழும் வாழ்க்கையை விரும்பமாட்டார். நாணத்தையே கைக்கொண்டுள்ளோர், நாணத்தைக் காப்பதற்குத் தம் உயிரையும் விடுவர். தம் உயிருக்காக நாணத்தை இழக்கமாட்டார்கள்.

பிறர் நாணத்தக்க செயலுக்கு ஒருவன் நாணமுறாமல் இருப்பானானல், அறமும் நாணங் கொண்டு அவனைக் கைவிட்டு விடும். ஒருவன் ஒழுக்கங் குன்றுவானாயின், அது, குடிப்பிறப்பின் தன்மையை மட்டுமே ஒழிக்கும். அவனிடம் நாணமற்ற தன்மை நிலைபெறுமானல் நன்மையெல்லாவற்றையும் கெடுக்கும். நாணமில்லாத மக்கள், உலகத்தில் இயங்குதல், மரத்தாற் செய்த பாவையைக் கயிற்றினல் கட்டி உயிர் இருப்பதுபோல் மயக்கிக் காட்டுவது போலாகும்.

ஆனதால், மக்கள் தீமைக்கு அஞ்சி நாணமுடையவராக இருத்தல் வேண்டுமென்பதாம்.

௧0௩. குடிசெயல்வகை

தன் குடும்பம் உயர்வதற்கு அது முடியுமவரை எடுத்த முயற்சியைக் கைவிடேன் என்றிருக்கும் பெருமையைப்போல் ஒருவனுக்குச் சிறப்புடைய தன்மை வேறில்லை. முயற்சி, நிறைந்த அறிவு என்று கூறப்பட்ட இரண்டின் செயலால் ஒருவன் குடும்பம் உயரும். 'என் குடும்பத்தை உயர்த்துவேன்' என்று கூறி முயற்சிசெய்யும் ஒருவனுக்குத் தெய்வம் தன் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு வந்து உதவி செய்ய முன்னிற்கும்.

தம் குடும்பத்தை உயர்த்த முயற்சி செய்வார்க்கு அவர் எண்ணுமலே செயல்கள் யாவும் கைகூடி வரும். குற்றமொன்றுஞ் செய்யாளுய்த் தங்குடி உயர்தற்கான செயல் செய்து வாழ்பவனை, உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்துகொள்ளுவர். ஒருவன் தான் பிறந்த குடும்பத்தைத் தான் ஆளுந் தன்மையே நல்ல ஆண் தன்மையென்று பெரியோர் கூறுவர்.

போர்க் களத்துக்குப் பல வீரர் போருக்குச் சென்றுலும் அதன் பொறுப்பு அஞ்சாத வீரர்பாற் சேர்வது போல குடும்பப்பொறுப்பு அதை மேற்கொண்டு நடத்துவார் மேலேயே சேர்வதாகும். தம் குடி உயர்வதற்கான செயல் செய்கின்றவர்க்கு அதற்குரிய காலமென்பதொன்றில்லை. சோம்பல்கொண்டு தம் மானத்தைக் கருதுவாராளுல் தம் குடிப்பெருமை கெடும்.

தன் குடிக்குள் தாம் சீர் கேட்டை மறைப்பவனது உடல், துன்பத்திற்கே இருப்பிடமானதோ? குடும்பத்தைப் போற்றுதலில் கண்ணுங்கருத்து முடையவனுக இருத்தல் வேண்டும். கெடுதல் வந்தகாலத்து அதை ஒழித்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடும்பமாகிய மரம், துன்பமென்னுங் கோடரி தன் அடியை வெட்டிச் சாய்க்க, ஒரு பற்றுக்கோடுமின்றி வீழ்ந்துவிடும்.

௧0௪. உழவு

• ஏர்பிடித்து உழுவார் வழியிலேயே உலகம் நடக்கின்றது. அதனால் எல்லா வருத்தமும் அடைந்தாலும் உழவுத்தொழிலே முதன்மையானதாகும். வேறு தொழில் செய்வார் யாவரையும் உழவர் தாங்குதலால் அவ்வுழவர், உலகத்தார்க்குத் தேரின் அச்சாணி போன்றவராவர்.

உழவுத் தொழிலைச் செய்து, அதனால் உண்டு வாழ்பவரே வாழ்பவர் ஆவர்; ஏனையோரெல்லாம், பிறரைத் தொழுது உண்டு வாழ்பவரேயாவர். உழவுத் தொழிலினால் நெற்கதிர் முதலிய நிழலையுடையராகிய உழவர், பல அரசர் குடை நிழலும் தம் குடைக்கீழ் அடக்கிக் காண வல்லவராவர்.

உழவர், பிறர்பாற் சென்று ஒன்றை வேண்டிக் கேளார்; தம்மை இரந்து கேட்போர்க்குத் தாமே எதையும் ஈவார். உழவர் கை மடங்கினால் எப் பற்றுக்களையும் விட்டுவிட்டோமென்று கூறும் துறவிகளும் அந்நெறியில் நிற்கமுடியாது.

உழவர் நிலத்தை உழுது ஒரு பலப்புழுதி காற்பலப் புழுதியாகும்படி காய விடுவாரானால் அந் நிலம் ஒருபிடியளவு எருவுங்கூடப் போடாமலே நன்கு விளையும். உழுதலினும் உரம் போடுதல் நல்லது; அதனிலும் நல்லது அதற்குக் களையெடுத்தல்; அதனினும் சிறந்தது நீர் பாய்ச்சுதல்; அதனினும் மேன்மையானது, ஆடு மாடு முதலியன அழிக்காமல் காவல் செய்துவருதல். எனவே, உரியவன், நிலத்தை நாள்தோறும் பார்த்து வாராதிருப்பானானால், தன்னைப்பாராத கணவனை மனைவி வெறுப்பது போல வெறுத்து அவனுக்குப் பயன் தராது.

'யாம் வறுமையாக இருக்கின்றோம்' என்று வருந்துவோனைக் கண்டு நிலமாகிய பெண் சிரிக்கும். ஆதலால் யாவரும் உழவுத்தொழிலை முதன்மையாகக் கொள்ள வேண்டும் என்பதாம்.

சுoரு. நல்குரவு

வறுமையைக் காட்டினும் துன்பந்தருவது, அவ் வறுமையொன்றே வேறில்லை. ஆதலால் வறுமையென்று சொல்லப்படுகின்ற பாவி, இம்மையின்பமும் மறுமையின்பமும் இல்லாதபடி கெடுக்கவரும். வறுமையென்று சொல்லப்படும் அவா, தன்னாற் பிடிக்கப்பட்டவருடைய பழைய குடிப் பிறப்புச் சிறப்பையும், அதற்கொத்த புகழையும் ஒருங்கே கெடுக்கும்.

அவ்வறுமையானது நல்ல குடிப்பிறந்தாரிடத்தும் இழிவான சொற்கள் உண்டாவதற்காம் சோர்வும் உண்டாகச் செய்யும். வறுமையென்று சொல்லப்படும் துன்பம் ஒன்றினாலேயே பல துன்பங்களும் உண்டாகும். வறுமையுடையார் மெய்ப் பொருள்களை ஆராய்ந்து சொன்னாலும் அவர் கூறுபவற்றை எவரும் விரும்பிக் கேட்காமையால் பயன்படாமற்போகும்.

அறத்தோடு சார்பற்ற நல்குரவுடையான் பெற்ற தாயானும் வெறுக்கப்படுவான். 'நேற்றும் என்னைக் கொல்வதுபோல் வந்த நிரப்பென்னும் வறுமை, இன்றும் வருமோ? வந்தால் இனி எவ்வாறு அதைப் பொறுப்பது?' என வறிஞன் ஏங்குவான். நெருப்பிற்கூட மருந்து, மந்திரம் முதலியவற்றைக் கொண்டு தூங்கலாம்; வறுமையில் எத்தன்மையினாலும் உறங்க இயலாது. நுகரப்படும் பொருளில்லாத வறிஞர், ஒன்றும் இல்லாமையால் துறவறம் பூண்டவரே ஆகின்றார். ஆனால் அவர் எப்பற்றையும் விட்டுத் துறந்தாரில்லை; அஃதேனெனின், அடுத்தவீட்டுக் குரியோன் உப்புக்கும் காடிப்புளித்த நீருக்கும் கூற்றுவராக இருந்து அதைத் தொலைப்பதற்குத்தான் முழுதும் துறவாமல் இருக்கின்றனரன்றி வேறில்லை.

ஆதலால் நல்குரவென்னும் கொடுந்துன்பத்தில் சிக்காமல் வாழவேண்டுமென்பதாம்.

௧௦௬. இரவு

வறுமையுற்ருர், தாம் இரந்து கேட்கத் தக்கவரைக் கண்டால் இரந்து கேட்குக. அவர் கொடாராயின், அப் பழிச்சொல் அவர்க்கே உரியதாகுமல்லது, தமக்கு வாராது. அப்படி இரப்பவனுக்குப் பொருள் தவருமல் கிடைக்குமாஞல் இரத்தலுங்கூட இன்பத்தைத் தருவ தாகும். ஒளிக்கமாட்டாத நெஞ்சினையுடையவரிடம் ஒன்றை இரப்பதும் அழகு தருவதாகும்.

மறைத்தலைக் கனவிலும் அறியாதவரிடத்து ஒன்றை இரவலன் கேட்டல் இரத்தலாகாது. ஈதலைப்போலவே சிறந்ததாகும்: ஒளியாமல் கொடுப்போர் உலகத்தில் இருப்பதால்தான் இரவலர் இரந்து நிற்கின்றனர். எனவே, மறைத்தலென்னும் துன்பம் இல்லாதவரைக் கண்டால், இரப்பவர்க்கு வறுமைத் துன்பம் முழுதும் போய்விடும். இரப்போரை இகழ்ந்து பழித்துரைக்காமல் கொடுப் போரைப் பார்த்தால் இரப்போரின் மனம் மகிழ்கின்ற தன்மையுடையதாகும்.

இரப்போர் இவ்வுலகில் இல்லாவிட்டால், குளிர்ந்த இடத்தையுடைய இந் நிலவுலகமானது, மரத்தாற் செய்த பாவை கயிற்றினல் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும். ஈவாரிடஞ் சென்று ஒன்றை இரப்பார், இல்லாதபோது ஈவோரிடம் என்ன புகழுண்டாகும்? ஒன்றுமேயில்லை.

வறிஞன் வந்து ஒன்றை இரந்தபோது செல்வன் கொடானுயின், அதற்காகச் சினத்தல்கூடாது. வறுமைத் துன்பமே இரப்பவனுக்கு அறிவு புகட்டும் சான்ருக அமையும்.

ஆதலால் வறுமைத் துன்பந்தீர நல்லோரிடஞ் சென்று இரப்பதும் ஓராற்ருல் இழிவாகாதென்பதாம்.

கoள. இரவச்சம்

உள்ளதை மறைக்காமல் கொடுத்து மகிழும் கண் போல் சிறந்தவரிடத்தும் இரவாதிருத்தல், கோடி மடங்கு உயர்ந்ததாகும், ஏனெனில்? ஒருவனை இரந்தே உயிர் வாழப் படைத்திருப்பானுனல், அக் கடவுளும் அவனைப் போல் அலைந்து வருந்துவானாக.

வறுமைத் துன்பத்தை இரந்து தீர்த்துக் கொள்வோமென்று நினைக்கும் கொடுமையைப்போல, வேறு கொடுமையில்லை. இரந்து கேட்குந் தன்மையில்லாத உயர் குணம், எல்லா உலகத்தின் இடமுங்கூடக் கொள்ளாத அவ்வளவு பெருமையுடையதாகும். முயற்சியால் வந்த உணவு தெளிந்த நீர் போன்ற புல்லரிசிக் கஞ்சியே யானாலும் அதைப் போல் சிறந்தது, வேறொன்றும் இல்லை.

நீரில்லாமையால் இறக்குந் தறுவாயிலுள்ள ஆவைக் கண்டு அவ் 'ஆவுக்கு நீர் தருக' என்று ஒருவன் கேட்டாலும் அஃது அந் நாவிற்கு இழிவு தரும். "ஒன்றைக் கேட்டால், 'இல்லை' யென்று சொல்வோரிடஞ் சென்று கேட்க வேண்டாம் என்று, நான் உங்களை யெல்லாம் இரந்து கேட்டுக் கொள்கிறேன்" (என்கின்றான், இரந்து துன்புற்றவன்.)

இரத்தல் என்ற வலியற்ற தோணியால் வறுமைக் கடலைக் கடக்க எண்ணி, மேற்கொண்டால், இல்லை யென்னும் பாறை தாக்க, அஃது உடைந்து விடும்.

இரப்பதை நினைத்தால் இரப்பவர் உள்ளம் உருகி விடும்; மறைப்பதை யெண்ணினால், அவ்வுருகும் அளவுமின்றி இறக்க நேரும்; இல்லை யென்ற அளவில் இரப்பார் உயிர் போய்விடும். இல்லையென மறைப்பார்க்கு உயிர் எங்கே மறைந்து நிற்கின்றதோ? அறிகிலேமே.

கoஅ. கயமை

கயவர் வடிவத்தால் மக்களைப் போலவேயிருப்பர்; நாம் இவர்களைப்போல ஒப்பாரைக் கண்டதேயில்லை. நல்லோரைப் பார்க்கினும் கயவர் செல்வமுடையவர். கவலை யும் இல்லாதவர். நினைத்தவற்றை நினைத்தவாறே செய்து முடித்தலால் தேவர்கட்கு ஒப்பானவரென்றுஞ் சொல்லாம். ஒரு கீழ்மகன், கீழ்மையான செயலைச் சிறிதளவு செய்வானுயின், மற்றொரு கீழ்மகன் அதில் உயர்வுகொள்ள இறுமாந்து அவற்றை அதிகம் செய்வான்.

கீழ்மகனிடத்தில் ஒழுக்கம் வருவதற்கு அச்சமே காரணமாகும்; அல்லது பொருள் ஆசையிருந்தாலும் சிறிது வரும். கயவர் தாம்கேட்ட மறைப்பொருள்களை எல்லோருக்கும் சொல்லி வெளியாக்குவர்; அதனுல் முழக்கப்படும் பறையையே ஒப்பவராவர்.

கயவர், தம் கன்னத்தில் அடிக்கும் வளைந்த கையை யுடைய கொடியார்க்கே எல்லாம் கொடுப்பர்; மற்றவர்க்கு ஈரக் கையைக்கூட உதறமாட்டார். இரந்து கேட்டால் நல்லோர் அதற்கு இரங்கிப் பயன்படுவர்; கீழ்மக்களோ கரும்பைப்போலத், தம்மை அச்சுறுத்தித் துன்பந் தருவார்க் கல்லாமல் பிறர் எவருக்கும் ஒன்றைக் கொடார்.

ஒருவர் பட்டும் துகிலும் உடுத்து வாழ்தலையும், பாலோடு ளாவிய உணவுண்டலையும் கண்டால் கீழ்மகன் பொறாமைகொண்டு குற்றத்தைக் கொண்டு கூட்டிச் சொல்வான். கயவரானவர், தமக்கொரு துன்பம் வந்தால் தன்னை விற்பதற்குரியராகவே யிருப்பர்; வேறொரு நலத் துக்கும் உரிமையுடையவராகார்.

ஆதலால், கயமைப் பண்பில்லாமல் வாழ்தலே சிறந்த தென்பதாம்.

---

௩. காமத்துப்பால்

௧௦௯. தகையணங்குறுத்தல்

இக் கனத்த அணிகளை அணிந்தவள் தெய்வ மகளோ, சிறந்த மயிலோ, அன்றி ஒரு மானுடப் பெண்ணோ? என் மனம் மயங்குகின்றது. இவள், என் பார்வைக்கு எதிராகப் பார்த்தல், தானே தாக்கி வருத்துவதொரு மோகனப்பெண் தனக்குத் துணையாகச் சேனையையைச் சேர்த்துக் கொண்டு வந்தாற் போன்ற தன்மையுடையது.

முன்பு கூற்றை இன்ன தன்மைத்தென்று அறியேன்; அது, பெண்தன்மையோடு கூடிப், பெரும் போர் செய்யும் கண்களையுடையதாக இருக்கின்றது. இவள் கண்கள், கண்ட ஆடவர் உயிரைக் கொள்ளை கொள்ளும் தோற்ற முடையனவாய்ப் போர்க்கோலங் கொண்டிருந்தன. என்னை வருத்துவதால் இயமனோ? என்னைப் பார்க்குந் தன்மை யால் கண்ணோ? மருள்வதால் பெண் மானோ? என்று ஐயுறும் வண்ணம், உள்ளன. இவள் புருவங்கள், பார்வை என்மேற்படாதவாறு நடுவு நிலைமையோடு வந்து மறைக்கு மானால், இக்கண்கள் எனக்கு நடுங்குந் துன்பங்களைத் தரமாட்டா.

இப் பெண்ணின் சாயாத கொங்கைகளின் மேல் மூடிய முன்றானை, என்னைக் கொல்லாமல் காக்கின்றது. அது, யானையின் முகபடாம் போல் தோன்றுகின்றது. பகை வீரரும் கண்டு அஞ்சும் எனது வலிமை, இப் பெண்ணின் ஒளிபொருந்திய நெற்றிக்குத் தோற்று மெலிந்ததே; என்ன செய்வேன்!

மான்பிணையை யொத்த வெறித்தபார்வையும், நாண முடைய இவட்கு, வேறு அணி அணிவதனால் என்ன பயன்? கள், உண்டவர்க்கு மட்டுமே வெறி ஊட்டிக் களிப்புறுத்தும்; காமத்தைப் போலப் பார்த்தவுடன் மகிழ்ச்சி யூட்டாது. (ஆகலின் காமம் மிகக் கொடியது.)

---

௧௧௦. குறிப்பறிதல்

இவளின் மைதீட்டிய கண்களின் நோக்கம், இரண்டு தன்மையாக இருக்கின்றது. ஒரு நோக்கு (பார்வை) எனக்குத் துன்பந் தருவதால், நோயாக இருக்கின்றது; மற்றொரு பார்வை எனக்கு இன்பஞ் செய்வதால், அந் நோயைத் தீர்க்கும் மருந்தாக இருக்கின்றது. யான் காணா வாறு என்னைப் பார்க்கின்ற களவு கொள்ளும் அரைப் பார்வையானது, மெய்யுறு புணர்ச்சியின் ஒத்ததல்ல; அதனினும் மிகமிகக் கூடுதலானது (பெரியது.)

நான் காணுவாறு அவள் என்னை அன்போடு பார்த் ததும்; பார்த்த அளவில் அமையாது வெட்கிக் குனிந் ததும்; எம் இருவரிடையே உண்டாகிய அன்புப் பயிரை வளர்க்கப் பாய்ச்சிய நீர்போலாயிற்று. யான் அவளைப் பார்த்தால் அவள் நிலத்தைப் பார்ப்பாள்; நான் பார்க்கா விட்டால், என்னைப் பார்த்துத் தன் உள்ளே மகிழ்ந்து நிற்பாள். நேராகப் பாராமல் ஒருகண் சுருக்கிப் பார்த்துத் தன்னுள்ளே மகிழ்வாள்.

அன்பில்லாதவர் போல் கடுஞ்சொற் சொன்னுரா யினும் உள்ளன்புடையார் சொல்லை விரைவில் அறியலாம். எவ்வாறெனின்? பின் இன்பந் தருவதாய் முன்கூறுங் கடுஞ் சொல்லும், அன்பற்றார் போன்ற பார்வையும் அயலார் போன்று நட்பாயினர் குறிப்பாகும். நான் பார்க்கும்போது இவள், மெல்ல உள்ளே சிரிப்பாள். அச்சிரிப்பின்கண் ஒரு நன்மை அடங்கியிருப்பதை நான் அறிகின்றேன்.

முன்பின் அறியார் போலப் பொதுவாகப் பார்த்தல், காதல் மிக்குடையாரிடத்தேயே அமைந்துள்ளது. ஒத்த காதலன்புடைய இருவரின் கண்கள், ஒத்துப் பார்க்கப் பெற்றால், அஃதொன்றே அவ்விருவர் காதலின் உண்மை யைப் புலப்படுத்துவதாகும். ஆகலான், அவர் வாயாற் பேசுகின்ற பேச்சால் ஒன்றும் பயனில்லை. (இஃதொன்றே போதுமான அளவினதாகும்.)

ககக. புணர்ச்சி மகிழ்தல்

கண்டும், கேட்டும், சுவைத்தும், மோந்தும், தொட்டும் நுகரும் ஐந்தறிவின் தன்மைகளும், இவ் வொளிமிக்க வளையலை யணிந்தாள் இடத்திலேயே போய் அடங்கி யுள்ளன. வாத முதலிய நோய்கட்கு வேறு மருந்து உண்டு; ஆனால், இவளால் உண்டாய காம நோய்க்கு இவளே மருந்தாக அமைந்து அந் நோயைத் தணிக்கின்றாள். (என்னே வியப்பு !)

தம்மால் விரும்பப்பட்டாரின் மெல்லிய புணர்ச்சித் துயிலின் இன்பத்தைப் பார்க்கினும் திருமாலின் உலக இன்பம் சிறந்ததா ? தீ நெருங்கினால் சுடும்; விலகினால் சுடாது; இவளிடமுள்ள தீயோ விலகினால் சுடுகின்றது ! பக்கத்திலேயே இருந்தால் குளிர்கின்றது! இப் புதுமையான தீயை, இவள் எங்கிருந்து பெற்றாளோ அறிகிலேன் !

இவள் தோள், விரும்பிய பொருள்களின் இன்பத்தையெல்லாம் கொடுக்கும்; இவள் தோளைப் பெறுதபோது வாடிய என்னுயிர், பெற்றவுடன், தளிர்த்து இன்புறுவதால், இவளுக்குத் தோள்கள் அமிழ்தத்தால் செய்தன போல் எனக்குத் தோன்றுகின்றது.

தம் வீட்டிலிருந்து தம்து பொருளைத் தாம் உண்ணும் இன்பம்போல், இவள் சேர்க்கை இன்பந் தருகின்றது. காதலர் இருவரின் காற்றும் நுழையாத இறுகிய புணர்ப்பு, இன்பமிக்கதாகும். ஊடலும் அதன் அளவறிதலும், அஃதறிந்தபின் கூடி மகிழ்தலும் ஆகிய இவை, காமத்தைக் கூடியவர் பெற்ற பயன்களாகும். இவளோடு புணருந்தோறும் நூல்களின் பொருள்களை அறியுந் தோறும் அறியாமை கண்டு இன்புறுவதுபோல் இன்பந் தருகின்றது.

ககஉ. நலம் புனைந்துரைத்தல்

அனிச்சப்பூவே! நல்ல தன்மையுடையை, வாழ்வாயாக! எம்மால் விரும்பப்பட்ட எம் காதலி, உன்னிலும் மெல்லிய தன்மையுடையாளென்பதை நீ அறிவாயாக. என் நெஞ்சே! பலரும் காணும் பூக்கள் இவள் கண்களை ஒக்குமென்று கருதி, நீவீணே மயங்குகின்றாய்! (எவ்வாறொக்கும்?

மூங்கில்போன்ற தோள்களையுடைய எம் காதலிக்கு மேனி தளிர் நிறம்போல் இருக்கும்! பற்கள் முத்துப்போல் இருக்கும்! மணம், நறுமணமாயிருக்கும்! மையுண்ட கண்கள் வேல்போல் கூர்மையாக இருக்கும்! குவளை மலர் 'சிறந்த அணியுடையாளின் கண்போல் நாம் இல்லையே' என்று வெட்கித், தலைகுனிந்து நிலத்தையே பார்த்துக் கொண்டிருக்கும்!

தன் மெல்லிய தன்மையறியாது அனிச்சப் பூக்களை அவற்றின் காம்பரியாமல் அணிந்துவிட்டாளே! அதனால் அவள் இடை ஒடிந்து மாண்டுபோவாளே! இனி சாப்பறை முழக்குவார்களே! (என்ன செய்வேன்!) வானிலுள்ள விண்மீன்கள், வெண் திங்களையும் எம் காதலி முகத்தையும் வேறுபாடு கண்டுணர மாட்டாமல் தம் நிலை கலங்கித் திரிகின்றன! விளங்குகின்ற திங்களுக்குக் களங்கம் உண்டு; எம் காதலி முகத்தில் ஏதேனும் களங்கமுண்டோ?

ஏ, நிலவே! எம் காதலி முகத்தைப்போல் நீயும் ஒளிவிட, வல்லையேல் நீயும் என் அன்பைப் பெறுவாய்! ஏ! மதியே மலரையொத்த கண்களையுடையாளின் முகத்தையொத்து நீ விளங்குவாயானல் நான்மட்டும் காணத் தோன்று! பலருங் காண வெளிவராதே! அனிச்சமலரும் அன்னத்தின் மெல்லிய மயிரும் எம் காதலியின் கால்களுக்கு நெருஞ்சிப் பழத்தின் முள், உறுத்துவதுபோல உறுத்தித் துன்பஞ் செய்யும்!

ககஉ. காதற் சிறப்புரைத்தல்

இம் மெல்லிய சொற்களையுடையாளின் வெண்மையான பற்களினிடத்து ஊறிய நீரானது, பாலோடு தேனையும் ஒன்றுகக் கலந்ததைப் போன்ற இனிமையுடையது. இம் மடந்தைக்கும் எமக்கும் உளதாகிய நட்பு, உடம்போடு உயிர்க்குளதாகிய நட்பு எத்தகையதோ அத்தன்மையதாம். கண்ணினுள் கருமணியில் இருக்கின்ற பாவையே! நீ அவ்விடத்தை விட்டு வெளியே வருவாய். எம்மால் விரும்பப்படும் காதலிக்கு அவ்விடம் வேண்டும்.

எம் காதலி, எம்மோடு சேர்ந்திருக்குங்கால் உயிர் உடம்போடு கூடி வாழ்தல்போல் இன்பமுடையதாகும். பிரிந்திருக்குங்கால் உயிர்போனுற் போன்ற தன்மையுடையது. ஒளியுள்ள நோய் செய்யுங் கண்ணையுடைய எம் காதலியின் நற்குணத்தை நான் மறந்தேனுனல் நினைப்பேன்; ஆனுல், ஒருபோதும் மறந்தறியேன். அதனுல் நினைத்தலையும் அறியேனு யிருக்கின்றேன்; (என்கின்றுன் காதலன்.) (இனி காதலி பகர்கின்றுள்.)

தாம் காணுததால் வேறிடஞ் சென்றிருக்கின்ருரென்று கருதுவார் கருதுக. என் காதலர் என் கண்ணிடத்தினின்றும் வெளிச் செல்லார்; கண்ணை நான் இமைத்தேனுயின் அதற்காக வருந்தார்; ஆதலால் யாராலும் காணமுடியா நுட்பமுடையவராக இருக்கின்ருர். எம் காதலர் கண்ணுள் இருத்தலால் மறைந்து போவாரேயென எண்ணிக் கண்ணுக்கு மை யெழுதுவதில்லை. என் நெஞ்சில் இருக்கின்ற காதலரைச் சுடும் என்று கருதி நான் சூடுள்ள உணவை உண்பதில்லை.

உள்ளிருக்கும் காதலரை மறைக்குமென்றஞ்சிக் கண் இமைக்காமலிருந்தேன்; தூக்கமில்லா நோய் செய்தார் என்பர், ஊர் மக்கள். எம் காதலர் எக்காலத்தும் எம் மனத்துள்ளேயே மகிழ்ந்து தங்குவர்; அறியாதவர் பிரிந்தார்; அன்பிலாரென்று பழிதூற்ற நிற்பர்.

கககூ. நாணுத் துறவுரைத்தல்

முன் காதலியிடத்து இன்பம் துய்த்து வருந்தி நின்றார்க்குப் பாதுகாப்பாக உள்ளது மடல் அன்றி மற்றொன்றுமில்லை. ஆதலால் நாணத்தைவிட்டு நீக்கி, வருத்தத்தைத் தாங்காத உடம்பும் உயிரும் மடலேறுவதையே நினைத்து நின்றன. நாணத்தோடு மிக்க ஆண் தன்மையும் எனக்கு முன்புண்டு. இப்போது அவை காமத்தால் அழிந்தமையால் மடலை இன்று நான் பெற்றுள்ளேன். நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணிகளைக் காமமாகிய வேகமிக்க நீர், தன்னோடு இழுத்துச் சென்று தன்னுள் அமிழ்த்திவிட்டது.

மடலோடு மாலைப்பொழுதில் வரும் துன்பத்தை முன்பு அறியேன். வரிசையான சிறிய வளையலையுடைய காதலி இப்போது அதனைத் தந்துள்ளாள். பேதையாகிய காதலிக்காக என் கண்கள் இமை பொருந்தாதிருந்தன. ஆதலால் எல்லோரும் தூங்கும் நள்ளிரவினுங்கூட மடலூர்தலையே நினைப்பேன். ஆனால் கடல்போன்ற அளவற்ற காமத்தால் வருந்தியும் மடலேறத் துணியாத பெண் பிறப்பைப்போலச் சிறந்த பிறப்பு வேறு இல்லை.

இவர் நிறைகாத்தற்கு அருமையானவர்; மிகவும் இரங்கத் தக்கார் என்று கருதாது காமம் உள்ளடங்காது வெளிப்பட்டு அவையோரெல்லாம் அறியும்படி யிருக்கின்றது. என்பாலுற்ற காமமானது முன்பு என்னை யாரும் அறியாரென்று கருதி வெளிப்படுத்துதல் போலத் தெருவின் கண்ணே என்னைக்கொண்டு நிறுத்தி வெளிப்படுத்தி மயங்கிச் சுழல்கின்றது.

ஒருசிலர், நாம் கேட்கு மாத்திரையன்றிக் கண்ணாற் காணும்படி வெளிப்பட்டு எம்மைப் பார்த்துச் சிரியா நின்றார். யாம்பட்ட துன்பம் அவர் பட்டாலன்றோ தெரியும்? அவர் அதை அடையாததால் சிரிக்கின்றார் போலும்!

கக௫. அலரறிவுறுத்தல்

எமக்கு மடந்தையோடுள்ள நட்பு ஊரில் வெளிப்படையாகப் பேசுவதால் என் உயிர் இருக்கின்றது. அதை யானே அறிந்து கொள்வதல்லாது, சொல்கின்றவர் பலரும் அறியார். எம் காதலியின் அருமையை யறியாமல் இவ்வூர் மக்கள் அலர் தூற்றி எமக்கு உதவியளித்தனர். எங்கட்குச் சேர்க்கை உண்மையாதலே இவ்வூரார் அறிந்ததே; அதனால் வரும் பழிச்சொல் என்னால் வரவேற்கக் கூடியதாகும். இவ்வூரார் தூற்றுகின்ற அலரால் அது வெளிப்படுகின்றது. அஃதில்லையானால் தன்னியல் பிழந்து சுருங்கிவிடும்.

கள்ளுண்போர்க்கு அதை உண்டு களிக்குந்தோறும் அதையே உண்ண விரும்புவது போல், காமமானது வெளிப்பட்டுத் தோன்றத் தோன்ற இனிதாக இருக்கின்றது. (காதலி கூற்று இனித் தொடங்குகின்றது.)

யான் என் காதலரைக் கண்ணுற் காணப்பெற்றது ஒரு நாளே; அதனால் உண்டாகிய பழிச் சொல்லோ திங்களைப் பாம்பு பிடித்துக் கொண்டிருப்பதை உலகம் அறியுமாறு போல எங்கும் அறிவித்து விட்டது. ஆனால் இக் காமமென்னும் நோயாகிய பயிர், ஊரார் கூறுகின்ற அலரே எருவாக அது கேட்டுத் தாய் வெகுண்டுரைக்கின்ற வெஞ் சொல்லே நீராக வளர்கின்றது.

அயலார் தூற்றுகின்ற பழிச் சொல்லால் காமத்தைக் கெடுத்து விடுவோமென்று கருதுதல் நெய்யை ஊற்றி நெருப்பை அவிப்போமென்று நினைப்பதை ஒக்கும். அஞ்சாதே யென்று கூறிவந்த நம் காதலர் இன்று பலருங் காண விட்டுச் சென்றபின், பழிச் சொல்லுக்கு நாணுதல் கூடாது. யாம் விரும்புகின்ற அலரை இவ்வூரார் எடுத்துக் கூறுகின்றனர். அதனால் இனிக் காதலர் விரும்பினால் விரும்பியவாறு அதனை உதவுவர்.

கககூ. பிரிவாற்றுமை

'நீ எம்மை விட்டுப் பிரியாமல் இங்கிருப்பதானுல் எனக்குச் சொல். பிரிந்து வருகின்ற வரவை நீ வருகின்ற காலம் வரை உயிர் வைத்திருப்பார்க்குச் சொல்வாயாக. முன்பு, நமக்கு இன்பமுடையதாக இருந்தது. இப்போது பிரிவாரென்ற அச்சத்தால் துன்பமாக இருக்கின்றது.

பிரியேனென்ற சொல்லும், பிரிந்தால் நாம் வாழே மென்ற தன்மையும் அறிந்தாரிடத்தும் ஒரோவொருகால் பிரிவுண்டாகலான், அவர் சொல்வதில் நமக்குத் தெளிவு பிறப்பதற்கில்லை. தலையன்பு செய்து அஞ்சாதே யென்று கூறிய தலைவர், நம்மை விட்டுப்பிரிவாராயின் அவர் சொல்லை நம்பியிருந்த நம்மிடத்தில் குற்றமில்லை.

ஏ, தோழி! என் உயிரைப் போக விடாமல் காக்கக் கூடியவளானுல் எம் காதலர் பிரிந்து செல்லாவாறு செய்க. அவர் பிரிவாரானுல் பின்பு அவரைக் கூடுதல் அருமை யாகும். அவர் நம்மிடம் பிரிவுரைக்கும் இரக்க மற்றவரா னுல் அவர் நமக்கு நம் ஆற்றுமை யறிந்து அன்பு செய் வார் என்னும் ஆசை அருமையாகும். முன் கையின் இறையை விட்டுக் கழலா நின்ற வளையல்கள், துறைவன் நம்மைப் பிரிந்ததைக் கண்டு அறிந்து வெளிப்படுத்தமாட் டாவோ? அவர் சொல்ல நீ வந்து கூறினுல்தான் தெரியு மென்று கருதுகின்றுயோ? அறிந்தார் இல்லாத ஊரிலி ருந்து வாழ்தல் துன்பமாகும். அதைப் பார்க்கினும் நம் இனிய காதலரைப் பிரிந்து வாழ்தல் துன்பமாகும்.

தீயானது தொட்டால் சுடுவதல்லாது, காமத் துன் பத்தைப் போல விட்டால் சுடுமோ? சுடாது. பிரிவு என்று கூறியதைக் கேட்டுப் பொறுத்து, அவ்வாறு பிரிந்தால் அதனுல் வரும் துன்பத்தை நீக்கியிருந்து வாழ்கின்றவர் பலருண்டு. (யான் அவ்வாறு ஆற்றியிருந்து வாழ முடி யாதவளா யிருக்கின்றேன்.)

கக௭. படர் மெலிந்திரங்கல்

என் காம நோயை வேறொருவர் அறிதற்கு நாணி மறைத்தேன்; அது நீர் இறைப்பார்க்கு மேலும் மேலும் ஊறி வருவது போல் மிகுகின்றது. இந் நோயை அயலார் அறியாமல் மறைக்கவும் முடியாமல் நின்றேன்; இந்த நோயைச் செய்தவர்க்குச் சொல்லித் தீர்க்க எண்ணினாலும் எனக்கு நாணமாக இருக்கின்றது.

காம நோயும் நாணமுமாகிய இரண்டும் என் உடம்பி னிடத்து உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு தொங்குகின்றன. எனக்கு வருகின்றது காமமாகிய கடலே; அதைக் கடக்கும் காவலாகிய தெப்பமோ இல்லையே (என் செய்வேன்;) இன்பந்தரும் நட்புக் காலத் தில் துன்பம் வரச் செய்யும் எங் காதலர், பகைமைக் காலத்தே என்ன செய்யமாட்டார்?

காமமாவது கடல்போல் அளவிடப் படாததாக இருக்கின்றது. இனி, அதுவே பிரிவால் துன்பந் தரும் போது அக் கடலினும் பெரிதாக இருக்கின்றது. காம மென்னும் கடுமையுடைய கடலைக் கடந்தும் அதன் கரை யைக் காணேனாயினேன். யாமத்து நான் மட்டும் தனித் திருந்து துன்பமுறுகின்றேன்; இவ்விரவு நேரம் என்பால் அன்புடையதாக இருக்கின்றது; அஃது உலகிலுள்ள உயிர்களையெல்லாம் தூங்கச் செய்து என்னை விட்டுப் பிரியாமல் இருக்கின்றது.

நெடுநேரம் உடையனவாய்க் கழிகின்ற இவ் விராப் பொழுதுகள், அக் கொடியாரினும் கொடுமை செய்கின்றன. என் மனம்போலக் காதலர் வாழும் இடத்திற்கு விரைவிற் செல்லப் பழகியிருந்தால், என் கண்கள் இங்ஙனம் கண்ணீரில் நீந்திக் கிடக்கமாட்டா.

ககஅ. கண்விதுப்பழிதல்

இக்காம நோயானது, என் கண்கள் அவரைக் கண்டதால் விளைந்தது; இன்று இக்கண்கள் அவரைக் காண வேண்டுமென்று அழுவது என்ன காரணமோ? மேல் வருவதை முன்பே ஆராயாது, காதலரைப் பார்த்து நின்ற கண்கள் 'நம்மால் தானே இத்துன்பம் வந்தது' எனக் கருதாது துன்பப்படுவது என்னவோ? அன்று விரைவில் தாமே நோக்கி இன்று அழுகின்ற செயல், சிரிக்கத்தக்கது.

கண்கள், அன்று யான் உய்யமாட்டாமைக்கு ஏதுவாய ஒழிவில்லாத நோயை என்னிடத்தேயே நிறுத்தித் தாமும் அழமாட்டாதவாறு நீர்வற்றிவிட்டன. காம நோயைச் செய்த என் கண்கள், அத்தீவினையால் தாமும் தூங்காவாய்த் துன்பத்தாலும் வருந்துகின்றன. தாமும் தூங்காது அழும்படி நேர்ந்தது மிகவும் பொருத்தமானதே! விரும்பி உள்நெகிழ்ந்து அன்று அவரைக் கண்ட கண்கள், இன்று தூங்காது வருந்துதலாகிய துன்பத்தையடைந்து தம்மிடத்துள்ள நீர் முழுமையும் அற்றுப் போவதாக.

நெஞ்சத்தால் விரும்பாமல் சொல்லால் விரும்பியவர் தாம், இங்கேயிருக்கின்றார். அதனாற் பயனென்ன? அவரைக் கண்கள் காணாது அமைந்திருக்கவில்லை. காதலர் வாராதபோது அவர் 'வருவார் வருவார்' என்று எதிர்பார்த்துத் தூங்கமாட்டா; வந்தபோது அவர் பிரிவாரே என்றெண்ணித் தூங்கமாட்டா; ஆகலான், அவ்வீரிடத்தும் எம் கண்கள் மிகத் துன்பத்தை அடைந்தன.

அறையப்படும் பறையைப் போல் துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களையுடைய எம்மைப் போன்றவரிடத்தில் தம் நெஞ்சினுளடக்கிய மறைபொருளான செய்திகளை அறிதல், இவ்வூரிலுள்ளார்க்கு மிக எளியதாகும்.

கககூ. பசப்புறு பருவரல்

என்மேற் காதல் கொண்டுள்ள என் காதலர் பிரிவுக்கு உடன்பட்ட யான், அப்பிரிவை ஆற்றுமல் இப்போது நிறம் வேறுபட்டிருக்கிற தன்மையை நான் யாருக்குச் சொல்லுவேன்? அக்காதலர் தன்னை உண்டாக்கினர் என்னும் செருக்கினால் இந்தப் பசலை நிறம் என் மேனி இடமெல்லாம் ஏறி ஊர்ந்து பரவி வருகின்றது. அவர் பிரிகின்ற போதே என் சாயலையும் நாணத்தையும் அவர் எடுத்துக் கொண்டு அதற்குக் கைம்மாருகக் காமநோயையும் பசலையையும் கொடுத்துவிட்டார்.

நான் அவரையே நினைப்பேன்; வாயாற் கூறுவன அவர் நற்குணங்களையே; அவ்வாறு நான் செய்து வந்தும் பசப்பு நோய் வந்தது வஞ்சமோ? வேறு வகைதானே? அறிகிலேன். அதோ பார் எம்முடைய காதலர் பிரிந்து செல்கின்றார். இதோ பார் என் மேனியில் பசலை வந்து படரா நின்றது. விளக்கின் மறைவு பார்த்து நெருங்கி வரும் இருளே போல், பசலை நோயானது கொழுநனது பிரிவுபார்த்துக் காத்து நிற்கும். முன் நான் காதலரோடு சேர்ந்திருந்தேன்; யான் அறியாமல் சிறிது விலகியிருந்தேன். அந்த அளவிலேயே அள்ளிக் கொள்ளும் அளவாகப் பசலை என் மேனியெல்லாம் படர்ந்தது.

உலகோர், 'இவள் நிறம் வேறுபட்டுவிட்டாள்' என்று என்னைப் பார்த்தே சொல்லுவதல்லாது 'இவளை அவர் துறந்தார்' என்று பழி கூறுவார் இல்லை. பிரிவுக்கு உடன்படச் செய்த காதலர், நல்நிலையுடையர் என்றால், என் மேனி உள்ளபடியே பசலை நிறம் அடைவதாக.

பிரிவுக்கு என்னை உடன்படச் செய்த என் காதலர் பிரிந்து வருத்தங் கொடுத்தலைப் பிறர்கூறிப் பழி தூற்றுமலிருப்பாராகுல், யான் பசலை யடைந்ததாகப் பெயரெடுத்தல் நல்லதே யாகும்.

கஉ0. தனிப்படர் மிகுதி

தாம் விரும்பும் காதலர் தம்மை விரும்புகின்ற பேறு பெற்றவர், காதல் வாழ்க்கையின் பயனாகிய விதையில்லாத கனியைப் பெற்றவராவர். தம்மை விரும்பிய காதலர், விரும்பப்பட்ட காதலிக்குச் செய்யும் தலையன்பு, உலகில் வாழ்வார்க்கு மழை பெய்ததை ஒத்ததாகும். தாம் விரும்புங் காதலரால் விரும்பப்படும் மகளிர்க்கு நாம் நன்கு வாழ்வே மென்னும் பெருமித முண்டாகும்.

தாம் விரும்பும் காதலரால் விரும்பப்படா விட்டால் எல்லோராலும் விரும்பப்படுவாரும் நன்மையுடையவரா கார். நாம் காதல் கொண்ட காதலர், நம்மிடம் காதல் கொள்ளாவிட்டால் நமக்கு அவர் என்ன நன்மை செய்வோ ராவர்? ஆடவர்க்கோ அன்றிப் பெண்ணுக்கோ காதல் இருந்தால் அது, துன்பமே தருவதாகும்.

காவடிப் பாரம்போல இருவரிடத்தும் ஒத்த அன்பிருந்தால்தான் இன்பமாகும். காமனானவன் ஒரு தலைச் சார்பாக ஒருவரிடத்தே நின்று தன் தொழிலைச் செய்தலால் என்னுடைய பசப்பால் வரும் துன்பத்தையும் தனித்திருத்தலின் கொடுமையையும் அறியான் போல் இருக்கின்றது! தம்மால் விரும்பப்பட்ட காதலரின் இன் சொல்லைப் பெறாமல் உலகத்தில் வாழ்வோரைப் போல வன்கண்மையுடையார் உலகத்தில் இல்லை.

என்னால் விரும்பப்பட்ட காதலர், என்பால் அன்பில் லாரா யிருந்த போதிலும் அவரைப் பற்றிய புகழைக் கேட்பதும் என் செவிக்கு இன்பமாக இருக்கின்றது. என் நெஞ்சே! நின்னோடு அன்புறாத காதலர்க்கு நீயடைந்த துன்பத்தைக் கூறுகின்றாய்; கூறிப் பயனில்லையே! உனக் குத் துன்பஞ் செய்கின்ற கடலைச் சினந்துகொள்; அத னால் பயனுண்டு; வாழ்வாயாக.

கஉக. நினைந்தவர் புலம்பல்

முன் அனுபவித்த இன்பத்தை இன்று நினைத்தாலும் அஃது இன்பத்தைத் தருதலால் உண்ணுதபோது களிப்பூட்டாத கள்ளைப்பார்க்கினும் காமம் இன்பமுடையது. தாம் விரும்புகின்ற காதலரை நினைத்தாலும் பிரிவால் வரக்கூடிய துன்பம் தோன்ருது; ஆதலால், காமம் எந்தத் தன்மையிலும் இன்பமுடையதே யாகும்.

எம் காதலர் என்னை நினைப்பவர் போல நினைக்கா திருக்கின்ருரோ? எனக்குத் தும்மல் வருவது போன்று வாராமல் நின்று விடுகின்றதே! எம் காதலர் எம் நெஞ்சத்து எப்போதும் இடைவிடாமல் இருக்கின்ருர்; யாமும் அவர் நெஞ்சத்து இருப்பேமோ? இருக்க மாட்டேமோ? தெரியவில்லையே! அவர் நெஞ்சில் நாம் இல்லாமற் கட்டுப்படுத்தியவர் எம் நெஞ்சில் ஓவாது வந்திருப்பது நாணமாகத் தோன்ருதோ?

யான் முன் அவரோடு கூடிவாழ்ந்த இன்பநாட்களை நினைந்து இருக்கின்றேனுதலால், உயிர் வாழ்கின்றேன்; அதை நினையா விட்டால் நான் எப்படி உயிர் வாழ்வேன்? நான் இவ்வாறு அவ்வின்பத்தை மறவாமல் இன்று நினைந்திருந்துங் கூடப் பிரிவுத் துன்பம் என் மனத்தைச் சுடுகின்றதே! இவ்வாறு பிரிவாற்ருத யான் மறப்பேனுல் இறவாமல் எவ்வாறு நான் வாழ்வேன்!

நாம் அவரை எவ்வளவு நாட்கள் இடைவிடாது நினைந்தாலும் சினங்கொள்ளார்; ஆதலாற் காதலர் எமக்குச் செய்யும் சிறப்பு, அஃதொன்று தானே! முன்பு நான் வேறு, நீவேறல்லவென்று சொல்லும் எம் காதலரின் அருளற்ற தன்மையை எண்ணி, என் இனிய உயிர், நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது! ஏ, நிலவே! என் நெஞ்சில் மாருதிருந்து இப்போது என்னைத் தனியே விட்டுச் சென்றிருப்பாரை என் கண்ணுல் தேடிக் காணுமாறு நீ மறைந்து போகாமல் இருப்பாயாக.

கஉ௨. கனவுநிலை யுரைத்தல்

யான் வருத்த முறுதலைத் தெரிந்து, அது தீர்வதற் காகக் காதலர் விட்ட தூதோடு வந்த இக் கனவிற்கு என்ன விருந்து செய்வேன்! தூங்காது வருந்துகின்ற என் கண்கள் ஒருகால் தூங்குமாயின் கனவில் காதலரைக் காண்பேன்! கண்டு அவர்க்கு யான் செய்த செயல்களின் தன்மையை விரித்துச் சொல்வேன்! விழித்திருக்குங்கால் வந்து அன்பு செய்யாத எங்காதலரைக் கனவிற்கண்டு களித்தலினால் என் உயிர் இறவாமலிருக்கின்றது.

விழித்திருக்குங்கால் அன்பு செய்யாத காதலரைக் கனவானது தேடிக் கொண்டு வந்து எனக்குத் தருவதால் அக்கனவிலேதான் எனக்கு இன்பம் பிறக்கின்றது. முன்பு காதலரை நனவிற் கண்டு நுகர்ந்தபோது இன்ப மாக இருந்தது; இதுகாலைக் கனவிற் கண்டு நுகர்ந்த இன்பமும் எனக்கு இனிமையாக இருக்கின்றது. ஆதலால் நனவு ஒன்றில்லையானால் என்னை விட்டுப் பிரிந்து போகார் காதலர்.

நனவுப்பொழுதில் ஒரு நாளாவது வந்து தலையன்பு செய்யாத கொடியவர், நாள் தவறாமல் கனவில் வந்து எம்மை வருத்துவது என்ன தன்மையோ? எம் காதலர் நான் தூங்கும்போது என் தோள்மேல் இருக்கின்றார்! அப்போதே யான் விழித்துக் கொண்டால் விரைவில் என் நெஞ்சில் புகுந்து விடுகின்றார்! (ஆதலால் எம் காதலர் எவ்வளவு நுண்ணியர்?)

கனவில் தம் காதலர் வரக்காணாத மகளிர், நனவின் கண் வந்து அன்பு செய்யாத தம் காதலரை அவர் வாராத காரணம் பற்றி அன்பில்லாதவரென வெறுத்துப் பேசுவர்; இவ்வூரில் வாழ்வோர் நனவில் நம்மை விட்டு நீங்கினா ரென்று பழித்துரைக்கின்றனரே! அவர்கள் அவரைக் கனவிற் காண்பதில்லையோ? (கண்டால் இவ்வாறு பழிதூற்றா ரன்றே?)

கஉ௲. பொழுதுகண்டிரங்கல்

மாலைப்பொழுதே! நீ முன்பு வந்த மாலைதானோ? காதலரைப் பிரிந்த பெண்களின் உயிரைப் போக்குகின்ற முடிவுக் காலமென்றே கருதுகின்றேன். நீயும் மெலிவுறுகின்றாய்! எம் காதலரைப் போல உன் துணையும் இரக்கமில்லாததுவோ? சொல்வாயாக!

நான் காதலரோடு கூடியிருந்த நாளெல்லாம் உயிர்க்கு இன்பம் தந்தது. காதலரில்லாத காலத்துக் கொல்லுகின்ற கொலைக் களத்தில் கொலையாளி வருவது போல மாலைப் பொழுதானது எம் உயிரைக் கொள்ளவே வருகின்றது.

எம் காதலரோடு நான் கலந்திருந்து வாழ்ந்த காலத்தில் காலைப் பொழுதும் மாலைப் பொழுதும் இன்பமாக இருந்தன; ஆனால், இன்று பார்க்கும்பொழுது மாலைப் பொழுதே எனக்குத் துன்பஞ் செய்கின்றது! ஆதலால், நான் காலைப் பொழுதுக்குச் செய்த நன்மையென்ன? மாலைப் பொழுதுக்குச் செய்த கெடுதல் என்ன? ஒன்றுமில்லையே!

காதலர் பிரியாது என்னுடன் சேர்ந்திருக்குங் காலத்தில் இம் மாலைப்போது துன்பஞ் செய்தலை அறியேன் இக்காம நோயோ காலையில் அரும்பாகத் தோன்றிப் பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் வளர்ந்து மாலையில் பூவாக மலர்கின்றது. இடையன் ஊதுகின்ற புல்லாங்குழலொலியானது நெருப்புப் போல் வருத்துகின்ற மாலை நேரத்துக்குத் தூதாகக் கொல்லும் படைக்கலமாக வருகின்றது. அறிவு மயங்கும் இம் மாலைப்பொழுது வரும்போது இவ் வூரும் மயக்கமடைந்து துன்புறும்.

பிரிவுத் துன்பத்தால் இறவாமல் இருக்கின்ற என்னுயிர், பிரிந்து சென்றுரை யெண்ணி மயங்கும் இம் மாலைப் போதில் மாய்கின்றது! என்ன செய்வேன்?

கஉரு. உறுப்புநலன் அழிதல்

எம் காதலர் இத்துன்பத்தை எமக்கு வரவிட்டார்; அவர், நெடுந் தொலேயிலுள்ள நாட்டிற்குச் சென்ருர்; அவரை நினைந்து எம் கண்கள் அழுது தம் அழகு குன்றி நல்ல மலர்களுக்கு நாணி விட்டன. பசலே நிறம் பெற்று நீர் சொரிகின்ற எம் கண்களோ காதலர் நமக்கு அன்பு செய்யாத நிலையை எல்லோர்க்கும் சொல்வனபோலும்.

எம் காதலர், என்னைக் கூடியிருந்த காலத்தில் மகிழ்ந்து பூரிப்பு எய்திய தோள்கள் இன்று அவர் பிரிவை வெளிப்படுத்துவன போல் மெலிவடைந்துள்ளன; அத்தோள்கள் தம் பெருமை குறைந்து மெலிந்தமையால் வளையல்கள் தாமே கழன்று வீழ்வ வாயின. வளையலோடு பழைய அழகும் இழந்துள்ள தோள்கள், கொடிய காதலரின் கொடுமையை உரைப்பன போல் காணப்படுகின்றன.

எம் தோள்கள் தாம் அணிந்த வளையலோடு மெலியக் கண்டோர் காதலரைக் கொடியவர் என்று கூறுதலைக் கேட்டு வருந்துகின்றேன். என் நெஞ்சே! கொடிய காதலர்க்கு என்னுடைய வாடுகின்ற தோட்களின் ஆரவாரத்தை உரைத்துப், பெருமையடைய வல்லேயோ (இதுவரை தலைவிகூற்று; மேல் வருவன தலைவன் கூற்று.)

அன்பனே! ஒருநாள் என் காதலியின் தழுவிய கைகளை அவை வருந்துமே யென்று கருதி மெல்ல எடுத்தேன்; அவ்வளவே; அதற்குள் அவள் நெற்றி வேறுநிறம் அடைந்தது. எவ்வளவு பேரன்பு! தோழ! விரைவிற் செல்ல வேண்டும்; மற்றொரு நாள் தழுவிய காலத்தில் இடையில் சிறிது காற்று நுழைய எங்கள் உடல் இடங் கொடுத்தது. உடனே என் காதலி கண்கள், வேறு நிறங் கொண்டு மிளிர்ந்தன; என்னே! அன்பின் உயர்வு! ஆகவே அவள் நம்மைப் பிரிந்து வாழ்வது அவட்கு மிகத் துன்பமாகத் தோன்றும்; யாம் விரைந்து செல்ல வேண்டும்.

கஉ௫. நெஞ்சொடு கிளத்தல்

என் நெஞ்சே! காதல் நோயைத் தீர்க்கின்ற மருந்து ஒன்றினை எனக்குச் சொல்லமாட்டாயோ? அவரோ நம்மிடம் காதல் இல்லாதவரா யிருக்கின்றார். நீ மட்டும் அவரை நினைந்து வருந்துவது உன் அறியாமையே! நெஞ்சே! நீ அவரை நினைந்து வருந்துவது ஏன்? நமக்கு இந்நோய் தந்தவர்க்கு நினைக்குந் தன்மை இல்லையே!

என் நெஞ்சே! நீ அவரிடத்தேயே செல்கின்றாய்; எம் கண்கள் காண்பதற்குப் பிடுங்கித் தின்னுகின்றன. கண்களையும் உன்னுடன் அழைத்துப் போவாயாக. நெஞ்சே! எம்மை நாடாத அவர், நம்மை வெறுத்து விட்டார் என்று எண்ணிக் கைவிட முடியுமோ? இல்லையே!

நெஞ்சே! ஊடிய வெறுப்பைக் கூடி நீக்கி விடுகின்ற காதலரைக் கண்டபோது பிணங்க மாட்டாய்! பொய்யாகக் காய்கின்றாய்!

நெஞ்சே! நீ காதலர்பால் கொண்டுள்ள காதலை விட்டுவிடு; அல்லது நாணத்தையேனும் நீக்கிவிடு; இவை இரண்டையும் விட்டு விடாமல் இருந்தால் என்னால் அவரால் வரும் துன்பங்களைத் தாங்க முடியாது.

நெஞ்சே! நம் வருத்தம் அறிந்தும் சென்றவர் பின்னேயே செல்கின்றாய்! இனியேனும் இரக்கப்பட்டு நலஞ் செய்யமாட்டாரோ என்று கருதுகின்றாய் போலும்! இஃது உன் அறியாமையே! அவரோ புறம்பாக வேறிடத்து இல்லை! உன் உள்ளத்தில் உள்ளவராகவே யிருக்கும்போது நீ அவரை நினைத்து யாரிடம் தேடிச் செல்லுகின்றாய். நம்மோடு சார்ந்திருக்காமல் கைவிட்டுச் சென்ற காதலரை நெஞ்சத்திலேயே மறவாது கொண்டிருக்கும் போதும் இன்னும் மெலிந்து அழகை யிழந்து வருகின்றோம்.

௧௨௬. நிறையழிதல்

நாணமென்னும் தாழ்ப்பாள் இட்ட மனஉறுதியென்னும் கதவைக், காதலென்னும் குந்தாலி உடைத்தெறிகின்றது. அதனால் இனி, நிறைகொண்டு என்னால் நிற்க முடியாது. ஏனென்றால் கண்ணோட்டமற்ற அக் காமம், எல்லோரும் தூங்கும் நடு இரவிலும் என் நெஞ்சத்தை வருத்தி வேலை வாங்குகின்றது. யானோ அக்காம உணர்ச்சியை மறைத்துப் பார்க்கின்றேன்; என் கருத்துக்கு ஒப்ப வாராமல் அது தும்மல் போல் வெளியே தோன்றி விடுகின்றதே! என் செய்வேன்!

நான் மிக்க மனஅடக்க முடையேன் என்று அடக்கமாக இருந்தேன்; என் காதல் நோயோ அம்மறைப்பைக் கடந்து வெளிப்பட்டு நிற்கின்றது. எனவே புறக்கணித்துச் சென்ற காதலர் பின்சென்று ஓடாத பெருந்தகுதி காம நோயுற்றவர் அறியும் தன்மையன்று! என்னிடம் வந்துற்ற இத்துன்பம் என்னை விரும்பாதவர் பின் சென்று இரக்குந் தன்மையுடையதாக இருக்கின்றது. அவ்வாறானால் எவ்வளவு துன்புடையது!

நம் காதலர் அன்பால் நாம் விரும்புவனவற்றைச் செய்வாரானால் நாணமென்ப தொன்றையே அறியாமலிருப்போம். பல மாயத் தொழில் கற்ற திருடர் எம் காதலர்; அவருடைய பணிந்த மென்மொழிகள், நம் பெண்மையியல்பைத் தகர்க்கும் கருவிகள். ஆதலால் அவர் வந்தபோது ஊடுவேமென்று எண்ணிச் சென்றேன்; ஆனால் என் நெஞ்சம் என்னை விட்டு அவரைக் கூடுவதைக் கண்டு அவரைத் தழுவினேன்.

ஆதலால், காதலரைச் சார்ந்து ஊடி நிற்போமென்று கருதுந் தன்மை, கொழுப்பைத் தீயிலிட்டாற் போல் உருகுந் தன்மையுடைய அன்பு கொண்ட நெஞ்சினையுடைய எம்போன்ற பெண் மக்கட்கு வருமோ? வாராது.

கஉஎ. அவர்வயின் விதும்பல்

என் கண்கள், எம் காதலர் வருவார் வருவார் என வழியைப் பார்த்துப் பார்த்துத் தம் ஒளிமழுங்கிவிட்டன; அவர் சென்ற நாட்களைக் கோடுகிழித்து எண்ணி எண்ணி என் விரல்கள் தேய்ந்துவிட்டன. தோழீ! என் காதலரை மறப்பேனுனல் என் தோள்கள் மெலிந்து வளையல்கள் கழல்வனவாம். ஊக்கமே தமக்கு உற்ற துணையாகக் கொண்டு பிரிந்த நம்காதலர் வருகையை விரும்பி இன்னும் உயிர் வாழ்கின்றேன்.

நம்மைப் பிரிந்துசென்ற காதலரின் வரவை எதிர் பார்த்து, என் நெஞ்சம் மேலும் மேலும் கிளர்ச்சிகொண்டு நிற்கின்றது. என் காதலரை ஒருநாள் காண்பேனுக; கண்குளிரக் கண்ட பின்னரே என் தோளில் உண்டான பசப்பு நிறம் மாறும். வாராத காதலர், ஒருநாள் என்னிடம் வருக. அன்று இந் நோய்களெல்லாம் தொலைய இன்பப் பேரமிழ்தை நான் உண்பேனுக.

என் கண்ணையொத்த காதலர் வருவாராயின் ஊடி நிற்பேனே? அவருடன் கூடி இன்புறுவேனே? அல்லது அவ் விரண்டுமே கலந்து செய்வேனே, இன்னது செய்வ தென்று என் மனம் தெளிவுபட வில்லையே! (இவை, தலைவி கூற்றுக்கள்; மேல் வருவன தலைவன் கூற்றுக்கள்.)

பாங்க! நம் அரசன் போர்செய்து வெல்வானுக! அதன்பின் யாம் மனைவியோடு சேர்ந்திருந்து மாலைப் பொழுதிற்கு விருந்தாற்றுவோமாக. காதலர் திரும்பி வரும் நாளை நினைத்து ஏக்கங் கொள்ளும் மகளிர்க்கு ஒரு நாள் ஏழுநாள்போலக் கழியும். மனம் உடைந்து போனுல் நம்மைத் திரும்பப் பெறுவதானுல் என்ன? பெற்று விட்டால் என்ன! பொருந்தினுல்தான் என்ன? ஒன்றுலும் பயனில்லையே!

கஉ அ. குறிப்பறிவுறுத்தல்

நீ சொல்லாமல் மறைத்தாலும் உன் கண்கள் எனக்குக் கூறத்தக்க செய்தி ஒன்று இருக்கின்றது; கண்ணிறைந்த அழகும் மூங்கில் போன்ற தோளும் உடைய என் காதலிக்குப் பெண்மை இயல்பு நிறைந்து விளங்குகின்றது பளிங்கு மணியில் கோத்தநூல் புறத்துத் தோன்றுதல்போல எம் காதலியின் அழகினுள் ஒன்று தோன்றுகின்றது. அதன் தன்மையை யான் அறிகின்றிலேன்!

மலருமுன் பூவினுள் அடங்கியிருக்கும் மணம்போல் என் காதலி நகைக்கும் நகைப்பில் ஒரு குறிப்பு இருக்கின்றது. என் காதலி என்னைவிட்டு நீங்கிய குறிப்பில் என் துன்பத்தை நீக்கும் மருந்து அடங்கியிருக்கின்றது. பெரிதும் அன்பு செய்து விரும்புமாறு கூடுதல் அரிதாகிய பிரிவைச் செய்து பின் அன்பில்லாமல் கைவிட எண்ணுகின்ற குறிப்பை உடையதாகும்.

குளிர்ந்த துறையையுடைய காதலன் பிரிந்த பிரிவை நம்மைக் காட்டினும் முன்னரே நம்முடைய வளையல்கள் உணர்ந்து கழன்று காட்டி விட்டனவே! நேற்றுத்தான் காதலர் நம்மை விட்டுப் பிரிந்தார்; அதற்குள் ஏழு நாட்களுக்கு முன் பிரிந்த தன்மை போல என் மேனி வேறுபாடடைந்தது.

தலைவரே! நான் சென்று தலைவிபால் கூறினேன்; அவள் ஒன்றுங் கூறினளில்லை; தன் வளையலைப் பார்த்தாள்; பின் தன் மெல்லிய தோள்களைப் பார்த்தாள்; அப்பால் அவள் தன் கால்களைப் பார்த்தாள். இவ்வளவே அவள் செய்த செயல்கள்! அறிக. தோழி! தனக்குற்ற காதல் நோய்த் துன்பத்தை வாயாற் சொல்லாமல் கண்ணினாற் சொல்லி இரந்து கேட்டல், பெண்கட்கேயுரிய இயற்கைத் தன்மைக்கும் மேற்பட்ட பெண் தன்மையுடையது என்று கூறுவர்.

கஉகூ. புணர்ச்சி விதும்பல்

தோழீ! நினைத்தவுடன் களிப்பதும் கண்டால் மகிழ்வதுமாம் தன்மை கள்ளுக்கு இல்லை; ஆனால் காதலுக்கோ நினைத்தால் களிப்பும் கண்டால் மகிழ்வும் உண்டாகின்றது. பனையளவு பெரிதாகக் காதல் இருந்தால் தினையளவான ஊடலும் கொள்ளலாகாது. தமக்கு விருப்பமாவனவற்றையே செய்தொழுகினும் நம் காதலரைக் காணாமல் இருக்க நம் கண்கள் ஒருப்படுவதில்லை.

என் காதலரிடம் வெறுப்புக்காட்ட வேண்டுமென்றே நான் சென்றேன்; என் நெஞ்சமோ அதற்கு மாறாகக் கூடுவதிலேயே நாட்டங் கொண்டது. கண்ணுக்கு மையிடுங் காலத்தே நாம் எழுதுகோலைக் காண்பதில்லை; அது போலத் தலைவரைக் கண்டபோது அன்பு மேலிடுகின்றதே தவிர, அவர்பால் குற்றங் காண்பதற்கில்லை. அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் பாலுள்ள குற்றம் தோன்றவில்லை; அவரைக் காணாதபொழுதே அவரிடம் தவறுகளைக் காண்கின்றேன்.

தம்மை இழுத்துச் செல்லும் நீரில் அறிந்தும் விழுபவரைப்போல, நம் வெறுப்புப் பொய்யாவதைத் தெரிந்தும் வெறுப்புக் காட்டுகின்றேன்; இச்செயல் நிலைத்து நிற்குமோ? நிற்காதன்றே! 'எம் காதலரே பல துன்பங்களைக் கொடுப்பதாக இருந்த போதினும் கள்ளை உண்பவர், விடாது உண்பது போல, இன்பந் தருகின்றது!'

பூவினும் மிக மெல்லியது காதல் இன்பம். அவ்வின்பத்தை அறிந்துணர்ந்து இன்புறுவோர் ஒரு சிலரே ஆவர். ஒருகால் அவளைத் தழுவும் விருப்போடு அவள்பாற் சென்றேன். ஊடினள் ஆயினும் என்னினும் முந்து வந்து கூடினள். அன்பின் திறம் எத்தகைத்து! எத்தகைத்து!

கங௦. நெஞ்சொடு புலத்தல்

என் நெஞ்சமே! அவரவர் நெஞ்சம் அவரவர்கட்கே உரிமையுடையது; அப்படியிருந்தும் நீ எனக்கு ஆகாத தென்னவோ? நம்பால் காதலர் அன்பிலர்; என்பதை அறிந்தும் அவர்பாற் செல்கின்றாய்! அவர் வெறுக்கார் என்பது உன் கருத்தா?

நெஞ்சே! கெட்டார்க்கு யாரும் உறவில்லையென்று அவரிடமே சென்று உறவாடுகின்றாய்! காதலரோடு வெறுப்புக்காட்டிப் பின் இன்பந் துய்ப்பதை நீ நினையாய்! இனி அதைப்பற்றி எண்ணிக் கூறுவோர் ஒருவருமில்லை.

தோழீ! என் நெஞ்சு என் காதலரைக் காணக் கூடாத நிலைக்கு அஞ்சுகின்றது! கூடப்பெற்றால் பின் அவர் பிரிவாரேயென்று அஞ்சுகின்றது! ஆதலால் இன்பத்தோடு கூடியிருப்பதாக இல்லை? நான்மட்டும் தனித்து இருந்து தலைவர் கொடுமையை எண்ணிப் பார்த்தால், என் நெஞ்சம் என்னைத் தின்பதுபோலத் தோன்றுகின்றது!

காதலரை மறக்க அறியாத பேதைமை கொண்ட நெஞ்சுடன் கூடியதால் என் உயிரினுஞ் சிறந்த வெட்கத்தையும் மறக்கலானேன்! உயிரிடத்துப் பற்று நீங்காத என் நெஞ்சம் அவருடைய நல்ல செயல்களையே விடாமல் நினைக்கின்றது. அவரவர்க்குரிய அவர் அவர் நெஞ்சமே உற்றதுணையாக அமையா விட்டால் ஒருவர்க்குத் துன்பம் வந்தபோது வேறு யார் உதவி செய்வர்? தம்முடைய நெஞ்சமே ஒருவர்க்குத் துணையாக அமையாதபோது வேறொருவர் உதவியாக அமைவது அவ்வளவு எளிதாக ஆகக் கூடியதல்ல.

கநக. புலவி

தோழியே! நம் தலைவருடன் கூடாதிருந்து பிணங்குவாயாக! அதனால் அவர் படும் வருத்தத்தைச் சிறிது காண்போம்! என்றாள். ஊடலுக்கும் ஓர் அளவு வேண்டும்! நாம் உண்பவைகளைச் சமைக்குங்கால் அளவுடன் உப்பிட்டால் அவை சுவை மிக்கனவாக இருக்கும். மிகினும் குறையினும் அவற்றின் சுவை மாறிவிடும். அது போலத்தான் என்பதை நீ அறிவாயாக என்றாள்.

தலைவ! வெறுப்புற்றிருக்குந் தலைவியைத் தழுவாதிருப்பது, வருத்தமுற்றிருப்பவர்க்கு மேலும் துன்பத்தைத் தருவதுபோல் கொடுமையானதாகும். ஊடிய மங்கையை ஊடலகற்றிக் கூடாதிருத்தல் நீரில்லாமல் வாடிய கொடியை வேரோடு அறுத்துவிட்டாற் போன்ற செயலாகும்.

காதலீ! நற்குணங்களான் மேம்பட்ட தலைவர்க்கு அழகென்பது, தம் காதலியின் நெஞ்சில் விளையும் ஊடலின் சிறப்பேயாகும். மிக்க வெறுப்பும், சிறிய வெறுப்பும் இல்லாவிட்டால் காமம், கனிந்த பழமும் இளங் காயும்போல் பயனற்றுப் போகும்.

கூடியிருக்கும் இன்பம், நீட்டிக்காதோ என்று எண்ணுவதால், ஊடியிருக்குங் காலத்தும் துன்பம் உளதாகின்றது. அவ் வருத்தத்தை உணர்கின்ற காதலர் இல்லாதபோது ஊடி வருந்துவதால் ஆகும் பயனென்ன? ஒன்றுமில்லையே! நீரும் நிழலுள்ள இடத்தே இன்பந் தருவது போல ஊடலும் தம்மை விரும்பிய காதலர் இடத்தேதான் இன்பந்தரும்.

ஊடல் கொண்டபோது உணர்த்தி மகிழ்ச்சி கொள்ள வைக்காமல் வாடவைப்பவருடன் என் நெஞ்சானது கூடியிருப்போமென்று முயற்சி செய்தற்குரிய காரணம், அதன் ஆவல் மிகுதியேயன்றி வேறல்ல.

கங உ. புலவி நுணுக்கம்

உன்னைப் பெண் தன்மையுடையார் எல்லோரும் கண்களால் பொதுவாக நுகர்கின்றனர்! அவருண்ட மிச்சில் போல்வதாகிய உன் மார்பை நான் தழுவேன்! என்றாள் தலைவி. ஊடி இருந்தேன் நான்; அதுகாலை எங் காதலர் தும்மினர். அவ்வூடல் நீங்கி நீடுவாழ்கவென்று கூறுவோமெனக் கருதிப்போலும்! என்றாள்.

யாம் கொம்பின்கட் பூத்த பலவகை மலர் மாலையைச் சூடினேம். அதுகண்ட எம் காதலி, 'நும்மாற் காதலிக் கப்பட்ட ஒருத்தியின் அழகைக் காட்டச் சூடினீ'ரென்று கூறிச் சினங் கொண்டாள்; யாரினும் யாம் காதலுடை யோம் என்றேனாக; நின் தோழி அதை உணராது நின்னாற் காதலிக்கப்பட்ட மகளிர் யார் யாரினும் என்பாற் காத லுடையராயினீர்?' என்று சொல்லி ஊடினாள்.

'இப்பிறப்பின்கண் பிரியேம்' என்று கூறினேனாக, அவள் மற்றப் பிறப்புக்களில் பிரிவேன் என்னும் குறிப் புடையனாகக் கருதிக் கண்ணிறைய நீர் பெருக அழுதாள். எப்போதும் மறவாது நினைந்தே'னென்றேனாக; மறந்தே பின் நினைந்திரென்று கூறினாள். நான் தும்மினேன்; அவள் முறையால் நீடு வாழ்க என வாழ்த்தினாள். பின்பு அதை மாற்றி 'நும்மை நினைக்கின்ற மகளிருள் எவரை நினைத்துத் தும்மினீ'ரென்று கூறி அழுதாள். எனக்கு மீண்டும் தும்மல் வந்தது; இதற்கஞ்சி அடக்கினேன்; 'நும் காதலிகள் நினைத்தலை எமக்குத் தெரியாது மறைக் கின்றீரோ?' எனக் கூறி அழுதாள்.

பணிந்து ஊடலை உணர்த்தினாலும் இவ்வாறு தானே நும் காதலியரைப் பணிவீர் என்று கூறிச் சினங் கொள்ளு வாள். அவள் உறுப்புக்களைக் கூர்ந்து பார்த்தேனாக, நும் காதல் பெண்டிரின் உறுப்புக்கட்கு ஒத்தனவா இல்லையா என்று கருதிப் பார்க்கின்றீர் போலும் என்று கூறிச் சினங் கொள்வாள். என்னே காதலி மனம்!

கஙௗ. ஊடல் உவகை

அவரிடம் தவறில்லையானாலும் அவர் அன்பு செய்கின்றவாறு நமக்கு ஊடல் விளைவிக்கின்றது. ஊடலில் தோன்றுகின்ற சிறு வெறுப்பினால் காதலரின் சிறந்த அன்பு வாடினாலும் பெருமையடையும். நிலமும் நீரும் ஒன்றுகலந்த காதலரிடத்து ஊடல்போல இன்பந்தரும் தேவருலகமும் உண்டோ?

காதலரைத் தழுவிக் கொண்டு பின் விடாதிருத்தற்குக் காரணமான புலவியினிடத்தே என் உள்ளத்தை உடைத்தெறிகின்ற படைக்கலம் இருக்கின்றது. ஆடவர் குற்றமற்றவர் ஆயினும் ஊடப்பட்டுத் தாம் விரும்பும் காதலியர் தோள்களைக் கூடிலரேனும் அஃது இன்பந் தரும்.

உண்பதினும் முன் உண்ட உணவு செரித்தல் இன்பந் தருவதாகும். அதுபோலப் புணர்தலினும் ஊடல் கொள்ளுதல் இன்பந் தருவதாகும். காமவின்பம் நுகர்தற்குரிய காதலர் இருவருள் ஊடலால் தோற்றுப் போனவர், வென்றோராவர். அதை, அப்போதுணராராயினும் பின் புணர்ச்சிக்கண் அறிந்தின்புறுவர்.

இப்போது இவள் நெற்றி வியர்க்குமாறு வந்த கலவியின்கண் உண்டாய இன்பத்தை, இன்னும் இவளோடு மற்றொரு கால் ஊடல் கொண்டு நாம் பெற வல்லோமோ? ஒளிபொருந்திய அணியிணையுடையாள் இன்னும் எம்மோடு ஊடல் கொள்வாளாக. அதனை உணர்த்துதற் பொருட்டாக யாம் இரந்து நிற்கும் காலம்வரை இவ்விரவு விடியாது நீட்டித்து நிற்பதாக.

காம நுகர்வுக்கு இன்பமாவது தம்முள் ஊடல் கொள்ளுதல் ஆம், அதனை அளவறிந்து நீங்கித் தம்முட் கூடுதல் அவ்வூடற்கு இன்பந் தருவதாம்.

ஓம்

திருவள்ளுவமாலை

கைம்மாறில்லாக் கவின்மறை

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும்—ஏனோருக்கு
ஊழின் உரைத்தார்க்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்றும் மற்று. (க)

முற்றுங்கற்றார் முழுப்புலவராவர்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். (உ)

ஒப்பில் ஒருமறை ஒண்மைத் திருக்குறள்

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். (௩)

கழகவழி வெளிவந்துள்ள

திருக்குறள் வெளியீடுகள்

திருக்குறள் பரிமேலழகர் உரை

	கலிக்காக்கட்டு	5
	பரிசுப் பதிப்பு	8
	ரெக்சைன்	10

திருக்குறள் பொழிப்புரை

—பேராசிரியர், கா. சு. பிள்ளையவர்கள்

	கலிக்கா	2
	பரிசுப் பதிப்பு	5

திருக்குறள் (தண்டபாணி விருத்தியுரை)

(அறத்துப்பால்) 3

திருக்குறள் தெளிவுரை

—டாக்டர். மு. வரதராசனார்

அட்டை 1 25	கலிக்கா	1
	பரிசுப் பதிப்பு	3

திருக்குறள் மூலம் $2 \times 1\frac{1}{2}$

	அட்டை 0 50	பரிசுப் பதிப்பு	2
,,	கிரவுன் $\frac{1}{64}$	அளவு கலிக்கா	0
,,	,,	பரிசுப் பதிப்பு	3
,,	,, $\frac{1}{32}$	அளவு ராப்பர்	0
		கலிக்கா	1

Tirukkural—with English translation by
Rev. Dr. G. U. Pope, J. Lazarus,
Rev. W. H. Drew, & Mr. F. W. Ellis. 8

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.